பக்கங்கள்: 20 விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 01 வள்ளுவர் ஆண்டு 2048 புரட்டாதி 07, சனிக்கிழமை 23.09.2017 கதிர் 321

குறைந்த செலவில் குடும்பமாக கனடாவில் குடியேற...
WINSTAR VISA CONSULTANTS
இல.106, தபாற்பெட்டிச் சந்தி, திருநெல்வேலி,யாழ்ப்பாணம்.
web: www.winstarjaffna.com
fb.winstar visa consultants
தொலைபேசி: 021 300 4641

### இடைக்கால அறிக்கையில்

# காணி, பொலிஸ் அதிகாரங்கள் கூட தெளிவாக இல்லை!

## சட்டத்தரணி குருபரன் விசனம்




யாழ்ப்பாணம், செப்ரெம்பர் 23

அரசமைப்பு உருவாக்கத்துக்கான வழிகாட்டல்குழு சமர்ப்பித்துள்ள இடைக்கால அறிக்கை தொடர்பான வரைவில் மாகாணங்களுக்கான காணி, பொலிஸ் அதிகாரங்கள் கூட தெளிவாக வரையறை செய்யப்படவில்லை என விசனத்துடன் சுட்டிக்காட்டியிருக்கின்றார் சிவில் சமூக அமையத்தின் ஊடகப் பேச்சாளரும் யாழ்.பல்கலைக்கழக சட்டப் பீடத் தலைவருமான சட்டத்தரணி கு.குருபரன். பக்கம் 18 >>>

# கமலஹாசன் தமிழக முதல்வரானால் ஈழத் தமிழர் குறித்து அதிக கவனம்

## அவரே கூறினார் என சிங்கள ஊடகம் தகவல்



கொழும்பு,செப்.23

இந்திய சினிமாவில் பல சிகரம் தொட்ட நடிகர் கமலஹாசன் அரசியல் நடவடிக்கையில் தாம் நேரடியாக ஈடுபடவுள்ளார் என உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளார்.

தமிழக முதலமைச்சராகத் தான் வெற்றிபெற்றால், இலங்கை மக்கள் தொடர்பிலும் அதிக கவனம் செலுத்தவுள்ளார் எனவும் கமலஹாசன் அறிவித்துள்ளார்.

விரைவில் அரசியல் கட்சி ஒன்றை ஆரம்பிப்பதன் மூலம் அடுத்து வரும் தமிழக முதல்வர் தேர்தலில் தாம் போட்டியிடவுள்ளார் எனவும் அவர் அறிவித்துள்ளார். பக்கம் 18 >>>

# குணசீலன் விவகாரத்தில் முடிவெடுக்க ரெலோ தலைமைக் குழு இன்று கூடுகிறது

யாழ்ப்பாணம்,செப்.23

ரெலோ கட்சியின் தலைமைக்குழுவின் முடிவுக்கு மாறாக அக் கட்சியைச் சேர்ந்த குணசீலன் வடக்குமாகாணசபையின் சுகாதார அமைச்சராகப் பதவியேற்ற விடயம் தொடர்பில் ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதா என்பது குறித்து ஆராய்வதற்காக அக் கட்சியின் தலைமைக் குழு இன்று பிற்பகல் 2 மணிக்கு வவுனியாவில் கூடுகின்றது.

ரெலோ சார்பாக வடக்கு மாகாணசபையின் அமைச்சர் பதவி கனகரத்தினம் விந்தனுக்கே வழங்கப்பட வேண்டும் என்றும் – பக்கம் 18 >>>

# மாத முடிவுடன் 3 மாகாணங்கள் ஆளுநர்களின் கீழ்!

கொழும்பு, செப்.23

இந்த மாத இறுதியோடு பதவிக் காலத்தை பூர்த்திசெய்யும் கிழக்கு மாகாண சபை, வட மத்திய மாகாண சபை, சப்ரகமுவ மாகாண சபை ஆகியவற்றின் நிர்வாகம் நேரடியாக அந்தந்த ஆளுநர் பக்கம் 18 >>>

# கொழும்பில் மணல் மழை



கொழும்பு,செப்.23

கொழும்பு, கோட்டையில் சில பகுதிகளில் நேற்று முற்பகல் மணல் மழை பெய்துள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன. கொழும்பிலுள்ள உலக வர்த்தக மையம் மற்றும் காலி முகத்திடலைச் சுற்றியுள்ள பிரதேசங்களிலேயே இவ்வாறு மணல் மழை பெய்துள்ளது.

காலை 9.30 மணிக்கும் 10.30 மணிக்கும் இடைப்பட்ட வேளையில் இந்த மழை பக்கம் 18 >>>

# நாடாளுமன்றத்துக்கு 70 வயது; ஒக்ரோபர் 3இல் விசேட அமர்வு

கொழும்பு,செப்.23

நாடாளுமன்றத்தில் விசேட அமர்வு எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் மூன்றாம் திகதி பிற்பகல் 3.30 மணி தொடக்கம் 4.30 மணிக்கு இடைப்பட்ட காலப் பகுதியில் இடம்பெறவுள்ளது.

இலங்கை நாடாளுமன்றத்துக்கு 70 ஆண்டுகள் நிறைவடைவதை முன்னிட்டு இந்த விசேட அமர்வு இடம்பெற இருப்பதாக சபாநாயகர் கரு ஜயசூரிய நேற்று வெள்ளிக்கிழமை அறிவித்தார்.

நாடாளுமன்ற அலுவல்கள் குழுவில் நேற்று முன்தினம் (வியாழக்கிழமை) இது தொடர்பான தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது. பக்கம் 18 >>>

# பொருத்து வீடுகள் விவகாரம் சுமந்திரன் மீண்டும் வழக்கு

கொழும்பு, செப்.23

வடக்கில் ஆறாயிரம் பொருத்துவீடுகள் அமைக்கும் விடயத்தில் உரிய கேள்விப்பத்திர முறைகள் பின்பற்றப்படவில்லை எனத் தெரிவித்து மீண்டும் நேற்று அடிப்படை உரிமை மீறல் மனு ஒன்றை உயர் பக்கம் 18 >>>

# சுமந்திரன் அமெ. பயணம்



கொழும்பு, செப். 23

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் இரண்டு வார காலப் பக்கம் 18 >>>

# அரசியல் காரணங்களுக்காக தேர்தல்களைத் தள்ளிப்போடாதீர்!

## தேர்தல் ஆணையாளர் விசனத்துடன் கூற்று

கொழும்பு, செப். 23

அரசியல்காரணிகளுக்காகத் தேர்தலைத் தள்ளிப்போட முயற்சிக்க வேண்டாம். மக்களின் ஜனநாயகத்தை உறுதிப்படுத்த நாடாளுமன்றத்தை பிரதிநிதித் துவப்படுத்தும் கட்சிகள்முன்வரவேண்டும். பக்கம் 18 >>>

# இராணுவ புலனாய்வுப் பிரிவுடன் செயற்பட்டாராம் ஞானசார தேரர்!

## நீதிமன்றில் அவரே வெளியிட்ட தகவல்



கொழும்பு, செப்.23

கடந்த காலத்தில் இலங்கை இராணுவத்தின் புலனாய்வுப் பிரிவுடன் தாம் நெருக்கமாகச் செயற்பட்டார் எனப் பொதுபலசேனா அமைப்பின் செயலாளர் வண. கலகொட அத்தே ஞானசாரதேரர் தெரிவித்துள்ளார்.

நீதிமன்றத்தை அவமதித்த குற்றச்சாட்டுக்காக ஞானசாரதேரருக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்று முன்தினம் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்தது. பக்கம் 18 >>>

# 13ஆவது திருத்தத்தை விட மேம்பட்டால் புதிய வரைவை ஈ.பி.டி.பி. வரவேற்கும்


## டக்ளஸ் சபையில் விளக்கம்



கொழும்பு,செப்.23

"தேசிய இனப்பிரச்சினைக்கான புதிய அரசமைப்பு, நாம் கடந்த 30 வருடங்களாகக்கோரிக்கை விடுத்துவரும் 13 ஆவது திருத்தச் சட்டத்தை விட மேம்பட்டதாக அமையுமாக இருந்தால் அதை வரவேற்போம்." – என்று ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா நேற்று முன்தினம் அரசமைப்புப்பேரவையில்தெரிவித்தார்.

தமிழ் மக்கள், தாம் இலங்கையர்களாகவும் தமிழர்களாகவும் வாழ்வதற்காக உணர்வுகளுடன் இருந்தமையை முன்னாள் தமிழ்த் தலைவர்களும் சிங்களத் தலைவர்களும் ஆரோக்கியமானதாக எடுத்துக்கொள்ளாததன் விளைவாகவே, எமது நாடு வெறுக்கத் பக்கம் 18 >>>



# வவுனியா புளியங்குளம் ஆரம்ப பாடசாலை கொட்டகைக்குள் மாணவர்கள் அவலநிலை!







வவுனியா, செப். 23

வவுனியா வடக்கு வலயத் திற்குட்பட்ட புளியங்குளம் ஆரம்ப பாடசாலையின் மாணவர்களது இணைப்பாட விதானச் செயற்பாட்டுக்கான கொட்டகை சிதைவடைந்து மாணவர்களால் பயன்படுத்த முடியாத நிலையில் காணப் படுகின்றது.

இந்தப் பாடசாலை புளி யங்குளம் இந்துக் கல்லூரி யில் இருந்து பிரிக்கப்பட்டு 2013 ஆம் ஆண்டு யூன் மாதம் 06 ஆம் திகதி ஆரம் பிக்கப்பட்டது. தரம் 1 முதல் 5வரையிலான இப் பாடசாலை யில் தற்போது 135 மாண வர்கள் கல்வி கற்கின்றனர்.

ஒரு கட்டடத்தில் சிறியதாக பிரிக்கப்பட்ட 5 வகுப்ப றைகளை மாத்திரம் கொண்ட தாகக் காணப்படும் இந்தப் பாடசாலையில் மாணவர் களின் இணைப்பாட விதானச் செயற்பாடுகள், மாணவர் மன்றம் உள்ளிட்ட தேவை களுக்காக ஒரு கொட்டகை அமைக்கப்ப ட்டிருந்தது. அது வேயப்பபடாது ஓட்டைகள் நிறைந்ததாகக் காற்றில் ஊச லாடிக் கொண்டிருக்கின்றது.

மாணவர்கள் இணைப்பாட விதானச் செயற்பாட்டுக்காக அக்கொட்டகைக்குள் வரு கின்றபோது அக் கொட்ட கைக்குள் இருந்து வானத்தைப் பார்க்கக் கூடியதாக இருக்கின் றது எனவும், மழை மற்றும் வெயில் என்பவற்றுக்கு மத்தி யிலேயே தமது இணைப்பாட விதானச் செயற்பாடுகளை மேற்கொள்ளவேண்டியிருகின் றது எனவும் மாணவர்கள் தெரி விக்கின்றனர்.

தற்போது மாரிகாலம் ஆரம் பித்துள்ளமையால் நேரடியாக அக் கொட்டகைக்குள் மழை நீர்வருவதனால் மாணவர்களது இணைப்பாட விதான ஆற் றல்களைமேலும்வளப்படுத்த முடியாது வெறும் புத்தக்கல் வியுடனேயே அவர்களை வீட்டுக்கு அனுப்ப வேண்டி யுள்ளதாகவும், இதனால் மாண வர்களது ஆற்றல் மழுங்கடிக் கக் கூடிய நிலை ஏற்பட்டுள் ளது எனவும் ஆசிரியர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, இப் பாடசா லையை அண்மித்தாக பூந் தோட்டம் நலன்புரி நிலை யத்தில் தங்கியிருந்த 83 குடும்பங்கள் குடியேற்றப் பட்டுள்ளமையால் அடுத்த வருடம் பாடசாலை ஆரம் பிக்கும் போது அந்தக் குடும் பங்களினது பிள்ளைகளும் இந்தப் பாடசாலையிலேயே கல்வியை தொடரவுள்ளதால் வகுப்பறைகளிலும் இடப் பற்றாக்குறை ஏற்பட வாய்ப் புள்ளது எனவும் அப்பாடசாலை ஆசிரியர்கள் தெரிவித்துள் ளனர். (க-100)

## முள்ளியவளையில் கிணற்றுக்குள் விழுந்தது யானை!



முல்லைத்தீவு, செப். 23

முள்ளியவளை - களிக்காடு 11ஆம் கட்டைப் பகுதியில் யானை ஒன்று கிணற் றுக்குள் தவறி விழுந்துள்ளது.

நேற்றுமுன்தினம் இரவு வேளையில் இந்த யானை கிணற்றுக்குள் விழுந்திருக் கலாம் என பொதுமக்கள் தெரிவித்துள்ளனர்.

களிக்காடு, கோடாலிக்கல்லு, குஞ்சுக் கோடாலிக்கல்லு பகுதிகளில் சுற்றித்திரிந்த அலியன் வகை யானையே இவ்வாறு கிணற்றுக்குள் விழுந்துள்ளது.

இந்த யானையை மீட்பதற்கான நடவ டிக்கையை வன ஜீவராசிகள் திணைக்களம் மேற்கொண்டு வருகின்றது.

## அடுத்த வருட இறுதிக்குள் தேர்தல் தவறினால் பதவியைத் துறப்பேன்!

கொழும்பு, செப். 23

உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலை அடுத்த வருடத்திற் குள் நடத்தாவிட்டால் தனது பதவியிலிருந்து விலகத் தீர்மா னித்திருக்கிறேன் என தேர்தல்கள் ஆணைக்குழுவின் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித் துள்ளார்.


உள்ளூராட்சிகள் திருத்தச் சட் டம் நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான் மையுடன் நிறைவேற்றப்பட்டது.

இந்த நிலையில் இரண்டு வருடகாலமாக இழுத்தடிக்கப் பட்டுவரும் இந்தத் தேர்தலை அடுத்த வருட முடிவிற்குள் நடத்தி முடிக்கா விட்டால் தாம் இராஜினாமா செய்வதாக தேர் தல்கள் ஆணையாளர் சிங்கள ஊடகமொன்றுக்கு நேற்றுத் தெரி வித்துள்ளார்.

ஆணையாளர் தேசப்பிரிய அதிரடி அறிவிப்பு



## கொழும்பில் கைக்குண்டுகள் மீட்பு!



கொழும்பு - கொம்பனித் தெரு, யூனியன் பிளேஸில் அரச நிறுவனமொன்றுக்கு சொந்தமான இடமொன்றில் இருந்து 3 கைக்குண்டுகள் மீட்கப்பட்டுள்ளன.

நேற்றுக் காலை இந்த கைக் குண்டுகள்மீட்கப்பட்டுள்ளன என பொலிஸார் தெரிவித் துள்ளனர்.

இவ்வாறு மீட்கப்பட்ட கைக்குண்டுகளை செயலி ழக்கச் செய்யும் பணிகள் தற் போது ஆரம்பிக்கப்பட்டுள் ளன எனத் தெரிவித்துள்ள பொலிஸார், அந்தப் பகுதிக்கு சிறப்பு பொலிஸ் பாதுகாப்பு வழங்கப் பட்டுள்ளதாகவும் குற்றவியல் விசாரணை அதி காரிகள் சம்பவ இடத்திற்கு வந் துள்ளனர் எனவும் தெரிவித்துள் ளமை குறிப்பிடத்தக்கது.

## கிளிநொச்சி பனை, தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கத்தின் பொதுச்சபைக் கூட்டம்!

கிளிநொச்சி பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் பொதுச் சபைக் கூட்டம் இன்று சனிக்கிழமை நடைபெறவுள்ளது என அந்த சங்கத்தின் பொதுமுகாமை யாளர் எஸ்.துரைசிங்கம் தெரி வித்துள்ளார்.

இந்தக் கூட்டம் கிளிநொச்சி பனை, தென்னை வள அபி விருத்திக் கூட்டுறவுச் சங் கத்தின் புதிய நிர்வாக சபை தெரிவிற்காக நடத்தப்பட வுள்ளது என்றும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கிளிநொச்சி பனை, தென் னை வள அபிவிருத்திக் கூட் டுறவுச் சங்கத்தின் தலைவர் கனகையா மதனரூபன் தலை மையில் இந்தக் கூட்டம் நடைபெறவுள்ளது.

இந்த பொதுச்சபைக்கூட்டம், ஏ9 வீதி, கரடிப்போக்குச் சந்தி, கிளிநொச்சியில் அமைந்துள்ள சங்கத்தின் பிரதான தலைமைக் காரியாலய மண்டபத்தில் முற்பகல் 11.00 மணிக்கு நடத் தப்படவுள்ளது.

இதன்போது உப சபை உறுப்பினர்கள் நான்கு பேர் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

எனவே, பொதுச்சபை பேரா ளர்கள் மேற்படி கூட்டத்திற்கு குறித்த நேரத்திற்கு தவறாது சமுகமளித்து கூட்டம் சிறப் பாக நடைபெறுவதற்கு ஒத்து ழைப்பு வழங்க வேண்டும் என வலியுறுத்தியுள்ளார்.







புதிதாக அமைக்கப்பட்டுள்ள பொலிஸ் காவலரண் ஒன்று குறிகாட்டுவானில் நேற்றைய தினம் திறந்து வைக்கப்பட்டுள்ளது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்குமாகாண சிரேஷ்ட பிரதிப்பொலிஸ்மா அதிபர் ரொஷான் பெர்னாண்டோ, யாழ்.மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் பாரத பெர்னாண்டோ, யாழ். மாவட்ட சிரேஷ்டபொலிஸ் அத்தியட்சகர் கஸ்ரன் ஸ்ரனிஸ் லஸ் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

# வடக்கில் சுற்றுலா – தொல்பியல் மையங்கள்; பெயர் மாற்றம் குறித்து முதல்வர் விசாரிப்பர்

வடக்கு மாகாணத்தில் உள்ள சுற்றுலாத் தளங்கள் மற்றும் தொல்லியல் இடங்களின் பெயர்கள் மாற்றப்பட்டமைக்கான காரணம்தொடர்பாகத்தாம்ஆராய்ந்து வருகிறார் என முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

இத்தகவலை இணையத் தளம் ஒன்று வெளியிட்டுள்ளது.

வடக்கு மாகாணத்தில் ஏராளமான இடங்கள் பெயர்மாற்றம் அடைந்துள்ளன. கடந்த 1975 ஆம் ஆண்டு வடக்கில் உள்ள பிரசித்தி பெற்ற எல்லா இடங்களினதும் பெயர்களைச் சேகரித்து வருகின்றேன். அதன் அடிப்படையில் ஏன் பெயர்களை மாற்றினீர்கள் என்பது தொடர்பில் ஆராயவுள்ளேன்.

முன்னைய காலத்தில் இருந்த தமிழ்ப்பெயர்களை மாற்றுவதற்கான காரணம் என்ன என சம்பந்தப்பட்ட தரப்புகளிடம் விளக்கங்களைக் கோரவுள்ளேன். தொல்லியல் சம்பந்தமாக நிறையப்பிரச்சினைகள் இருக்கின்றன. 13 ஆவது திருத்தச்சட்டத்தின் படி நாம் மத்திய – அரசிற்குரியவர்கள். ஆகவே அவர்களிடம் பேச வேண்டிய தேவையுள்ளது. எம்முடன் கதைக்கும் போது நன்றாக கதைக்கின்றனர். எனினும் ஒரு நடவடிக்கையும் இடம்பெறுவதில்லை.

உலகவங்கியாழ்ப்பாணத்தை மையமாக வைத்து 55 ஆயிரம் மில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவில் திட்டம் ஒன்றை வகுத்து வருகின்றது. அவர்கள் கொழும்பு அரசுடன் கதைத்து நடவடிக்கை எடுக்கலாம். மந்திரிமனை போன்ற இடங்களை அபிவிருத்தி செய்ய நடவடிக்கை எடுத்து வருகின்றனர். உலக வங்கி தலையிடுவதால் அவர்கள் அபிவிருத்திசெய்யவருகின்றனர்.

இராணுவத்தினர் வெளியேற வேண்டும். அவர்கள் வர்த்தக இடங்கள், மக்கள் காணிகள், சுற்றுலாத்துறை இடங்களை கையகப்படுத்தி வைத்துள்ளனர். இவற்றை நாம் அரசியல் ரீதியாகவே கையாளவேண்டும். – என்றார் முதல்வர் என அந்த இணையத்தளச் செய்தி மேலும் தெரிவித்தது. (உ)

# எய்ட்ஸ் நோய்க்கு தடுப்பு மருந்து: அமெ. விஞ்ஞானிகள் சாதனை!

எயிட்ஸ் நோய்க்கு காரணமான எச்.ஐ.வி. வைரஸ் கிருமிகளை 99 வீதம் அழிக்கக் கூடிய மருந்து ஒன்றை அமெரிக்க தேசிய சுகாதார நிறுவனத்தின் ஆய்வக மருத்துவ விஞ்ஞானிகள் தயாரித்துள்ளனர் என்று கூறப்படுகிறது.

எச்.ஐ.வியின் மூன்று பிரதான வைரஸ்களுக்கு இந்த மருந்தை எதிர்த்துத் தாக்குப்பிடிக்க முடியாது என விஞ்ஞானிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

குரங்குகளுக்குக் கொடுத்து வெற்றிகரமாக பரிசோதிக்கப்பட்டுள்ள இந்த மருந்து, அடுத்த ஆண்டு முதல் மனிதர்களிலும் பரிசோதிக்கப்பட உள்ளது.

இதன் மூலம் எயிட்ஸ் நோயை நிரந்தமாக குணப்படுத்தும் சிகிச்சையை உருவாக்கவும், எச்.ஐ.வி. தொற்றுவதை தடுக்கும் ஊசி மருந்து ஒன்றை தயாரிப்பது பற்றியும் முடிவுகள் எட்டப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

# தேர்தலைத் தள்ளிப்போடும் முயற்சி; 5 கண்காணிப்பு அமைப்புகள் எதிர்ப்பு

கொழும்பு, செப். 23

மாகாண சபை தேர்தல் திருத்தச்சட்டமூலத்தின்ஊடாகமாகாண சபைத் தேர்தலை உரிய காலத்தில்நடத்தாதுகாலம்கடத்துவதற்கு அரசுமுன்னெடுத்துவரும்முயற்சிகளை முறியடிப்பதற்கு தேர்தல்கள்கண்காணிப்புஅமைப்புக்கள் ஐந்து கூட்டிணைந்துநடவடிக்கை எடுக்கத் தீர்மானித்துள்ளன.

'பவ்ரல்', 'கபே' தேர்தல் மோசடிகளைக் கண்காணிக்கும் மத்திய நிலையம், 'டிரான்ஸ்பெரன்சி இன்டர்நெசனல்' மற்றும் இலங்கை மற்றும் சர்வதேச தேர்தல் கண்காணிப்பு நிறுவனம் என்பன இணைந்து இந்த எதிர்ப்பு நடவடிக்கையை முன்னெடுக்கவுள்ளன.

இது தொடர்பில் அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று தெமட்டகொடவில் நடைபெற்றது.

# முல்லையில் நேற்று சுனாமி ஒத்திகை

முல்லைத்தீவு நகர்ப்பகுதியில் சுனாமி ஒத்திகை நிகழ்வு ஒன்று இடம்பெற்றது.

சுனாமி ஒன்று நிகழும் போது சுனாமி ஒலிபரப்புக் கோபுரத்தினூடாக எவ்வாறு தகவல் வழங்கப்படுகிறது, அதன்பின்னர் மக்கள் எவ்வாறு பாதுகாப்பான இடங்களுக்குச் செல்வது என்பது தொடர்பான தகவல்களை மக்களுக்கு வழங்கி அவர்களை பாதுகாப்பாக வெளியேற்றியதோடு –

சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டதும் (முப்படைகள்) கடற்படை, தரைப்படை, விமானப்படை, பொலிஸார் மற்றும் அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் மக்களுக்கு எவ்வாறு தமது சேவைகளை வழங்குவது என்பது தொடர்பான நடவடிக்கைகளும் ஒத்திகை பார்க்கப்பட்டன.

தொடர்ந்து பாதுகாப்பான இடமாக அறிவிக்கப்பட்ட இடத்தில் ஒன்றுகூடிய மக்களுக்கு, முல்லைத்தீவு மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவு உதவிப் பணிப்பாளர் காமினி பிரியந்த, சுனாமி தொடர்பில் விழிப்புணர்வுக் கருத்துக்களை வழங்கினார்.

# சயந்தனின் தாயார் காலமானார்

வடமாகாண சபை உறுப்பினரும் பிரபல சட்டத்தரணியுமான கேசவன் சயந்தனின் தாயாரான கேசவன் மகேஸ்வரி நேற்று வெள்ளிக்கிழமை மாலை இயற்கை எய்தியுள்ளார். 72 வயதான அவர் நீண்ட காலம் சுகயீனமடைந்த நிலையில் காணப்பட்டு, நேற்று மரணமடைந்துள்ளார். மீசாலை, புத்தூர்ச் சந்தியில் உள்ள அவரது இல்லத்தில் இறுதிக்கிரிகைகள் நாளை மதியம் இடம்பெறும் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (உ–21)

# கின்னஸ் சாதனைத் திருமணத்துக்கு மாணவர்களைப் பயன்படுத்துவதா?

## விசாரணைக்கு கல்வி அமைச்சர் உத்தரவு

உலகின் மிக நீளமான திருமணச்சேலை அணிந்து கின்னஸ் சாதனை புரிவதற்காக கண்டி, அலவதுவள கனிஷ்ட பாடசாலையின் 250 மாணவர்களைப்பயன்படுத்திய சம்பவம் தொடர்பில் கண்டறிந்து அறிக்கையொன்றை சமர்ப்பிக்குமாறு கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் கல்வி அமைச்சின் செயலாளருக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

கண்டி, கண்ணொருவ பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் இந்த திருமண வைபவம், மத்திய மாகாண முதலமைச்சர் சரத் ஏக்கநாயக்க தலைமையில் நடைபெற்றது.

இதன்போது, கின்னஸ் சாதனையை இலக்காக்கொண்டு, தயாரிக்கப்பட்டிருந்த சுமார் 3 கிலோ மீற்றர் நீளமான திருமணச் சேலையை ஏந்தி நிற்பதற்காக 250 பாடசாலை மாணவர்கள் ஈடுபடுத்தப்பட்டனர்.

இதற்காக அம்மாணவர்களை அதிகாலை மூன்று மணியளவிலிருந்து தயார்படுத்தப்பட்டனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. அதேவேளை, பாடசாலை ஆசிரியர்களும் மாணவர்களைக் கண்காணிக்கும் நடவடிக்கைகளுக்குப் பொறுப்பாக ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் தாங்கள் விசாரணைகளை ஆரம்பிக்கவுள்ளனர் எனச் சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் தலைவர் சட்டத்தரணி மரினி தலிவேரா தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ)

(விவரமான செய்தி 19ஆம் பக்கத்தில்)

# நவராத்திரி விழாவில் சொற்பொழிவு

சாவகச்சேரி, செப்.23

சாவகச்சேரி, மட்டுவில் வடக்கு, சந்திரபுரம் அருள்மிகு வீரமுத்து மாரி அம்பாள் ஆலயத்தின் நவராத்திரி விழா நடைபெற்று வருகிறது.

மாலை 4.30 மணிக்கு நவராத்திரி பூஜை ஆரம்பமாகும். அங்கு நாளாந்தம் சிறப்புச் சொற்பொழிவும் இடம்பெற்று வருகிறது.

அந்த வகையில், இன்று சனிக்கிழமை சைவப் புலவர் கா.கமலநாதன் 'அன்பு நெறியும் அன்னை வழிபாடும்' என்ற விடயம் குறித்தும் –

நாளை ஞாயிற்றுக்கிழமை சைவப்புலவர் கந்த. சத்தியதாசன் 'மகிடாசுர மர்த்தனி திருவருள்' என்ற தலைப்பிலும் சொற்பொழிவு ஆற்றுவார்கள். (இ)


# மரண அறிவித்தல்

## திருமதி பேரம்பலம் நாகமுத்து



கச்சாய் தெற்கு கொடிகாமத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பேரம்பலம் நாகமுத்து நேற்று (22.09.2017) வெள்ளிக்கிழமை இரவு இறைபதம் அடைந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்ற விநாசித்தம்பி பேரம்பலத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற செல்லத்துரை, பாறுப்பிள்ளை ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்ற சரஸ்வதி, காலஞ்சென்ற பாக்கியம், தவமணி, சின்னப்பிள்ளை, தங்கராசா, தர்மராஜா, தவராசா, புஸ்பராணி, தவயோகராசா ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்ற கார்த்திகேசு, மாணிக்கம், நடராஜா, காலஞ்சென்ற சங்கரம்பிள்ளை, பராசக்தி, கமலாம்பிகை, இந்திராணி, மங்களேஸ்வரன், கமலாதேவி ஆகியோரின் மாமியாரும், நிர்மலாதேவி, லீலாதேவி, அகிலாதேவி, நிர்மலன், கவிதா, சுவேதா, கலையரசி, தர்சனா, பர்சனா, பர்மினா, செந்தீபா, பிரதீபன், சுபேசனா, சுபேசன், பவித்திரா, தேனுசன், நிவேதிகா, கோகுலன், கடோற்கஜன், தர்சனாங்கி ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரிகைகள் இன்று (23.09.2017) சனிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு அவரின் கச்சாய் இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் எறியாப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படவுள்ளது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கச்சாய் தெற்கு,
கொடிகாமம்.

தகவல்:
குடும்பத்தினர்.
(077 626 8161)

# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## 'ஒருமித்த நாடு' என்பது பிரிவினைச் சொல்லாடலா?

நீண்ட காலம் பலரும் எதிர்பார்த்த இடைக்கால அறிக்கை வெளிவந்து விட்டது.

புதிய அரசமைப்பை உருவாக்குவதற்காக அரசமைப்புப் பேரவையாகக் கூடிய நாடாளுமன்றம், அந்தப் பணியை முன்னெடுப்பதற்காகப் பிரதமர் தலைமையில் இருபது பேர் கொண்ட நடவடிக்கைக் குழு ஒன்றை நியமித்திருந்தது. நடவடிக்கைக் குழு தனது இடைக்கால அறிக்கையை முன்வைத்து விட்டது.

இப்போது அந்த அறிக்கை பொதுமக்கள் பாவனைக்கு வந்துள்ளது. எனினும், பொது மக்களையும் பல தலைவர்களையும் பொறுத்தவரை 'குருடன் யானையைப் பார்த்த கதை'யாகவே அந்த விவகாரம் இருக்கின்றது.

பல தரப்பு யோசனைகளையும் அந்த இடைக்கால அறிக்கையில் உள்ளடக்கியுள்ள வழிகாட்டல் குழு, சில விடயங்களில் தனது ஆலோசனைகளையும் - பரிந்துரைகளையும் - முன்வைத்திருக்கின்றது.

அப்படிப்பட்ட ஒரு விடயம்தான் - நாட்டின் ஆட்சி முறைமை - அல்லது சுபாவம் - எத்தகையது என்பதைக் குறிப்பிடும் ஏற்பாடாகும். தற்போதைய அரசமைப்பின் 2 ஆவது ஷரத்தினால் அது குறிப்பிடப்படுகின்றது. 'இலங்கை ஒற்றையாட்சி முறை கொண்ட நாடு' என அது விவரிக்கின்றது.

1972 ஆம் ஆண்டின் குடியரசு யாப்பு மூலம் இந்த ஒற்றையாட்சி விடயம் கொண்டுவரப்பட்டது. அப்படி 1972 அரசமைப்பிலும், பின்னர் 1978 ஆம் அரசமைப்பிலும் இந்த 'ஒற்றையாட்சி முறைமை' புகுத்தப்பட்டதாயினும், அந்த அரசமைப்புகளின் தயாரிப்புக்களில் இந்த நாட்டின் தமிழ் மக்களோ, அவர்களின் சட்ட ரீதியான பிரதிநிதிகளோ பங்கு பற்றவில்லை. அந்த அரசமைப்புக்கள் இந்த நாட்டின் தமிழர்கள் மீது தென்னிலங்கையினரால் வல்வந்தமாகத் திணிக்கப்பட்டன என்பதே உண்மை.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன் கூறியிருக்கின்றமை போல இது, தமிழர்களையும் ஒன்றிணைத்து, ஓர் ஐக்கிய அரசமைப்பை உருவாக்குவதற்கான வாய்ப்பு, பொன்னான சந்தர்ப்பம்.

அதனைத் தென்னிலங்கை எப்படி பொருத்தமாகப் பயன்படுத்தி, நாட்டின் ஐக்கியத்தையும், நல்லிணக்கத்தையும், ஒற்றுமைப்பாட்டையும் உறுதிப்படுத்தப் போகின்றது என்பதே கேள்வி.

'ஒற்றையாட்சி' முறைமை என்பது வல்வந்தமாக தங்கள் மீது திணிக்கப்பட்டது என்பதோடு 'சமஷ்டி' முறை ஆட்சியே தங்களுக்கு ஏற்புடையது எனத் தமிழர்கள் கூறுகின்றார்கள்.

ஆனால் சமஷ்டி என்பது பிரிவினை என்கின்றது பௌத்த சிங்களப் பேரினவாதம்.

இரண்டுக்கும் நடுவே ஓர் இணக்கப்பாடாக '*இலங்கை என்பது மத்திய, மாகாண நிறுவனங்களின் கட்டமைப்புக்களைக் கொண்ட, பிளவுபடாத, பிரிக்க முடியாத ஒருமித்த நாடு*' என்று ஒரு விளக்கத்தைக் கொடுப்பதற்கு வழிகாட்டல் குழு முயன்றிருக்கின்றது.

தமிழில் 'ஒருமித்த நாடு' எனக்கூறுவதன் அர்த்தம் 'ஒற்றையாட்சி' அல்ல என்று விளக்க முற்பட்டிருக்கின்றது மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான கூட்டு எதிரணி.

தமிழில் 'ஒருமித்த நாடு' என்பது 'ஒன்றிணைக்கப்பட்டு உருவான நாடு' என்றே அர்த்தம் கொண்டது என்று கூறும் கூட்டு எதிரணி, இது ஒன்றே, நாட்டின் ஆட்சி முறை ஒற்றையாட்சி என்பதை நீக்கும் பிரிவினைவாதிகளின் சதித் திட்டத்துக்கு அமைவாக இந்த இடைக்கால அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது என்பதற்கு போதிய சான்றாகும் என்றும் குறிப்பிட்டுள்ளது.

சரி... கூட்டு எதிரணி குறிப்பிடுவது போலவே 'ஒருமித்த நாடு' என்ற தமிழ் பதத்தின் அர்த்தம் 'ஒன்றிணைக்கப்பட்டு உருவான நாடு' என்பதுதான் என்று கொண்டால் கூட அதில் என்ன தவறு இருக்கின்றது? அதில் என்ன பிரிவினை இருக்கின்றது? ஒரளவுக்கு அதுதானே உண்மை!

பல நூறு ஆண்டுகளாகத் தனித்தனி மொழி, பண்பியல்பு, வாழ்க்கைமுறை, வாழிடப் பிரதேசம், நிர்வாக அரசுகள் என்று இந்தத் தீவில் தமிழர்களும் சிங்களவர்களும் வெவ்வேறு இராச்சியங்களின் கீழேயே வாழ்ந்து வந்தார்கள் என்பதுதானே உண்மை! இந்தத் தீவை வன்கவர்ந்த அந்நியரால் எங்கள் இராச்சியங்கள் ஒன்றிணைக்கப்பட்ட என்பதுதானே வரலாறு?

அப்படி ஒன்றிணைக்கப்பட்டு ஒருமித்த நாட்டை, 'பிளவுபடாத, பிரிக்க முடியாத ஒருமித்த நாடாக' ஏற்றுக் கொள்ளும் திட்டத்தைத்தானே நடவடிக்கைக்குழு சிபாரிசு செய்திருக்கின்றது!

பிரிவினை கேட்டு, அதற்காக பல்லாயிரம் உயிர்களைத் தியாகம்செய்து, பெரும் இழப்புகளை எதிர்கொண்ட தமிழினம், ஆற்றாமையின் எல்லையில் சமஷ்டிக்கு இணங்கி வந்திருக்கின்றது.

அந்த சமஷ்டியை விட்டு இறங்கி, 'ஒருமித்த நாடு' என்ற கோட்பாடுக்குள் சிக்குவதற்குத் தமிழினம் தயாரா என்பது ஆராயப்பட வேண்டிய விடயம். தமிழ்த் தலைவர்கள் - குறிப்பாக நாடாளுமன்றப் பிரதிநிதிகள் - தீர்மானிக்க வேண்டிய - முடிவு செய்ய வேண்டிய முக்கிய அம்சம்.

ஆனால், 'ஒருமித்த நாடு' என்ற கட்டமைப்புக்குள் தமிழர்கள் இறங்கி வருகின்றனர் எனக்குறிப்பிட்டு, அது பிரிவினைவாதத் திட்டம் என்று கூட்டு எதிரணி விவரிப்பது தமிழர்களைச் சீண்டும் ஏற்பாடன்றி வேறில்லை.

நாங்கள் சிங்கள இனத்தவருடன் 'ஒருமித்து' வாழ்வதா, இல்லையா என்பது தென்னிலங்கை பௌத்த, சிங்களத் தரப்புகள் தங்களின் தாராண்மையை இந்த விடயத்தில் வெளிப்படுத்துவதில்தான் தங்கியிருக்கின்றது.

# அரசியல் தற்கொலை செய்துள்ளது மைத்திரி – ரணில் நல்லாட்சி அரசு!

## குற்றஞ்சாட்டுகிறது கூட்டு எதிரணி

கொழும்பு, செப். 23

மைத்திரி - ரணில் தலைமையிலான அரசு பெரும் பின்னடைவைச் சந்தித்துள்ள நிலையில் அந்த பின்னடைவை மூடி மறைப்பதற்காகக் கடந்த புதன்கிழமை அரசியல் ரீதியாகத் தற்கொலைசெய்துகொள்ளும் வகையில் பல தவறுகளை இழைத்துள்ளதாக முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான கூட்டு எதிரணி குற்றம்சாட்டியுள்ளது.

கூட்டு எதிரணியின் முக்கியஸ்தரான நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப் பெரும நேற்று கொழும்பில் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

பொதுச் சபைக் கூட்டத்தில் கலந்துகொண்டுள்ள இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அங்கு ஜனநாயகத்துக்காக குரல்கொடுத்துவரும் நிலையில், நாடாளுமன்றில் ஜனநாயகத்தைக் குழிதோண்டிப் புதைக்கும் நடவடிக்கையொன்றை அவரது அரசு முன்னெடுத்துள்ளமை கவலைக்கிடமானது.

மாகாண சபைகளுக்கான தேர்தல் திருத்தச் சட்டத்தை நிறைவேற்றியதன் மூலம் ஜனநாயகத்தின் அடிப்படை உரிமைகள் சிலவற்றை அரசு பறித்துள்ளது.

உயர் நீதிமன்றத்தின் கௌரவத்திற்கு பங்கம் விளைவித்துள்ளதுடன் உயர் நீதிமன்றின் உரிமையையும் அரசு பறித்துக் கொண்டுள்ளது.

சர்வஜனவாக்கெடுப்பொன்றை நடத்தாது மாகாண சபைகளுக்கான தேர்தலை ஒத்திவைக்க முடியாது என்று உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்திருந்த நிலையில், வேறு வழியில் அதற்கான சட்டமொன்றை நிறைவேற்றியதன் ஊடாக அரசு உயர் நீதிமன்றத்தை அவமதித்துள்ளது. - என்று அவர் தெரிவித்துள்ளார். (க)

# வடமாகாண ஆய்வரங்கு, பண்பாட்டு பெருவிழா இன்று இரண்டாம் நாள் நிகழ்வுகள்!

## தெல்லிப்பழை யூனியனில்

வடக்கு மாகாண கல்வி பண்பாட்டு விளையாட்டுத் துறை அமைச்சால் நடத்தப்படும் வடக்கு மாகாணப் பண்பாட்டு பெருவிழா மற்றும் 'கிராமிய பண்பாடும் மேம்பாடும்' என்ற ஆய்வரங்கம் என்பன நேற்று வெள்ளிக்கிழமை முதல் மூன்று தினங்கள் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் காலை, மாலை அமர்வுகளாக நடைபெற உள்ளன.

இன்று சனிக்கிழமை இரண்டாம் நாள் நிகழ்வுகளில் ஆய்வரங்கம் யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் வாழ்நாள் பேராசிரியர் பொன். பாலசுந்தரம்பிள்ளை தலைமையில் கலாநிதி க.குணராசா (செங்கை ஆழியான்) அரங்கில் காலை 9 மணிக்கு ஆரம்பமாகும்.

மங்கல விளக்கேற்றலுடன் ஆரம்பமாகும் இந்த நிகழ்வில் தமிழ்த்தாய் வாழ்த்தை யாழ். பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி மாணவிகள் வழங்குவர்.

வரவேற்புரையை துணுக்காய் பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் கு.ரஜீவனும், அரங்கத் திறப்புரையை ஓய்வு பெற்ற பிரதிக் கல்விப் பணிப்பாளர் கோகிலா மகேந்திரனும், ''கிராமியப் பண்பாடும் மேம்பாடும்'' என் னும் ஆய்வரங்க வரிசையில், ''கிராமியப் பண்பாட்டைப் பேணுவதில் கல்வித்துறையின் பங்களிப்பு'' என்னும் தலைப்பில் நெல்லியடி மத்திய கல்லூரி ஆசிரியை செல்வி நாராயணி தங்கராசாவும், ''மாண வர்களிடையே இறைவழி பாட்டுப் பழக்கத்தை மேம் பாடடையச் செய்வதில் பாடசாலை முகாமைத்துவம் எதிர் கொள்ளும் சவால்கள்'' யாழ். பல்கலைக் கழகக் கல்வியியல் துறையைச் சேர்ந்த வரதராஜன் பாலமுரளி, திருமதி ஜெயலக்ஷ்மி இராசநாயகம், ''பாடசாலையில் மாணவர் வரவு குறைவாக இருத்தல் - கிராமிய ரீதியான பார்வை'' பத்தனை ஸ்ரீபாத தேசிய கல்வியியற் கல் லூரி விரிவுரையாளர் மாலினி முரளிதரன், ''கிராமியக் கலை களும் அவற்றின் இன்றைய நிலைகளும்'' செல்வன் சந்தான கோபால் மதிராஜ், ''கிராமியப் பண்பாட்டு மேம்படுத்தல்களில் பாரம்பரிய விளையாட்டுக்களின் வகிபாவம்'' சண்டிலிப்பாய் பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் திருமதி தாட்சாயினி செல்வக்குமார், ''யாழ்ப்பாணக் கிராமியங்களின் தொடர்பியல் பண்பாடு'' கொழும்பு உளவியல் கல்லூரியைச் சேர்ந்த ஸ்ரீதயாளன் ஸ்ரீபிருந்திரனும் வழங்குவர்.

நன்றியுரையை நல்லூர் பிரதேச கலாசார உத்தியோகத்தர் திருமதி ரஜனி குமாரகுலசிங்கமும் தமிழ்மொழி வாழ்த்தை பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி மாணவர்களும் வழங்குவர்.

பண்பாட்டுப் பெருவிழா மாலை நிகழ்வுகள் வடக்கு மாகாண சமூகசேவைகள் திணைக்களப் பணிப்பாளர் வனஜா செல்வரட்ணம் தலைமையில் இன்று சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கலைஞானி அ.செல்வரட்ணம் அரங்கில் நடைபெறும்.

இந்த நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண மகளிர் விவகார புனர்வாழ்வளித்தல், சமூகசேவைகள் அமைச்சர் அனந்தி சசிதரனும், கௌரவ விருந்தினராக வடக்கு மாகாண பிரதிப் பிரதம செயலாளர் (நிர்வாகம்) ச.மோகநாதனும், சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாணம் ஓய்வு பெற்ற பிரதிக் கல்விப் பணிப்பாளர் வை.சிவசுப்பிரமணியமும் (ஓவி யர் ரமணி) கலந்துகொள்வர்.

விருந்தினர்களை வரவேற்றல், மங்கல விளக்கேற்றல், தமிழ்த் தாய்க்கு மாலை அணிவித்தல் ஆகிய நிகழ்வுகளுடன் ஆரம்பமாகும் விழாவில் தமிழ்த் தாய் வாழ்த்தை தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி மாணவர்கள் வழங்குவர்.

மங்கல இசையை அளவையூர் சுதந்திரன் குழுவினரும், வரவேற்பு நடனத்தை மன்னார் புனித சவேரியார் பெண்கள் கல்லூரி மாணவர்களும் வழங்குவர்.

வரவேற்புரையை வவுனியா மாவட்ட கலாசார உத்தியோகத்தர் இ.நித்தியானந்தனும் அரங்கத் திறப்புரையை கலாபூசணம் சைவப்புலவர் சு.செல்லத்துரையும், கரகாட்டத்தை ஏழாலை அபிநயா கலாமன்ற மாணவர்களும் -

குழு நடன நிகழ்வை பூநகரி, கிளிநொச்சி ஸ்ரீகரநர்த்தனாலய மாணவர்களும், ரபான் நடனத்தை வவுனியா முஸ்லிம் மகாவித்தியாலய (தேசிய பாடசாலை) மாணவர்களும், வீணைக் கச்சேரியை தெல்லிப்பழை பிருந்தகான சபா மாணவர்களும் வழங்குவர்.

இளங்கலைஞர் விருது வழங்கலும் வவுனியா மாவட்ட கலாசாரப் பேரவை வழங்கும் சிங்கள பாரம்பரிய நடனமும், கிளிநொச்சி ஜாணு அரங்காற்றுகையகமும் ஊர்காவற்றுறை தம்பாட்டி காந்திஜி நாடக மன்றம் வழங்கும் பண்டார வன்னியன் நாட்டுக் கூத்தும் நடைபெறும்.

நன்றியுரையை முல்லைத்தீவு மாவட்ட கலாசார உத்தியோகத்தர் செல்வி இ.மதியரசி வழங்குவார்.

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி மாணவர்களின் தமிழ் மொழிவாழ்த்துடன் நிகழ்வுகள் நிறைவுறும்.

### நாளை

**24.09.2017**
**ஞாயிற்றுக்கிழமை**

நட்சத்திரம் : விசாகம் பி.இ.05.36 வரை
திதி: சதுர்த்தி பி.ப 1.06 வரை
சுபநேரம் : 09.02 –10.32
இராகுகாலம் : 04.32 – 06.02

# இலங்கையின் மீளக்கட்டியெழுப்பும் செயற்பாடுகள் பாராட்டுக்குரியவை!



கொழும்பு, செப். 23

போருக்குப் பிந்திய காலத்தில் அரசியல், சமூக மற்றும் பொருளாதார ரீதியில் இலங்கையின் மீளக்கட்டியெழுப்பல் செயற்பாடுகள் பாராட்டுக்குரியவைஎனஅமெரிக்காவின் அரசியல் அலுவல்களுக்குப் பொறுப்பான செயலாளர் தோமஸ் ஏஷெனன் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின் 72 ஆவது பொதுச்சபைக் கூட்டத்தொடரில் பங்குபற்றுவதற்காக உத்தியோகபூர்வ அமெரிக்க விஜயத்தில் ஈடுபட்டுள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும், அமெரிக்க அரசியல் விவகார உதவி இராஜாங்கச்செயலாளர் தோமஸ் ஷெனனுக்கும் இடையிலான இந்தச் சந்திப்பு இலங்கை நேரப்படி நேற்று முன்தினம் பிற்பகல் நியூயோர்க் நகரில் இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பின்போது, இலங்கை மற்றும் அமெரிக்காவுக்கிடையிலான நீண்டகால உறவுகளை நினைவூட்டிய ஜனாதிபதி, அமெரிக்கா இலங்கைக்கு வழங்கும் ஒத்துழைப்புக்கள் தொடர்பில் தனது நன்றியைத் தெரிவித்துள்ளார்.

மூன்று தசாப்த போரின் பின்னர் நாட்டில் நிலையான சமாதானத்தைக்கட்டியெழுப்புவதற்காக முன்னெடுக்கப்படும் நல்லிணக்கச் செயற்பாடுகள் வெற்றி பெறுவதற்கும் போர் இடம்பெற்ற பிரதேசங்களின் அபிவிருத்திக்காக அமெரிக்கா வழங்கும் ஒத்துழைப்புகளுக்கும் ஜனாதிபதி இந்தச் சந்தர்ப்பத்தில் நன்றி தெரிவித்தார்.

இதன்போது கருத்துத் தெரிவித்த அமெரிக்க உதவி இராஜாங்கச்செயலாளர், இலங்கையின் அரச நிர்வாகத்தில் மிகச் சிறந்தவெளிநாட்டுக்கொள்கை தற்போது நிலவுவதாகச்சுட்டிக் காட்டினார்.

இதுதொடர்பில் அமெரிக்க உதவி இராஜாங்கச்செயலாளர் மேலும் தெரிவிக்கையில்-

### அமெரிக்க அரசியல் செயலாளர் கூறுகிறார்

இந்து சமுத்திர பிராந்தியத்தின்முக்கிய இடத்தில் அமைந்துள்ள நாடு இலங்கை என்ற வகையில் அதன் பிராந்திய நாடுகளுடன்பேணிவரும் ஒத்துழைப்பு செயற்பாடுகளைப் பாராட்டுகிறேன்.

அனைத்துச் சகோதர நாடுகளுடன் ஒத்துழைப்புடன் செயற்படுவது தொடர்பில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சிறந்த முன்னுதாரணமாகத் திகழ்கிறார் என்றும் தெரிவித்தார்.

இதன்போது கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி மைத்திரி-

இந்து சமுத்திரத்தில் கேந்திர முக்கியத்துவம் மிக்க இடத்தில் இலங்கை அமைந்துள்ளமையால் மிகச்சிறந்த நிலையில் அது திகழ்வதுடன், பல்வேறு சவால்களுக்கும் முகம் கொடுக்க வேண்டியுள்ளது.

பிராந்தியப் பாதுகாப்புத் தொடர்பிலும் மிகச் சிறந்த தொடர்புகளைப் பேணிக்கொண்டு நடுநிலையான வெளிநாட்டுக் கொள்ளையுடன் முரண்பாடுகள் ஏற்படாத வாறு அனைத்து நட்பு நாடுகளுடனும் சிறந்த இருதரப்பு உறவுகளைப் பேணுவதில் தற்போது இலங்கை வெற்றி பெற்றுள்ளது.

இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் சமாதானத்தைக் கட்டியெழுப்புவதற்காகவும் இலங்கை அர்ப்பணிப்புடன் செயற்படுகிறது.

மூன்று தசாப்தங்களாக நிலவிய போருக்குப் பின்னர் இலங்கை பொருளாதார ரீதியில் நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்துள்ளது. இலங்கையின் அபிவிருத்திக்காக அமெரிக்காவின் ஒத்துழைப்பைத் தொடர்ச்சியாக எதிர்பார்க்கிறோம்.

இலங்கையின் சுற்றுலா, மீன்பிடி மற்றும் கடல்சார்துறைகளின் முன்னேற்றத்துக்குத் தொடர்ந்தும் அமெரிக்காவின் ஒத்துழைப்பை நாம் எதிர்பார்க்கிறோம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் தற்போதைய அரசியல் நிலை தொடர்பிலும் கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி, நாட்டின் பிரதான அரசியல் கட்சிகள் இரண்டும் இன்று இணைந்து செயற்பட்டு முரண்பாடுகளின்றி அரசை முன்னெடுக்கின்றன எனவும் சுட்டிக்காட்டினார்.

அமெரிக்கா இலங்கைக்கு வழங்கும் ஒத்துழைப்பில் எவ்வித குறைபாடுகளும் இடம் பெறாதென ஜனாதிபதிக்கு உறுதியளித்த உதவி இராஜாங்கச்செயலாளர், எதிர்வரும் நவம்பர் மாதமளவில் இலங்கைக்குத் தான் இராஜதந்திர விஜயம் ஒன்றை மேற்கொள்ள உள்ளார் என்றும் இதன் போது தெரிவித்தார். (க)

## அமைச்சர் ஹக்கீமின் தாயார் காலமானார்!

கொழும்பு, செப். 23

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீமின் தாயார் உதுமாலெப்பை ஹாஜரா ரவூப் தனது 89 ஆவது வயதில் நேற்றுக் காலமானார்.

அன்னாரின் ஜனாஸா கொள்ளுப்பிட்டி, அல்பேட் பிளேஸிலுள்ள அமைச்சர் ரவூப் ஹக்கீ மின் வாசஸ்தலத்தில் அஞ்சலிக்காக வைக்கப் பட்டுள்ளது.

இன்று முற்பகல் 10 மணிக்கு கொழும்பு 07, ஜாவத்தை ஜும்ஆ பள்ளிவாசலில் ஜனாஸா நல்லடக்கம் செய்யப்படும் என குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர்.

## இலங்கையின் முதலாவது சமூக புத்தாக்க ஆய்வு நிலையமொன்றை நிறுவ அடித்தளம்!

கொழும்பு, செப். 23

இலங்கையின் முதலாவது சமூக புத்தாக்க ஆய்வு நிலையமொன்றை நிறுவுவதற்கான திட்ட ஆவணத்தில் கையொப்பமிடும் நிகழ்வு நேற்றுக் காலை ஐ.நா. இலங்கை அலுவலகத்தில் இடம்பெற்றது.

அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் ஆராய்ச்சி அமைச்சர் சுசில் பிரேமஜயந்தவும் ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிகழ்ச் சித்திட்டத்தின் பணிப்பாளர் ஜோர்ன் சொரென்செனும் இந்தத் திட்ட ஆவணத்தில் கையெழுத்திட்டனர்.




## கறைபடிந்த விருப்பு வாக்கு முறைக்கு முற்றுப்புள்ளி வைக்கப்படும்!

### அமைச்சர் பைசர் முஸ்தபா கூறுகிறார்



கொழும்பு, செப். 23

மாகாண சபைத் தேர்தல் திருத்தச் சட்டத்தின் மூலம் கறைபடிந்த விருப்புவாக்கு முறையில் இருந்து விலகி, தேர்தல் தொகுதிக்குப் பொறுப்புக் கூறக்கூடிய மக்கள் பிரதிநிதிகள் தெரிவுசெய்யப்படுவார்கள் என அமைச்சர் பைசர் முஸ்தபா தெரிவித்துள்ளார்.

மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

மாகாண சபைத் தேர்தல் திருத்தச் சட்டம் தொடர்பாக செய்தியாளர்களுக்கு விளக்கம் அளிக்கும் வகையில் இந்த செய்தியாளர் மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இதுதொடர்பில் அமைச்சர் பைசர் முஸ்தபா மேலும் தெரிவித்தவை வருமாறு:-

தேர்தல் சட்டத்தின் பிரகாரம் பெண்களுக்கு 25 சதவீத பிரதிநிதித்துவம் உறுதி செய்யப்படுகின்றது.

இதன்மூலம் அரசியல் நிர்வாக நடவடிக்கைகளில் மறுமலர்ச்சி ஏற்படும். 50 சதவீதத் தேர்தல் தொகுதி முறை, 50 சதவீத பட்டியல் முறை, அடங்கிய கலப்பு முறையின் கீழ் மக்கள் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்படுவார்கள்.

இதன்மூலம் எந்த ஓர் இனக் குழுமத்திற்கும் அநீதி இழைக்கப்படமாட்டாது. தேர்தல் தொகுதி எல்லைகளை அமைக்கும் பணிகளில் நான்கு மாதங்களுக்குள் பூர்த்திசெய்ய அரசு எதிர்பார்த்துள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்த்தன தலைமையிலான தெரிவுக் குழுக் கூட்டத்தில் விருப்பத் தெரிவு வாக்களிப்பு முறையை மாற்றி பொருத்தமான தேர்தல் முறையை அறிமுகம் செய்யுமாறு பரிந்துரைக்கப்பட்டது.

அந்த பரிந்துரையுடன் ஜனாதிபதி அளித்த தேர்தல் உறுதிமொழியும் நிறைவேற்றப்பட்டுள்ளது என்றும் அமைச்சர் பைசர் முஸ்தபா இதன்போது சுட்டிக்காட்டினார்.

# மாநகரசபை ஊழியர் மீதான தாக்குதல்; கண்டித்து மட்டுநகரில் நேற்று போராட்டம்






மட்டக்களப்பு, செப். 23

மாநகரசபை ஊழியர் தாக்கப்பட்டமையை கண்டித்தும், இது தொடர்பில் உரிய விசாரணைகள் நடத்தப்பட வேண்டுமென தெரிவித்தும் மட்டக்களப்பு மாநகரசபையின் ஊழியர்களால் கண்டன போராட்டமொன்று நேற்று இடம்பெற்றது.

அந்த வகையில், மட்டக்களப்பு மாநகரசபையின் ஊழியர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் நேற்றுக் காலை பேரணியாகச் சென்று மட்டக்களப்பு பொலிஸ் தலைமையகத்தில் மகஜரொன்றை கையளித்த பின்னர், காந்தி பூங்கா முன்பாக ஒன்றுகூடி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது, தமது சக ஊழியர் தாக்கப்பட்டமை தொடர்பில் உரிய விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு தாக்கியவர்கள் கைது செய்யப்படும் வரையில், கடமைக்கு திரும்பப் போவதில்லையென சுகாதார ஊழியர்கள் தெரிவித்துள்ளனர்.

இதில் மட்டக்களப்பு மாநகர சபையின் பிரதி ஆணையாளர் உட்பட மாநகரசபையின் உத்தியோகத்தர்கள், சுகாதார ஊழியர்கள் என பெருந்திரளானோர் கலந்து கொண்டிருந்தனர்.



திருப்பெருந்துறையில் உள்ள திண்மக்கழிவு முகாமைத்துவ நிலையத்தில் குப்பை கொட்டுவதற்கு நீதிமன்றத்தினால் விதிக்கப்பட்ட இடைக்கால தடையை மேல் நீதிமன்றம் நீக்கியதை தொடர்ந்து நேற்று முன்தினம் முதல் குப்பைகள் கொட்டும் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

பொலிஸ் பாதுகாப்புடன் குப்பைகொட்டும் பணிகள் மேற்கொள்ளப்பட்ட நிலையில் குப்பையைக் கொட்டிவிட்டுதிரும்பிகொண்டிருந்த ஊழியரொருவர் அந்தப் பகுதியை சேர்ந்தவர்களால் தாக்கப்பட்டிருந்தார்.

இந்த நிலையில், தாக்கப்பட்ட அந்தச் சுகாதார ஊழியர் சிகிச்சைகளுக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

# கிழக்கு அபிவிருத்தி

## தொடர்பில் கலந்துரையாடல்

மட்டக்களப்பு, செப். 23

கிழக்கு மாகாணத்தில் அபிவிருத்தி திட்டங்களை சிறப்பாக மேற்கொள்வதற்கும் எதிர்காலத்தில் இன்னும் பல பிரதேசங்களில் அதிகமாக சுகாதார சேவைகளை மேற்கொள்வதற்கான திட்டங்களுக்கு அதிக நிதி ஒதுக்கீடு மேற்கொள்ளவேண்டும் என்று கிழக்கு மாகாண சுகாதார அமைச்சர் ஏ.எல். முஹம்மட் நஸீர் தெரிவித்தார்.

கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் ஊடாக கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பில் ஆராயும் கூட்டம் கிழக்கு மாகாண சுகாதார அமைச்சில் இடம் பெற்றது.

கிழக்கு மாகாண சுகாதார அமைச்சினால் ஒதுக்கப்பட்ட நிதிகள் பிராந்தியங்கள் ரீதியாக எவ்வாறு பயன்படுத்தப்பட்டன என்பது தொடர்பிலும் அதற்கான அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பாகவும், மேலும் செயற்படுத்தப்படவுள்ள அபிவிருத்தி நிலைப்பாடுகள் தொடர்பாகவும் இந்த கூட்டத்தின் போது கலந்துரையாடப்பட்டது.



# அரசின் இன நல்லிணக்க செயற்பாட்டுக்கு என்றும் பக்கபலமாக நான் இருப்பேன்!



சந்திரிகா தெரிவிப்பு!

மூன்று இனங்களும் ஒற்றுமையாகவும் சமத்துவமாகவும் வாழும் வகையில் நல்லாட்சி அரசு மேற்கொண்டுவரும் நடவடிக்கைகளுக்கு நான் என்றும் பக்கபலமாக இருப்பேன் என்று முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் தேசிய ஒருமைப்பாட்டுக்கும் நல்லிணக்கத்துக்குமான அலுவலகத்தினால் மாவட்டத்தில் நடைமுறைப்படுத்தப்பட்ட, சமூக, பொருளாதார மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட செயற்திட்டங்களை மக்களிடம் கையளிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் இடம் பெற்றுள்ளது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

குறிப்பாக வடக்கு, கிழக்கு மாகாண மக்களின் உடைமைகள், வளங்கள் மற்றும் உயிர்கள் எந்த அளவு அழிந்திருக்கின்றன என்பதை நான் அறிவேன்.

தற்போது அரசு தீர்மானித்திருக்கின்றது, உட்கட்டமைப்பு ரீதியாகவும், மனிதவள வாழ் வாதார ரீதியாவும் மக்களை கட்டியெழுப்ப வேண்டும் என்று. இதில் தற்போதைய அரசு உறுதியாக உள்ளது.

இப்போது நாங்கள் உங்கள் வாழ்வாதாரத்தை கட்டியெழுப்பும் சில முயற்சிகளைச் செய்து வருகின்றோம்.இந்த நாட்டில் தொடர்ந்தும் தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்கள் ஒன்றாக வாழ்வதற்கும் நான் இந்த அரசுடன் செயற்படுவேன் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# போர்க் குற்றச்சாட்டுகளில் இருந்து இராணுவத்தினரைப் பாதுகாப்போம்!

## திலக் மாரப்பன உறுதி கூறுகிறார்



கொழும்பு, செப். 23

ஜெனரல் ஜெகத் ஜயசூரிய போர்க்குற்றங்களில் ஈடுபட்டார் என்று அண்மையில் பிரேசிலில் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளுக்கு நிரூபிக்கக்கூடிய ஆதாரங்கள் இல்லை என்று இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் திலக் மாரப்பன தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் தினேஸ் குணவர்த்தன எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த போதே அவர் இதனைக் கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

ஜெனரல் ஜயசூரியவுக்கு எதிரான குற்றச்சாட்டுகள் நல்ல நோக்கத்துடன் சுமத்தப்படவில்லை.

அவருக்கு எதிராக பிரேசிலில் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் தொடர்பாக உறுதியான- நிரூபிக்கக் கூடிய ஆதாரங்கள் ஏதும் முன்வைக்கப்படவில்லை.

இலங்கை இராணுவ அதிகாரிகளுக்கு எதிராக போர்க் குற்றச்சாட்டுகள் சுமத்தப்படுவது ஒன்றும் புதிய விடயமல்ல.

2011 ஆம் ஆண்டில், அமெரிக்காவிலும், சுவிட்சர்லாந்திலும், ஏற்கனவே இது போன்ற இரண்டு குற்றச்சாட்டுகள் இராணுவ அதிகாரிகள் மீது அரசசார்பற்ற நிறுவனங்களால் சுமத்தப்பட்டன. ஆனால், அந்த நாட்டு அரசு இரண்டு வழக்குகளையும் விலக்கிக் கொண்டன.

ஜெனரல் ஜயசூரியவுக்கு எதிரான குற்றச்சாட்டுகள், அவரது பதவிக்காலம் முடிந்து, அங்கிருந்து வெளியேறிய பின்னரே முன்வைக்கப்பட்டுள்ளன. அவருக்கு எதிரான குற்றச்சாட்டுகள் தொடர்பான விசாரணைகளுக்கு இலங்கை அரசு ஒத்துழைக்காது.

ஜெனரல் ஜயசூரிய தொடர்பாக பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா கூறிய கருத்து அவரது தனிப்பட்ட கருத்து. அது அரசின் கருத்து அல்ல.

நான் இங்கு கூறுவது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தலைமையிலான அரசாங்கத்தின் ஒன்றுபட்ட தீர்மானத்தையே ஆகும்.

போர்க்குற்றச்சாட்டுகளில் இருந்து இராணுவ அதிகாரிகளை அரசு பாதுகாக்கும் என்றும் அவர் உறுதியளித்தார்.

## வல்லப்பட்டைகளை கடத்தியவர் கைது!

கொழும்பு, செப். 23

சட்டவிரோதமாக ஒரு தொகை வல்லப்பட்டைகளை டுபாய் நாட்டிற்கு கடத்திச் செல்ல முற்பட்ட நபரை கட்டுநாயக்க விமான நிலைய சுங்கப்பிரிவினர் கைது செய்துள்ளனர்.



கைது செய்யப்பட்டவர் 54 வயதுடைய தெமட்டகொட பிரதேசத்தைச் சேர்நத வியாபாரி என சுங்கப்பிரிவினர் தெரிவிக்கின்றனர்.

இந்தச் சந்தேக நபர் தம்முடன் வைத்திருந்த மையில் சந்தேகம் கொண்ட சுங்கப்பிரிவினர், அந்தப் பையைச் சோதனையிட்ட போதே வல்லப்பட்டைகள் கைப்பற்றப்பட்டதுடன், நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபரிடமிருந்து 50 கிலோ கிராம் வல்லப்பட்டைகள் கைப்பற்றப்பட்டுள்ளன. அவை 30 இலட்சம் ரூபா பெறுமதி வாய்ந்தவை என சுங்க அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

## ஐ.நா. மனித உரிமை ஆணையாளரை சந்திக்கின்றார் ஜனாதிபதி மைத்திரி!

கொழும்பு, செப். 23

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும், ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் செயிட் ராட் அல் ஹுசேனுக் கும் இடையிலான முக்கிய சந்திப்பு இடம் பெறவுள்ளது.

நியூயோர்க்கில் உள்ள ஐ.நா தலைமையகத்தில் இந்தச் சந்திப்பு இடம்பெறும்.

இலங்கையின் மனித உரிமைகள் நிலை, பொறுப்புக் கூறல் உள்ளிட்ட வாக்குறுதிகளை நடைமுறைப்படுத்தும் விவகாரம் உள்ளிட்டவை தொடர்பாக இந்தச் சந்திப்பின்போது முக்கிய கவனம் செலுத்தப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கை அரசு நிலை மாறுகால நீதிப் பொறிமுறைகள் பற்றிய வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கும், நம்பிக்கையைக் கட்டியெழுப்பும் நடவடிக்கைகளையும் விரைவாக முன்னெடுக்க வேண்டும் என்று ஐ.நா மனித உரிமை ஆணையாளர் அண்மையில் வலியுறுத்தியிருந்தார்.



அதேவேளை, இலங்கை அரசு இந்த விடயங்களில் மெதுவான -ஆனால் உறுதி யான நகர்வையே முன்னெடுக் கும் என்று ஐ.நா. பொதுச்சபையில் ஜனாதிபதி கூறியிருந்தார்.

நல்லிணக்கம், பொறுப்புக் கூறல் சார்ந்த முரண்பட்ட கருத்துக்களை இருவரும் வெளிப்படுத்தியுள்ள நிலையில் இன்றைய சந்திப்பு முக்கியத்துவம் வாய்ந்ததாக பார்க்கப்படுகிறது.

# தேர்தலை ஒத்திவைத்து அரசு சதித் திட்டம்!

## மஹிந்த கூறுகிறார்



கொழும்பு, செப். 22

மாகாண சபைகளுக்கான தேர்தலை காலவரையரையின்றி ஒத்திவைக்கும் மாகாண சபைத் தேர்தகள் திருத்தச் சட்டத்தை இலங்கையில் தற்போதைய அரசு நிறைவேற்றியுள்ளது என முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ குற்றம்சாட்டியுள்ளார்.

இதற்கு ஐக்கிய தேசியக் கட்சியும், ஐக்கிய தேசியக் கட்சிக்குஆதரவுவழங்கிவரும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினரும், தமிழ் தேசியக் கூட்டமைப்பும், ஜே.வி.பியும் ஆதரவு வழங்கியுள்ளன எனவும் மஹிந்த கடுமையாக சாடியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

20 ஆவது அரசமைப்புத் திருத்தச் சட்டமூலத்தை நிறைவேற்றி அதன் ஊடாக மாகாண சபைகளுக்கான தேர்தலை ஒத்திவைத்து மாகாண சபைகளின் ஆட்சிக்காலத்தை நீடிக்க சதித்திட்டம் தீட்டப்பட்டுள்ளது.

தற்போதைய மைத்திரி - ரணில் தலைமையிலான அரசின் அந்த முயற்சி உயர் நீதிமன்றால் தடுக்கப்பட்டதை அடுத்து வேறு வழியில் அந்த திட்டத்தை அரசு நிறைவேற்றிக் கொண்டுள்ளது.

ஜனநாயகத்தை குழிதோண்டி புதைத்துள்ள இந்த சதித் திட்டத்திற்கு தமிழ் தேசியக்கூட்டமைப்பும் ஜே.வி.பி யும் துணை போயுள்ளன.

மாகாண சபைகள் தேர்தல்கள் திருத்தச் சட்ட மூலத்தை மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்துடன் நாடாளுமன்றில் நிறை அரசு வேற்றியுள்ளது.

இந்த நிலையில், தற்போது தொகுதிவாரி மற்றும் விகிதாசாரத் தேர்தல் முறைமைகளை இணைத்து புதிதாக அமைக்கப்பட்டுள்ள கலப்புத் தேர்தல் முறைமைக்கு அமைய மாகாண சபைகளுக்கான தேர்தலை நடத்துவதற்கு முதலில் தொகுதிகளின் எல்லைகளை வகுக்க வேண்டும் என்று கூறி காலவரையரையின்றி தேர்தலை நடத்தாது ஒத்திவைக்கத் திட்டமிட்டுள்ளது.

கடந்த இரண்டரை வருடங்களாக தேர்தல் நடத்தப்படாது ஒத்திவைக்கப்பட்டுள்ள உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலை நடத்தாது இருக்கவும் இதே மாதிரியான ஏமாற்று நடவடிக்கையொன்றையே அரசு பின்பற்றியிருந்தது என்றும் மஹிந்த குறிப்பிட்டுள்ளார்.

காலைக்கதிர் Kalaikkathir



## ‘கோடுகளால் பேசியவன்’ சுதர்சனின் நினைவாக நாளை நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், செப். 23

ஊடகவியலாளர் அமரர் அஸ்வின் சுதர்சனை நினைவுகூர்ந்து அஞ்சலி செலுத்தும் நிகழ்வும் ‘கோடுகளால் பேசியவன்’ நூல் வெளியீடும் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ்.சேர் பொன். இராமநாதன் வீதி ஹம்சியா மஹாலில் (ராஜா கிறீம் ஹவுஸ்) கோப்பாய் ஆசிரிய கலாசாலை பிரதி அதிபர் ச.லலீசன் தலைமையில் இடம்பெறும்.

அமரர் அஸ்வின் சுதர்சனை நினைவு கூர்ந்து உரைகளும் இடம்பெற உள்ளன.

சுதர்சனின் குடும்பத்தின் சார்பில் செல்வி பற்றிக் அல்பேட் சுவர்ணா நன்றியுரை ஆற்றுவார்.

(இ)

## தினசரி ராசி பலன் 23 .09.2017

*2017 ஆம் ஆண்டு ஏவிளம்பி வருடம் புரட்டாதித் திங்கள் 07 ஆம் நாள் சனிக்கிழமை. திருதியைத்திதி. பகல் 11.23மணி வரை. பின்னர் சதுர்த்தி. நட்சத்திரம் -சுவாதி பி.இ. 2.15 மணிவரை.பின்னர் விசாகம். அமிர்தசித்தயோகம் முழுவதும். காலை 9.01 மணி முதல் 10.32மணி வரை.* **ராகுகாலம்**- *மு.ப. 9.01 மணி முதல் 10.32 மணி வரை.* **சுபநேரம்**- *பி.ப 03.02 மணி முதல் 04.32 மணி வரை.* **திவசம் செய்ய வேண்டிய திதி**- *புரட்டாதி மாத வளர்பிறை சதுர்த்தி.* **பிறந்த நட்சத்திர வழிபாடு:** *சுவாதி*

### ‘ஜோதிடமணி’ பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி.

**மேஷம் :** மத்திம பலன்கள் காணப்படுகின்றன. பொருள் வரவு மத்திமமாக இருக்கும். தேவையற்ற வீண் செலவுகள் உண்டாகும். வியாபாரம் ஏறு இறங்கு முகமாக இருக்கும்.

**ரிஷபம் :** இன்பமான நாள். பொருளாதாரம் வளமாக இருக்கும். குடும்பத்தில் சந்தோஷம் அதிகரிக்கும். வியாபாரம் நன்கு விருத்தியடையும். வீட்டில் களிப்பும் கலகலப்பும் உண்டாகும்.

**மிதுனம்:** சமபலன்கள் காணப்படுகின்றன. பொருள் வரவு சுமாராக இருக்கும். தேக சுகம் பாதிப்படையும். மருத்துவச் செலவு உண்டாகும். வியாபாரத்தில் மத்திம லாபம் கிடைக்கும்.

**கடகம் :** கவலையான நாள். வருமானம் குறையும். செலவினங்கள் அதிகரிக்கும். தாயாரின் உடல்நிலை பாதிப்படையும். வீண் பிரச்சினைகள் ஏற்படும்.

**சிம்மம்:** சமபலன்கள் காணப்படுகின்றன. வருமானம் சுமாராக இருக்கும். தொழிலில் அலைச்சல்கள் உண்டாகும். எண்ணிய காரியங்கள் தாமதமாகும். பிறர் விஷயங்களில் தலையிடுவதைத் தவிர்க்கவும்.

**கன்னி :** உயர்வான பலன்கள் காணப்படுகின்றன. வருமானம் உயர்வடையும். வெளிநாட்டுத் தொடர்பும் கல்வி மேம்பாடுகளும் புதிய யுக்திகளும் பயனுள்ளனவாக அமையும்.

**துலாம் :** சுபீட்சமான நாள். பணபலம் பெருகும். குடும்ப மகிழ்ச்சி அதிகரிக்கும். வீடு, வாகன வசதிகள் சேரும். வீட்டில் சுபகாரியங்கள் நடக்கும். மாணவர்கள் கல்வியில் மேன்மையடைவர்.

**விருச்சிகம் :** சலனம் மிகுந்த நாள். பொருளாதாரம் நலிவடையும். குடும்பத்தில் கருத்து வேறுபாடுகள் உண்டாகும். வியாபாரம் மந்த கதியில் நடக்கும். நண்பர்கள் பகைவர்களாக மாறுவர்.

**தனுசு :** நன்மையான நாள். பொருளாதாரம் ஏற்றமடையும். குடும்ப ஒற்றுமை பலப்படும். உத்தியோகத்தர்களுக்குப் பணியில் இருந்து வந்த சிரமங்கள் குறையும்.

**மகரம் :** சமபலன்கள் காணப்படுகின்றன. வரவும் செலவும் சமமாக இருக்கும். குடும்பத்தில் அன்பும் பண்பும் நிறைந்திருக்கும். வழக்குகள் தாமதமடையும்.

**கும்பம் :** மேன்மையான நாள். பணப்புழக்கம் அதிகரிக்கும். குடும்ப ஒற்றுமை மேலோங்கும். வியாபாரம் வளர்ச்சி அடையும். மாணவர்கள் கல்வியில் முன்னேறுவார்கள்.

**மீனம் :** மத்திமமான நாள். பணவரவு சுமாராக இருக்கும். குடும்ப அமைதி பேணப்படும். செலவுகள் அதிகரிக்கும். வேலை தேடுவோருக்கு வேலை கிடைக்கும்.

சந்திராட்டமநாள்: பூரட்டாதி 4 ஆம் கால், உத்தரட்டாதி, ரேவதி ஆகிய நட்சத்திரங்களில் பிறந்தோர் இன்று நற்கருமங்களில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும்.

## இடைக்கால அறிக்கை தொடர்பில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி விளக்கம்!



கொழும்பு, செப். 23

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி முக்காலத்தையும் கருதி உருவாக்கப்பட்ட ஆவணம் ஒன்றைச் சமர்ப்பித்துள்ளது என கட்சியின் சிரேஷ்ட உப தலைவர் அமைச்சர் நிமால் சிறிபால டீ சில்வா தெரிவித்துள்ளார்.

அரசமைப்புப் சபையினது செயற்பாட்டுக் குழுவின் இடைக்கால அறிக்கைக்காக ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி சமர்ப்பித்த சிபாரிசுகள் தொடர்பாக விளக்கம் அளிப்பதற்காக நாடாளுமன்றக்கட்டடத்தொகுதியில் நேற்றுமுன்தினம் ஊடகவியலாளர் மாநாட்டு ஒன்று இடம்பெற்றது.

இந்த ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அமைச்சர் நிமால் சிறிபால டீ சில்வா இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்–

அமைச்சுக்களுக்கான விடயங்கள் அரசமைப்பில் உள்வாங்கப்படுகின்றமையுடன் 19 நாடாளுமன்ற உறுப்பினர்களையும் 36 மாகாண சபை உறுப்பினர்களையும் உள்ளடக்கிய செனற் சபை அவசியத்தைச் சுட்டிக்காட்டியிருக்கிறது.

நாடாளுமன்றத் தேர்தலுக்கு 60 சதவீத தொகுதி முறைமையையும் 40 சதவீத விகிதார முறைமையையும் கொண்ட கலப்புத் தேர்தல் முறைமை முன்மொழியப்பட்டுள்ளது.

நாடாளுமன்றத்தில் பெண்களின் பிரதிநிதித்துவம் 25 சதவீதமாகக் காணப்படுவது அவசியமாகும்.

அமைச்சரவையில் அமைச்சர்களின் எண்ணிக்கையை முப்பதுக்கு மட்டுப்படுத்த வேண்டும். பிரதி அமைச்சர்களின் எண்ணிக்கை 30 வரை குறைக்கப்படுவது அவசியமாகும் என்றும் அமைச்சர் நிமால் சிறிபால டீ சில்வா தெரிவித்தார்.

இதேவேளை, மாகாண சபை தேர்தல்களைக் கலப்பு தேர்தல் முறையின் கீழ் நடத்துவது, சகல சபைகளுக்குமான தேர்தல்களை ஒரே தினத்தில் நடத்துவது என்ற விடயங்கள் உள்ளடங்கி இருந்ததால், இந்தத் திருத்த சட்ட மூலத்திற்கு ஆதரவாக வாக்களித்தோம் என்று ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

மாகாண சபைத் தேர்தல் திருத்தச் சட்டமூலத்தை ஆதரித்து வாக்களித்தமை பற்றி மக்கள் விடுதலை முன்னணி விளக்கம் அளித்த போதே அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்–

கடந்த காலத்தில் மாகாண சபைத் தேர்தல்கள் கட்டம் கட்டமாக நடத்தப்பட்டன.

இதனால், அரசியல் சீர்குலைவு ஏற்பட்டது. உள்ளூராட்சித் தேர்தல்களை ஜனவரி மாதத்திலும், மாகாண சபைத் தேர்தல்களை அடுத்த ஆண்டின் நடுப்பகுதியிலும் நடத்தவேண்டும் என்ற நிபந்தனையின் அடிப்படையில் சட்டமூலத்தைஆதரித்துவாக்களித்தோம் என ரத்நாயக்க மேலும் கூறியுள்ளார்.

### இரண்டாம் ஆண்டு நினைவுக்கான சமர்ப்பணம்

## காரைநகர் இந்துவில் நாளை ‘திருவாசக மணிகள்’ வெளியீடு

காரைநகர், செப் 23

காரைநகர் மணிவாசகர் சபையின் அமரர் கலாநிதி சிவஸ்ரீ க.வைத்தீஸ்வரக் குருக்களின் இரண்டாம் ஆண்டு நினைவுக்கான சமர்ப்பண நூல் வெளியீடு நாளை ஞாயிறு பிற்பகல் 3 மணிக்கு காரைநகர் இந்துக் கல்லூரி நடராசா மண்டபத்தில் மணிவாசகர் சபையின் காப்பாளர் பண்டிதர் மு.சு.வேலாயுதப்பிள்ளை தலைமையில் இடம்பெறும்.

காரைநகர் மணிவாசகர் சபையின் தலைவர் வே.முருகமூர்த்தி வரவேற்புரையையும் சிவஸ்ரீ ப.சிவானந்தசர்மா (கோப்பாய் சிவம்) அதிவண.கலாநிதி எஸ்.ஜெபநேசன் ஆகியோர் நினைவுரைகளும் நிகழ்த்துவர்.

திருவாசகமணிகள் நூலின் கௌரவப் பிரதியை செல்வி இராணி வைத்தீஸ்வரக் குருக்கள் பெற்றுக்கொள்வார். ஓய்வுநிலை அதிபர் சைவப்புலவர் க.செல்லத்துரை நூல் நயப்புரையும் சபைச் செயலாளர் பா.இராமகிருஷ்ணன் நன்றியுரையும் ஆற்றுவார்.

(இ)

## நாளை மின் தடை

யாழ்ப்பாணம்,செப்.23

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை ஞாயிறு காலை 8.30 மணி யிலிருந்து மாலை 5 மணிவரை

**யாழ் .பிரதேசத்தில்**–

மானிப்பாய், உடுவில் தெற்கு, ஆனைக்கோட்டை, மானிப்பாய் கார்கில்ஸ் புட் சிற்றி, மானிப்பாய் வைத்தியசாலை, கொல்லங்கலட்டி, மாவைகலட்டி, ஆஸ்பத்திரி வீதி, காரைநகர் வீதி சந்தியிலிருந்து கே.கே.எஸ் வீதி சந்தி வரை, சீனிவாசகம் வீதி, சிவன்பண்ணை வீதியின் ஒரு பகுதி, கே.கே.எஸ் .வீதி துரையப்பா விளையாட்டரங்கிலிருந்து சத்திரச்சந்தி வரை –

சப்பல் வீதி, யாழ்., 2ஆம், 3ஆம், 4ஆம் குறுக்குத் தெருக்கள் வேம்படி வீதி சந்தி வரை, பிரதான வீதி துரையப்பா விளையாட்டரங்கிலிருந்து விஜிதா கபே வரை, யாழ் பொலிஸ் நிலையம், இலங்கை தொலைத்தொடர்பு நிலையம், யாழ் பொது நூலகம், மாவட்ட நீதிமன்றக் கட்டடத் தொகுதி, தேசிய நீர் வழங்கல் வடிகால் சபையின் பிராந்திய முகாமையாளர் அலுவலகம் ஆகிய இடங்களிலும் –

**மன்னார் பிரதேசத்தில்** –

மடுக்கரை பிரதேசம் ஆகிய பிரதேசங்களிலும் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று மின் பொறியியலாளர் எம். துவாரகன் அறிவித்துள்ளார். (இ)






# சுவிஸில் சிறப்புடன் நடந்து முடிந்த தாசீசியஸ் பவளவிழா

- சண்தவராஜா

நாடகர், ஊடகர், ஏடகர் ஏ.சீ. தாசீசியஸின் பவளவிழா அண்மையில் சுவிஸ் நாட்டின் லூற்சர்ன் நகரில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. தமிழர் கலை பண்பாட்டு நடுவம் எனும் அமைப்பால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த நிகழ்வில் தாய்த் தமிழகத்தின் நவீன நாடக முன்னோடிகளுள் ஒருவரும் பெண்ணியச் செயற்பாட்டாளருமான பேராசிரியர் அ.மங்கை முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டார்.

கிழக்கிலங்கைப் பல்கலைக் கழக முன்னைநாள் கலைப் பீடாதிபதி கலாநிதி பால சுகுமார் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்றார்.

ஈழத்து நவீன நாடக முன்னோடி என அறியப்பட்ட தாசீசியஸ் புலம்பெயர் தமிழ் மக்கள் மத்தியில் பிரபல்யம் பெறக் காரணம் ஐ.பீ.சி. வானொலியே. பி.பி.ஸி.வானொலியில் பணியாற்றிக் கொண்டிருந்த காலத்தில் அவர் ஐ.பீ.சி. வானொலியை ஆரம்பித்த பொழுதில், அந்த வானொலி பின்னாளில் தமிழீழப் போராட்டத்தில் மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தும் என எவரும் நினைத்திருக்கமாட்டார்கள்.

வானொலியின் பின்னர் அவர் கால் பதித்த துறை கல்வி. புலம்பெயர் தமிழ்ச் சிறார்களுக்கான தமிழ் வழி எனும் பெயரிலான தமிழ்மொழி மூலப் பாடத்திட்டம் உருவாக்கப்பட்ட போது அதற்கான வளவாளர் குழுவில் போராசிரியர் கா. சிவத்தம்பி உள்ளிட்டோருடன் அவரும் இடம் பெற்றிருந்தார்.

தொடர்ந்து அவர் ரீ.ரீ.என். தொலைக்காட்சியில் பணி புரிந்தார். தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்குத் தேவைப்பட்ட வேளையில் அவரின் பணி நீதிக்கும் சமாதான அபிவிருத்திக்குமான அமைப்பின் ஊடாகத் தொடர்ந்தது.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் நியாயத் தன்மையையும், ஈழ மண்ணில் தமிழர்கள் எதிர்நோக்கிய நெருக்கடிகளையும் இராஜதந்திர வழியில் புரியவைக்க அவர் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டார். அதே வேளை, தனது ஊடக அனுபவத்தை தாயகத்தில் இருந்த போராளிகளிடம் பகிர்ந்து கொண்டு அவர்களுக்குப் பயிற்சிகளை வழங்கவும் அவர் தவறவில்லை.

மறுபுறம், தனது நாடக முயற்சிகளையும் அவர் கைவிடவில்லை. அவர் வசிக்கும் லண்டனிலும், சுவிற்சர்லாந்து நாட்டிலும் அவரின் நாடக முயற்சிகள் தொடர்ந்தன. சுவிஸ் நாட்டில், தொழில்முறை நாடகக் கலைஞர்களை உருவாக்கிய பெருமை அவரையே சாரும்.

பல்துறை வித்தகரான தாசீசியஸின் பவளவிழா கடந்த வருடத்தில் லண்டன் மாநகரில் நடந்தேறி விட்டது. எனினும், அவரிடம் பயின்ற நாடகத்துறை மாணவர்களின் அவா காரணமாக மீண்டும் ஒரு தடவை சுவிஸ் மண்ணிலும் அந்த நிகழ்ச்சி நடந்தேறி இருக்கிறது.

2009 ஆம் ஆண்டின் பின்னான காலச் சூழல், நண்பர்களை எதிரிகளாகவும் எதிரிகளை நண்பர்களாகவும் ஆக்கி விசித்திரம் புரிந்துள்ளது. காலத்தின் தேவையாக உள்ள அரசியல் மற்றும் இராஜதந்திரச் செயற்பாடுகளை ஒதுக்கி வைத்து விட்டு 'துரோகிப் பட்டம் வழங்குவதையோ முழு நேரப் பணியாகக் கொண்டு ஒரு சாரார் களமிறங்கி உள்ளதைக் காண முடிகின்றது.

'சோலி வேண்டாம் என ஒதுங்கிச் செல்பவர்கள் ஒருபுறம். துரோகிப் பட்டங்களைத் தாங்கியவாறு 'பிச்சை வேண்டாம் நாயைப் பிடி என மனம் வெதும்பிச் செல்பவர்கள் மறுபுறம் என விலகி இருப்போரின் எண்ணிக்கையே அதிகரித்துச் செல்லும் நிலையில் தாசீசியஸ் அவர்களின் பவள விழா பல்வேறு தரப்பினரையும் ஒன்று கூடச் செய்வதில் வெற்றி கண்டிருக்கின்றது என்றே கூற வேண்டும்.

கடந்த 8 வருடங்களில் பொது இடங்களில் ஒருசேரக் காணக் கிடைக்காத முகங்களை ஓரிடத்தில் காணக் கூடியதாக இந் நிகழ்வு அமைந்திருந்தது.

சர்ச்சைகளுக்கும் தமிழ் மக்களுக்கும் நெருங்கிய ஒற்றுமை உள்ளமையை இந்த நிகழ்வும் வெளிப்படுத்தத் தவறவில்லை. நடன ஆசிரியை ஒருவர் 'ஏறுது பார், கொடி ஏறுது பார் என்ற பாடலுக்கு ஆடிய நடனம் கலைக் கண்ணோடு பார்க்கப் படாமல் 'தமிழ்த் தேசியத்தின் காவலர்களின்(?) கண்ணால் பார்க்கப்பட்டமை நிகழ்வில் சலசலப்பை ஏற்படுத்தியது.

எனினும், தனது ஏற்புரையில் தாசீசியஸ், அந்த நடனத்தைக் கலைக் கண்ணால் மாத்திரம் அவதானித்துப் பராட்டுதல் தெரிவித்தமை சபையோரின் பலத்த கரவொலிக்குக் காரணமாய் அமைந்திருந்தது.










# "ஓ! அமெரிக்கா ...!! எங்கே போகிறாய்...?" 299

தொகுப்பு: பொன்.வேணு கிருஷ்ணா

அமெரிக்க ஜனாதிபதி ரொனால்ட் ரீகன் மற்றும் சோவியத் தலைவர் மிக்கைல் கோர்பசேவ் ஆல், 8 டிசெம்பர் 1987 அன்று கையெழுத்தான இந்த உடன்படிக்கை, ஐரோப்பாவில் அமெரிக்க அணுஆயுதங்களைக் கணிசமானளவுக்குக் குறைக்க இட்டுச் சென்றது. அதற்கு ஐந்தாண்டுகளுக்கு முன்னர் அணுஆயுதமேந்திய மத்திய தூர பெர்ஷிங் II (Pershing II) ரக ஏவுகணைகள் மேற்கு ஐரோப்பாவில் நிலைநிறுத்தப்பட்ட போது அது வரையில் வரலாற்றில் இல்லாதளவில் மிகப்பெரிய அமைதிக்கான ஆர்ப்பாட்டங்களைத் தூண்டிவிட்டிருந்த நிலையில், அவை திரும்பப் பெறப்பட்டன.



**அமெரிக்க-ரஷ்ய உறவுகள் 'ஆழமாக முடங்கி' போயுள்ளமையுடன், இரு தரப்பிலிருந்தும் 'அவற்றின் அணுஆயுத தளவாடங்களைப் பரந்தளவில் நவீனப்படுத்துவதற்கான' உத்தேசங்கள் குறித்து அறிவிப்புகள் வருகின்றன.**

அமெரிக்கா புதிய ஏவுகணைகளை உருவாக்கி, ஐரோப்பாவில் அவற்றை நிலைநிறுத்தும் என்பது தான் இப்போதைய அபாயமாக உள்ளது என்று Süddeutsche Zeitung எச்சரித்தது. ஒரு மிகப்பெரிய மாற்றம் இயக்கத்திற்குக் கொண்டு வரப்பட்டு, ஐரோப்பா ஒரு புதிய அணுஆயுத சகாப்தத்தின் விளிம்பில் நிற்கக்கூடும் .மத்தியதூர அணுஆயுத ஏவுகணைகள் பனிப்போர் கால பயங்கரமாக இருந்தன. முப்பது ஆண்டுகளுக்கு பின்னர், அந்த பயங்கரம் மீண்டும் திரும்பி வந்துள்ளது.

அமெரிக்க-ரஷ்ய உறவுகள் 'ஆழமாக முடங்கி' போயுள்ளமையுடன், இரு தரப்பிலிருந்தும் அவற்றின் அணு ஆயுத தளவாடங்களைப் பரந்தளவில் நவீனப்படுத்துவதற்கான உத்தேசங்கள் தொடர்பான அறிவிப்புகள் வருகின்றன என்பதே அந்தப் பத்திரிகையின் கருத்துப் படி, அந்த உடன்படிக்கை முறிக்கப்படலாம் என்பதற்கான காரணமாக உள்ளது.

குறிப்பிடும் வகையில், ஜேர்மன் பத்திரிகைகளில் இருந்து வரும் வெடிப்பார்ந்த செய்திகள் முற்றிலுமாக அமெரிக்கப் பத்திரிகை மற்றும் ஒளி, ஒலிபரப்பு ஊடகங்களில் அலட்சியமாக விட்டுவிடப்படுகின்றன.


இந்தச் செய்தி, மேற்கு ரஷ்யா, பெலாரஸ், கலினின்கிராட் ரஷியன் பகுதியில் ரஷ்ய இராணுவம் இந்த மாத இறுதியில் திட்டமிட்டுள்ள இராணுவ ஒத்திகைகள் தொடர்பாக அமெரிக்கா மற்றும் நேட்டோவினது விஷமப்பிரசாரம் அதிகரிக்கப்பட்டுள்ளதற்கு இடையே வந்தது. அத்துடன் வொஷிங்டனும் அதன் கூட்டாளி



களும் ஆயுத கையிருப்புகளை முன்கூட்டியே தயார் செய்து வைக்க மற்றும் பால்டிக் நாடுகள் மீது ஒரு படையெடுப்பைத் தயாரிப்புச் செய்ய அந்த இராணுவ ஒத்திகைகளை ஒரு பொய் காரணமாகப் பயன்படுத்தப்படலாம் என்று கூறிவருகின்றன.

இந்த போர் பயிற்சிகளுக்கு முன்னதாக, பென்டகன், பால்டிக்கில் கூடுதலாக 600 அமெரிக்க விமானப்படை துருப்புகளுடன் சேர்த்து லித்துவேனியாவின் இராணுவத் தளத்தில் ஏழு அமெரிக்க F-15C ரக போர்விமானங்களை நிலைநிறுத்தி உள்ளது.

ரஷ்யாவிலிருந்து அமெரிக்கத் தூதரக அதிகாரிகளை ரஷ்யா வெளியேற்றியதற்கு எதிராக (இதுவே கூட முன்னதாக அமெரிக்காவிலிருந்து ரஷ்யர்களை வெளியேற்றியதற்கு விடையிறுப்பாகப் பதிலுக்குப் பதில் நடவடிக்கையாகும்) பழிவாங்கும் நடவடிக்கையாக ட்ரம்ப் நிர்வாகம் வொஷிங்டன், நியூயோர்க் மற்றும் சான் பிரான்ஸிஸ்கோவில் மூன்று ரஷ்ய தூதரங்களை மூடுவதற்கு



உத்தரவிட்ட நிலையில், இந்த இராணுவ ஆயத்தப்படுத்தல், இராஜாங்க ரீதியில் ஒரு மிகப்பெரிய அமெரிக்க ஆத்திரமூட்டலுடன் இணைந்து நடத்தப்படுகிறது. அந்த நடவடிக்கையை ஒரு சர்வதேச சட்டமீறலாக மாஸ்கோ குற்றஞ்சாட்டியுள்ளது .அந்த நடவடிக்கை, சான் பிரான்ஸிஸ்கோ தூதரகம் மற்றும் ரஷ்ய தூதரக அதிகாரிகளது வீடுகளில் FBI தேடல்களை உள்ளடக்கி இருந்ததாக அது கூறியது.

உலகின் இரண்டு மிகப்பெரிய சக்திகளுக்கு இடையே அதிகரித்து வரும் இந்த அபாயகரமான மோதல், சர்வதேச அளவில், குறிப்பாக கொரிய தீபகற்பத்தில் போர் அபாயங்கள் அதிகரித்து வரும் உள்ளடக்கத்தில் கட்டவிழ்ந்து வருகிறது. வெள்ளியன்று ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின் எச்சரிக்கையில், அமெரிக்கா மற்றும் வட கொரியாவுக்கு இடையே அதிகரித்து வரும் ஆத்திரமூட்டும் மோதல் அந்தப் பிராந்தியத்தை 'ஒரு மிகப் பெரியளவிலான மோதல் விளிம்பின் சம நிலையில்' நிறுத்தி உள்ளதாக எச்சரித்தார்.

இந்த உள்ளடக்கத்தில் தான், ஐரோப்பிய கண்டம் மீதான அபாயகரமான அணு ஆயுத இராஜதந்திரத்தின் ஒரு தீவிரப்பாடு குறித்த அச்சுறுத்தல்கள், இதுபோன்றவோர் உடனடி அபாயத்தை முன்னிறுத்துகிறது.

## இரகசியமானதெனக் குறிப் பிடப்பட்ட ஒரு நேட்டோ ஆவணம்

இரகசியமானதெனக் குறிப்பிடப்பட்ட ஒரு நேட்டோ ஆவணம். இதை Süddeutsche Zeitung மற்றும் பிராந்திய பொது ஒளிபரப்புனர்களான NDR மற்றும் WDR இன் ஒரு கூட்டு ஆய்வு குழு கைவரப்பெற்றிருந்த நிலையில், நேட்டோ ரஷ்யாவுக்கு எதிராக எவ்வாறு நடவடிக்கை எடுக்கலாம் என்ற 39 முன்மொழிவுகளைக் கொண்டுள்ளது. இராஜாங்க அதிகாரிகளைப் பொறுத்த வரையில், நேட்டோவிற்குள் உள்ள உத்தியோகபூர்வ ஆலோசனைகள்'' அமெரிக்காவின் முயற்சியில் இலையுதிர் காலத்தில் முன்னெடுக்கப்படலாம். அந்த ஆவணம். மிகக் கவனமாக ''வகைப்பாடுகளாக, கருதத்தக்கது, தற்போதைக்கு தவிர்க்கக்கூடியது' மற்றும் பரிந்துரைக்குரியதல்ல என்று பிரிக்கப்பட்ட இருக்கும் சகல வாய்ப்புகளது ஒரு தொகுப்பாக'' இருந்தது.

INF உடன்படிக்கைக்குப் பொருத்தமானதாக நேட்டோ கருதுகின்ற ஒரு டஜனுக்கும் அதிகமான கருதத்தக்க வாய்ப்புகளும் கூட, ஏற் கனவே பதற்றமாக உள்ள உறவுகளைத் தீவிரப்படுத்தும் என்று Süddeutsche Zeitung குறிப்பிடுகிறது.

அமெரிக்காவிலிருந்து ஐரோப்பாவிற்கு B-2 மற்றும் B-52 ரக குண்டுவீசிகளை சுழற்சி முறையில் அதிகரிப்பது, முன்கூட்டியே எச்சரிக்கும் அமைப்பு முறைகளை மற்றும் ஏவுகணை அல்லது நீர்மூழ்கிக் கப்பல் பாதுகாப்பை விரிவாக்குவது மற்றும் ''தாக்குதல்களுக்கு எதிராக இராணுவ மற்றும் உள்துறை உள்கட்டமைப்பை'' பலப்படுத்துவது ஆகியவை அந்த முன்மொழிவுகளில் உள்ளடங்கி உள்ளன.




(கேள்வி தொடரும்)



# சுதந்திர வேட்கை

## அத்தியாயம் - VI

## பிரேமதாசாவின் இரகசியத் திட்டம்

முரண்பாட்டுப் பாதையிலே பிரேமதாசா செல்கின்றார் என்பது எமக்குப் புரிந்தது. சிறிலங்கா நாட்டின் ஒற்றையாட்சித் தகைமை மீதான இறுக்கமான பிடி இளகவேண்டுமானால், 6 ஆவது திருத்தச் சட்டம் நீக்கப்படவேண்டும். ஆனால், அதைச் செய்ய பிரேமதாசா தயாராக இல்லை. ஒற்றையாட்சி அரச வடிவுக்குள்ளேயே தீர்வைக் காண அவர் விரும்பினார். ஒரு வளைந்து கொடுக்காத தேசியவாதி என்பதால், ஒற்றையாட்சி அரசமைப்புக்கு மாற்றீடான எந்த ஆட்சி வகையையும் அவர் எதிர்த்தார். ஜே.வி.பி. கிளர்ச்சியை ஒடுக்கி, இந்தியப் படைகளையும் வெளியேற்றியபின், புதியதொரு தலைவலியை அவர் தீர்க்கவேண்டியிருந்தது. விடுதலைப் புலிகளை எவ்வாறு சமாளிப்பது? அவர்களைச் சமாதான வழியில் அணைத்து, பிரதான அரசியல் நீரோட்டத்துக்குள் சேர்த்துக்கொள்ள இன்னமும் வாய்ப்பு இருந்தது. அதற்கு முட்டுக்கட்டையாக இருந்த 6 ஆவது திருத்தச் சட்டத்தை தூக்கி எறிய வேண்டும் அல்லது எதிர்த்துநின்று இராணுவ ரீதியாகப் புலிகளை ஒடுக்கும் மாற்று வழியைக் கண்டுவிடிக்க வேண்டும். இரண்டாவது வழியையே அவருடைய கடும் போக்குடைய அமைச்சர்களும் இராணுவத் தலைமையும் விரும்பியது. அவர்களுடைய நெருக்குவாரத்துக்குப் பிரேமதாசா வளைந்துகொடுத்தார்.

இக்கட்டான சூழ்நிலை ஒன்றில், தமக்குச் சாத்தியமான வெவ்வேறு வழிகளைப் பிரேமதாசா ஆராய்ந்தார். அதுபற்றி அரசுத் தலைவரின் நம்பிக்கைக்குரியவரும் மதியுரைஞருமான பிரட்மன் வீரக்கோன் குறிப்பிடும்போது, ''அவருடைய நான்காவதும் இறுதியானதுமான, சாம, பேத, தானம் தவிர்த்த தண்ட வழிமுறை அரசுத் தலைவரின் கூற்றுப்படி, கவுத்திலிய (சாணக்கிய) வழிமுறையாக அமைகின்றது. இந்திய அமைதிப்படை குறுக்கே நிற்காதபடி நாட்டிலிருந்து வெளியேற்றப்பட்டுவிட்டது. புலிகள் களைத்துப்போய்விட்டார்கள்; ஓய்வும் புத்துயிர்ப்பும் பெற்ற சிறிலங்காப் படைகளை அவர்கள் மீது ஏவிவிட்டால், அவர்களை முற்றாக அழித்தொழித்து விடலாம்; வடக்கு - கிழக்கு மீதும், சிறிலங்கா முழுவதன் மீதும் சட்டம், ஒழுங்கை நிலைநாட்டி, நல்லாட்சியையும், அமைதியையும், சுபீட்சத்தையும் நிறுவிவிடலாம். அவருடைய வேணவாத் திட்டத்தில் இந்த இறுதிவழி கவர்ச்சியாகத் தோன்றியிருக்கவேண்டும்'' என்கிறார். வீரக்கோன் சரியாகக் குறிப்பிட்டமைபோல, விடுதலைப் புலிகளை அழித்தொழிக்க இராணுவ வழிமுறையையே பிரேமதாசா தேர்ந்தெடுத்தார். ஆனாலும், ஒரு கபடத் தனமான வழிமுறையையே அவர் நாடினார். விடுதலைப் புலிகளே பேச்சை முறித்துக்கொண்டு போரைத் தொடங்கினர் என பழி முடித்தார்.

வடக்கிலும் கிழக்கிலும் 1987 ஆம் ஆண்டு, ஜூலை மாதத்திலிருந்து பாசறைகளில் முடங்கிக் கிடந்த சிறிலங்கா ஆயுதப் படைகளை கட்டுப்பாடின்றி வெளியேற்றி, அரசின் அதிகாரத்தை நிலைநாட்டுமாறு எந்தவித எச்சரிக்கையுமின்றி, அவர் அதிகாரம் வழங்கினார். ஜே.வி.பி. கிளர்ச்சியாளர்களுக்கு எதிரான அண்மைக்கால வெற்றிகளால் பெற்ற தன்னம்பிக்கையோடு, இராணுவத் தலைமைப்பீடம் புலிகள் மட்டில் ஆக்ரோஷ உணர்வு காட்டி எதிர்த்து நின்றது. பல சம்பவங்கள் குறிப்பாகக் கிழக்கில் நிகழ்ந்தன. போர் நிறுத்த உடன்படிக்கையை அவை மீறின; பொறுமையைக் கைவிடும் அளவுக்கு விடுதலைப் புலிகளைச் சீண்டின.

கிழக்கு மாவட்டங்களில் உள்ள இராணுவத் தளங்களுக்கும் காவல் நிலையங்களுக்கும் பலம் ஊட்டும் பொருட்டு, 1990 ஆம் ஆண்டு மே மாத இறுதியில் புதிய படையணிகளும் கூடுதலான காவல்துறையினரும் அங்கு அனுப்பிவைக்கப்பட்டார்கள். நகரங்களிலும், பட்டினங்களிலும் படைகளின் காவல் உலாக்கள் அதிகரிக்க, சிங்கள ஆயுதப் படைகளுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே முறுகல்நிலை கூர்மையடைந்தது. எமது போராளிகளை இராணுவத்தினர் துன்புறுத்தும் காரமான ஆத்திரமூட்டும் சம்பவங்கள் இடம்பெற்றன. மட்டக்களப்பு இராணுவ முகாமுக்கு அருகே ஒரு சம்பவம் நடந்தது. இரண்டு மூத்த புலிப் போராளிகளின் ஆயுதங்களைப் பறித்தெடுத்த இராணுவத்தினர் பல மணி நேரம் தார் வீதியில் உச்சி வெய்யிலில் முழந்தாளிட்டு நிற்க, அவர்களை நிர்ப்பந்தித்தார்கள். பெருந்திரளான மக்கள் முன்னிலையில் இது நடந்தது. அவமானம் தாங்காத ஒரு போராளி தனது சயனைட் குப்பியைக் கடித்து அந்த இடத்தில் மரணத்தைத் தழுவினார். அடுத்த போராளி மயங்கி விழும் வரை, இராணுவத்தினர் அவரைத் தாக்கியிருக்கின்றார்கள். இத்தகைய கொடுமைகளும் சித்திரவதைச் சம்பவங்களும் அதிகரிக்க, புலிகளை வேண்டுமென்றே சீண்டி மோதச் செய்வதற்கு சிறிலங்கா அரச படைகள் முயல்கின்றமையை புலித் தலைமை உணர்ந்தது. பாலா அந்தத் தருணத்தில் கொழும்பிலே இருந்தார். அரச படைகளைக் கட்டுப்படுத்துமாறு அரசுத் தலைவரிடம் வேண்டுகோள் விடுத்தார். ஆனால் பலனெதுவும் கிடைக்கவில்லை. இந்தியப் படைகள் விட்டுச்சென்ற வெற்றிடத்தைப் படிப்படியாக நிரப்புமாறு இராணுவ உயர் பீடத்துக்கு பிரேமதாசா கட்டளையிட்டிருக்கின்றமையை ஹமீது மூலமாகப் பின்னர் அறிந்தோம். கிழக்கு மாவட்டங்களான திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறையில் முதலிலும், வட பகுதியில் பின்னரும் முழுக் கட்டுப்பாட்டை நிறுவுமாறு படையினருக்கு அவர் பணிப்புரை வழங்கியிருந்தார். இரண்டாவது ஈழப் போரைத்தவிர்க்கமுடியாது என்றுணர்ந்த பிரேமதாசா, அதற்காகத் தமது ஆயுதப் படைகளைத் தயாராக்கினார்.

> ‘அவருடைய நான்காவதும் இறுதியானதுமான, சாம, பேத, தானம் தவிர்த்த ‘தண்ட’ வழிமுறை அரசுத் தலைவரின் கூற்றுப்படி, கவுத்திலிய (சாணக்கிய) வழிமுறையாக அமைகின்றது. இந்திய அமைதிப்படை குறுக்கே நிற்காதபடி நாட்டிலிருந்து வெளியேற்றப்பட்டு விட்டது. புலிகள் களைத்துப்போய் விட்டார்கள்; ஓய்வும் புத்துயிர்ப்பும் பெற்ற சிறிலங்காப் படைகளை அவர்கள் மீது ஏவிவிட்டால், அவர்களை முற்றாக அழித்தொழித்து விடலாம்; வடக்கு - கிழக்கு மீதும், சிறிலங்கா முழுவதன் மீதும் சட்டம், ஒழுங்கை நிலைநாட்டி, நல்லாட்சியையும், அமைதியையும், சுபீட்சத்தையும் நிறுவிவிடலாம். அவருடைய வேணவாத் திட்டத்தில் இந்த இறுதிவழி கவர்ச்சியாகத் தோன்றியிருக்கவேண்டும்''

மோதலின் உடனடிக் காரணம் ஒரு சிறிய சம்பவமே. மட்டக்களப்புக் காவல் நிலையத்தில் ஜூன் மாதம் 10 ஆம் திகதியன்று முஸ்லிம் பெண் ஒருவர் தொந்தரவு செய்யப்பட்டார். விடுதலைப் புலிகள் தலையிட்டு, காவல்துறையின் நடத்தையைக் கண்டித்தனர். இது விடுதலைப் புலிகளுக்கும் காவல் துறையினருக்கும் இடையே மோதலைத் தோற்றுவித்தது. இந்தச் சண்டை, விரிவடைந்து வடக்கு - கிழக்கின் தமிழ்ப் பகுதிகளில் விடுதலைப் புலிகளுக்கும் சிங்கள ஆயுதப் படைகளுக்கும் இடையே மோதல்களாக வடிவெடுத்தன. ஒரு முழுநிலைப் போர் வெடித்தது. மோதல்களைத் தவிர்க்கும் கடைசிநேர முயற்சியாக ஜூன் மாதம் 11 ஆம் திகதி ஹமீது விமானம் மூலம் யாழ்ப்பாணம் வந்தார். பலாலி விமானத் தளத்துக்கு வெளியே அவரை வரவேற்க, பாலாவுடனும் வேறு போராளிகளுடனும் நான் கூடச் சென்றேன். சந்திப்பு இடம்பெறும் இடத்தைக் ஹமீதுவின் வண்டி அடையுமுன், ஒழுக்கம் மீறிய சிங்கள இராணுவத்தினர் சிலர் அவருடைய வண்டியை நோக்கிச் சுட்டனர். எனினும், பிரபாகரனையும் வேறு புலித் தலைவர்களையும் ஹமீது சந்தித்தார். போர் நிறுத்தம் ஒன்றை ஏற்பாடு செய்ய அவர் மேற்கொண்ட முயற்சி, போரைத் தொடரவேண்டும் என்ற உறுதிபூண்ட கிழக்கு மாகாண அரச படைகளின் பிடிவாதத்தால் தோல்வியில் முடிந்தது. ஹமீது ஒருவரைத் தவிர அவருடைய அரசுத் தலைவரோ, கடும்போக்கு அமைச்சர்களோ அமைதியை விரும்புபவர்கள் அல்லர். போர் தனது குரூர வேகத்துடன் மீளத் தொடங்கியபோது, பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரஞ்சன் விஜயரத்ன நாடாளுமன்றத்திலே, ''முழுமையாகப் புலிகள் மீது பாயப் போகின்றேன். அவர்களை நாம் அழித்தொழிப்போம்'' என்று முழங்கினார். விடுதலைப் புலிகளுக்கும் பிரேமதாசா நிர்வாகத்துக்கும் இடையே இடம்பெற்ற பேச்சு இவ்வாறு தோல்வியடைந்தது.

(தொடரும்...)

முப்பது ஆண்டுகளுக்கு மேல் படிநிலை வளர்ச்சி கண்டு, நீட்சி கொண்ட தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் புரட்சிகர வரலாறு ஒரு பூகம்பமாக வெடித்துச் சிதறி, பிரளயமாகப் பொங்கிப் பிரவகித்து அடங்கியிருக்கின்றது.

அந்த இயக்கத்தின் வரலாற்றுக்குள்ளே பொதிந்து கிடக்கும் அதிசயிக்கத்தக்க நுட்பமான அம்சங்களும் தியாகங்களும் வீர வரலாறுகளும் நம்மில் பலருக்குத் தெரிவதில்லை.

விடுதலைப் புலிகள் இயக்கம் பற்றிய ஒரு பார்வையாக – அந்த இயக்கத்துடன் பங்காற்றிய ஒரு வரலாற்றுப் பயணத்தின் படிமமாக – கட்டவிழ்கின்றது இந்த நூல்.

புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் எழுதிய ‘போரும் சமாதானமும்’ என்ற நூலின் ஊடாக விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தரிசித்த நாம், அவரது துணைவியாரான – ஆஸ்திரேலியப் பெண்ணான – அடேல் பாலசிங்கத்தின் பட்டறிவுப் பதிவு மூலமும் புலிகள் இயக்கத்தின் உட்சூக்குமங்களை இந்தப் புதிய தொடரின் ஊடே அறிந்து கொள்ள முடியும்.

‘சுதந்திர வேட்கை’ என்ற இந்த நூல் முதலில் ஆங்கிலத்தில் ‘Will To Freedom’ என்ற தலைப்பில் வெளியானது. தமிழ்ப் பதிப்பு சரியாக பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னர் 2002 இல் ‘தமிழீழ விடுதலைப் போராட்டம் – உள்ளிருந்து ஒரு நோக்கு’ என்ற பீடிகையுடன் வெளியானது.



104



காலைக்கதிர் Kalaikkathir



# ஈழத் தமிழரின் சுயநிர்ணய உரிமை!

**அமெரிக்கா இவ் வாறு உலகின் ஏக வல்லரசாக உருவாகி வருகையில் பிரித்தா னியா, பிரான்ஸ், ஜேர் மனி தமது பலத்தை இழந்துள்ளன.**

## அமெரிக்காவின் சாதகமான நிலைப்பாடு!

## மாறியுள்ள வெளியுறவு கொள்கை



இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் வலிமை இழந்த பிரித்தானிய அரசு பொதுநலவாயக் கட்டமைப்பு மூலம் தனது பொருளாதார இராஜதந்திர இராணுவப் பலத்தை உருவாக்கியது. இது ஆரம்பத்தில் ஐக்கிய அமெரிக்காவுக்கு எதிரான அமைப்பாகவே இருந்தது.

ஆனால், காலப்போக்கில் சோவியத் ரஷ்யாவின் வளர்ச்சி பொதுநலவாய கட்டமைப்பை அமெரிக்க சார்புக் கட்டமைப்பாக மாற்றியது.

இந்நிலையிலேயே அமெரிக்க ஏகாதிபத்தியத்துக்கு எதிராக அணி சேரா நாடுகளின் கூட்டமைப்பு உருவாகி பலமுடைய அமைப்பாக மாறியது.

ஆனால், அணி சேரா நாடுகள் தமக்கிடையே மோதலில் ஈடுபடும் சூழல், அயல் நாடுகளுடன் மோதலில் ஈடு படும் சூழல் தாராள மயமாக்கம் என்பன வற்றால் பலவீனமடைய அந்தக் கட்டமைப்புச் சோர்ந்து போய்விட்டது.

அமெரிக்கா இவ்வாறு உலகின் ஏக வல்லரசாக உருவாகி வருகையில் பிரித்தானியா, பிரான்ஸ், ஜேர்மனி தமது பலத்தை இழந்துள்ளன.

பொருளாதார ரீதியில் வீழ்ச்சியுற்ற ரஷ்யா சீனாவுடன் இணைந்து பின் பிரேஸில், இந்தியா, தென்னாபிரிக்கா ஆகியவற்றையும் அரவணைத்து BRIC அமைப்பை உருவாக்கி அமெரிக்கா ஏகாதிபத்தியத்தின் வளர்ச்சியை முடக்கியுள்ளது. உண்மையில் அமெரிக்க ஏகாதிபத்தியத்துக்கு எதிரான பொருளாதாரக் கூட்டணியாகவே BRIC உள்ளது.



அண்மைக்காலத்தில் இலங்கையில் அதிகரித்த சீன முதலீடுகளும் இந்திய முதலீடுகளும் ரஷ்யாவின் வர்த்தகத் தொடர்புகளும் தென்னாபிரிக்காவின் இராஜதந்திர தொடர்புகளும் BRIC அமைப்பின் நடைமுறைநாடாக இலங்கை விளங்குகின்றது என்பதை துல்லியமாகக் காட்டுகின்றன. இது அமெரிக்காவின் நலனுக்கு முற்றிலும் எதிரானது.

மேலும் BRIC அமைப்பின் இராணுவ வலிமையை வடகொரியாவின் அணு ஆயுத பலமும் கண்டம் விட்டுக் கண்டம் தாவும் ஏவுகணை வெற்றியும் வெளிப்படுத்தியுள்ளன.

இந்நிலையில் இந்து சமுத்திரத்தில் சீனாவின் வலிமை அதிகரித்துள்ளது. அதாவது அமெரிக்காவின் முழுக் கடற்படைப்பலமும் வடகொரியா மீது திரும்ப, சீனா தனது பட்டுப் பாதைத் திட்டத்தை இது நன்கு பலப்படுத்தும். இதன் போது இலங்கையின் முழுப் பொருளாதாரமும் சீனாவினால் உள்வாங்கப்பட்டு விடும். இந்தியாவும் கூட BRIC ஒழுங்கிலேயே செயற்படும்.


இந்நிலையில் ஐக்கிய அமெரிக்காவுக்கு எவ்வித முதலீடும் இல்லாத இராஜதந்திர நகர்வாக தமிழரின் உரிமைப் போராட்டத்தை அங்கீகரிக்க வேண்டிய சூழல் உள்ளது. அதற்காக உலகளாவிய ரீதியில் உள்ள ஈழத் தமிழர்களிடம் பொது வாக்கெடுப்பை நடத்தும் சூழல் கூட உருவாகும் சாத்தியம் உள்ளது.

அதாவது ஸ்பெயின் நாட்டில் கட்டலோனியர் வாக்கெடுப்பு போல் ஈழத்திலும் நிகழ வாய்ப்புள்ளது. அமெரிக்க ஏகாதிபத்தியத்தை எதிர்த்து பின்லேடனால் நடத்தப்பட்ட தாக்குதல்களால் பயங்கரவாதத்துக்கு எதிரான போர் என இந்தியாவுடன் இணைந்து அணிதிரண்ட அமெரிக்கா தமிழீழ விடுதலைப் போராட்டத்தையும் இலங்கை அரசுடன் இணைந்து 2009 இல் நசுக்கியது.

ஆனால் இன்றோ ஐக்கிய அமெரிக்காவின் இருப்பிற்கு தமிழீழம் இன்றியமையாததாகின்றது.

*யாழ். ஆனந்தன்.*

# உலக இஸ்லாமியர்களின் புத்தாண்டு மலர்ந்தது



உலக முஸ்லிம்கள் அனைவரும் மலரும் புத்தாண்டை எதிர்நோக்கியவர்களாக முஹரம் பிறை அதன் ஆரம்பத்தில் கால் பதித்து நேற்று 22.09.2017 அன்று ஹிஜ்ரி 1438 வருடத்தைப் பூர்த்தி செய்து ஹிஜ்ரி 1439 ஆவது வருடத்தில் பிரவேசித்துள்ளனர்.

பிறக்கும் புத்தாண்டு இஸ்லாமிய வரலாற்று மாபெரும் பாக்கியம்! அன்றைய வரலாற்றில் நிகழ்ந்த ‘ஹிஜ்ரத் நிகழ்வே’ எம் இஸ்லாமிய வருடம் கணிக்க எடுத்துக் கொள்ளப்பட்ட எடுகோள் ஆனது என்று பேஷ் இமாம் மௌலவி ஏ.எம்.ஏ.அப்துல் அஸீஸ் காஸிமி விடுத்துள்ள செய்திக் குறிப்பில் குறிப்பிட்டுள்ளார்.

எம் பெருமானார் சல்லல்லாஹா (அலை) அவர்கள், அலை அவர்கள் நபித்துவம்(நுபுல்வத்) பெற்று அல்லாஹ்வின் கட்டளை ஏற்று தூய இஸ்லாத்தை மதீனா நோக்கி எடுத்துச் சென்றதேதான் இந்நாள் ஆகும். தனித்துவம் மிக்க இஸ்லாம் தத்துவார்த்தமே இவ் வருடக் கணிப்பு என்றால் அது மிகையாகாது.

தமிழ், சிங்கள, ஆங்கில வருடங்கள் சூரிய சுழற்சியை அடிப்படையாகக் கொண்டு கணிக்கப்படுவது இங்கு ஈண்டு கூறக்கூடியது.

எம் தாய் நாடாம் இலங்கையில் கடந்து விட்ட கசப்புணர்வுகள் கடந்த ஹிஜ்ரியதை மீட்டிப்பார்த்து, பெற்ற அனுபவங்களைக் கொண்டு, கிடைத்த உயர்வுகளை மதித்து, பட்ட காயங்களை மறந்து, வேற்றுமையில்லா ஒற்றுமையுடன் அனைவருடனும் சகோதரத்துடனும் சமத்துவத்துடனும் சந்தோஷமாக வாழ்ந்து வளம்பெற இந்நாளில் உறுதி பூணுவோம்.

இறைவா! இம்மனு உயிர்கள் அனைத்தும் தம் சொந்தக் காலில் நின்று நிலைத்து ஜெயம் பெற நீ உறுதுணை புரிவாயாக என்று எம் இரு கரங்களை ஏந்திப் பிரார்த்திக்கின்றோம்! ஏற்றுக் கொள்வாயாக! ஆமீன் ஆமீன் யாரப்பல் ஆலமீன்!

**அல்ஹாஜ் எம்.எம்.ஏ.அஸிஸ் மௌலவி காஸிமி**

யாழ்.கிளிநொச்சி மாவட்ட உலமா சபை சர்வமத தலைவர்.






வவுனியா ஆச்சிபுரம் கிராம சேவகர் பிரிவு எல்லைக்கிராம மக்களை வட மாகாண மகளிர் விவகாரம் மற்றும் கூட்டுறவு அமைச்சர் அனந்தி சசிதரன் நேற்றுமுன்தினம் சந்தித்து கலந்துரையாடினார்.

பல்வேறு நெருக்கடிகளுக்கு முகம்கொடுத்துவரும் ஆச்சிபுரம் கிராம சேவகர் பிரிவுக்குட்பட்ட மக்கள் தமது இன்னல்களை நேரடியாக வட மாகாண அமைச்சர் வந்து பார்வையிட வேண்டும் என் முன்வைத்த கோரிக்கைக்கு அமையவே இச்சந்திப்பு இடம்பெற்றது. ஒளிச்சுடர் சமூக மட்ட அமைப் பின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இச்சந்திப்பில் வட மாகாண சபை உறுப்பினர் ஜி.ரி.லிங்கநாதனும் கலந்துகொண்டு மக்களின் குறைகளை கேட்டறிந்துகொண்டார். இந் நிலையில் இக்கிராமத்தில் சுயதொழில் முயற்சிக்கான ஏற்பாடுகளை வட மாகாணசபை மேற்கொள்ள ஆவன செய்து தரவேண்டும் என ஒளிச்சுடர் அமைப்பினால் கோரிக்கை மனுவும் அமைச்சர் அனந்தி சசிதரனிடம் கையளிக்கப்பட்டது. (இ-100)

### சார்க் அமைப்பின் நடவடிக்கைகள் தொடர்பில்

# ஜனாதிபதி மைத்திரிக்கு நேபாளப் பிரதமர் நன்றி!



கொழும்பு, செப். 23
சார்க் அமைப்பின் நடவடிக்கைகள் தொடர்பில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் அர்ப்பணிப்பு சிறப்பானதென்றும் அது தொடர்பில் அனைத்து சார்க் நாடுகளினதும் நன்றியை அவருக்கு தெரிவிக்கிறேன் என்றும் நேபாளப் பிரதமர் ஸர் பகதூர் டியூபை தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின் 72 ஆவது பொதுச்சபைக் கூட்டத்தொடரில் பங்குபற்றுவதற்காக அமெரிக்காவின் நியூயோர்க் நகரத்திற்கு விஜயம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி மற்றும் நேபாளப் பிரதமருக்குமிடையிலான சந்திப்பு இலங்கை நேரப்படி நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பின்போதே நேபாளப் பிரதமர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தெற்காசிய செயற்பாடுகள் தொடர்பில் இணைந்து செயற்படுவதற்காக பொது அமைப்பான சார்க் அமைப்பின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக முரண்பாடுகளின்றி முன்னெடுக்க வேண்டியதன் தேவையை சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, சார்க் அமைப்பின் செயற்பாடுகளை பலப்படுத்துவது தொடர்பில் தாம் இந்தியா மற்றும் பாகிஸ்தான் தலைவர்களின் சந்திப்பின் போது கலந்துரையாடினார் எனவும் குறிப்பிட்டார்.

இலங்கைக்கும் நேபாளத்திற்கும் இடையிலான இருதரப்பு வர்த்தக உறவுகள் ஆரம்பிக்கப்பட்டு 60 ஆண்டுகள் நிறைவடையும் வேளையில் இரு நாடுகளுக்கும் இடையிலுள்ள இருதரப்பு உறவுகளை அனைத்து துறைகளிலும் மேலும் மேம்படுத்துதல் தொடர்பிலும் தலைவர்கள் இதன்போது கவனம் செலுத்தியதுடன் இரு நாடுகளுக்கு இடையில் பொருளாதார, வர்த்தக, சமய மற்றும் பண்பாட்டு உறவுகளை புதிய அணுகுமுறை ஊடாக முன்னெடுப்பது தொடர்பிலும் விரிவாக கலந்துரையாடினர்.

அண்மையில் இலங்கையில் நடைபெற்ற சர்வதேச பௌத்த மாநாட்டில் பங்குபற்றுவதற்காக இலங்கைக்கு விஜயம் செய்திருந்த நேபாள ஜனாதிபதி, இரு நாடுகளுக்கும் இடையிலான சர்வதேச உறவுகளை பலப்படுத்துதல் தொடர்பில் கலந்துரையாடியதை நினைவூட்டிய ஜனாதிபதி, அதன்போது நேபாள ஜனாதிபதி விடுத்த உத்தியோகபூர்வ அழைப்புக்கமைய தான் எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் நேபாளத்திற்கு விஜயம் செய்யவுள்ளேன் எனத் தெரிவித்தார்.

அனைத்து சந்தர்ப்பங்களிலும் இலங்கைக்கு தேவையான ஒத்துழைப்பை வழங்கத் தயாராக இருக்கின்றேன் எனக் குறிப்பிட்ட நேபாளப் பிரதமர், மனித உரிமைகள் செயற்பாடுகளிலும் நேபாளம் எப்போதும் இலங்கைக்கு ஒத்துழைப்பு வழங்கியது என்றும் குறிப்பிட்டார்.

அண்மையில் நேபாளத்தில் ஏற்பட்ட பூமியதிர்ச்சி காரணமாக ஏற்பட்ட பாதிப்புக்கள் தொடர்பில் கவலை தெரிவித்த ஜனாதிபதி , நட்பு நாடென்ற ரீதியில் அவ்வேளையில் நேபாளத்திற்கு வழங்கக்கூடிய அனைத்து உதவிகளையும் வழங்க நடவடிக்கை எடுத்தோம் என்றும் குறிப்பிட்டார்.

நெருக்கடி நிலையில் உண்மை நண்பராக இலங்கை நேபாளத்திற்கு வழங்கிய ஒத்துழைப்பு தொடர்பில் ஜனாதிபதிக்கு தனது நன்றியை தெரிவித்த நேபாளப் பிரதமர், சார்க் பிராந்தியத்திலுள்ள இரண்டு நாடுகள் என்ற வகையிலும், மிக நீண்ட வரலாற்றைக் கொண்ட இரு நட்பு நாடுகள் என்ற வகையிலும் இந்தச் சந்திப்புத் தொடர்பில் தான் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன் என்றும் இதன்போது குறிப்பிட்டார்.

## பெருந்தொகைப் பணத்துடன் இளம் ஜோடிகள் கைது!

கொழும்பு, செப். 23
பெருந்தொகையான வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு நாணயத்தாள்களை டுபாய் நாட்டுக்கு சட்டவிரோதமாகக் கொண்டுசெல்ல முயன்ற இளம் ஜோடியொன்றை விமான நிலையத்தில் வைத்து சுங்க அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.



இவ்வாறு கைது செய்யப்பட்ட இருவரும் தெமட்டகொடை பகுதியைச் சேர்ந்த 22 வயது மதிக்கத்தக்க பெண்ணும் 24 வயது மதிக்கத்தக்க ஆணும் என சுங்க அதிகாரிகள் மேலும் தெரிவித்துள்ளனர். இந்த ஜோடியிடமிருந்து சுமார் 8கோடி 80 லட்சம் ரூபா பெறுமதியான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நாணய தாள்களை சுங்க அதி காரிகள் கைப்பற்றியுள்ளதுடன் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## மாட்டு வண்டிச் சவாரி போட்டி நாளை

இளவாலை, செப். 23
இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தினால் ஆண்டுதோறும் நடத்தப்படும் மாட்டு வண்டிச் சவாரிப் போட்டி இந்த ஆண்டுக்கான போட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30 மணி தொடக்கம் வட்டுக்கோட்டை கொத்துத்துறை சவாரி விடந்தையில் இடம்பெறவுள்ளது.

ஏ,பி,சி,டி என நான்கு பிரிவுகளாக இடம்பெறும் இப்போட்டியில் முதலிடம் பெறும் ஒவ்வொரு வெற்றியாளர்களுக்கும் முதற் பரிசாக தங்கப் பதக்கமும் மற்றும் ஏனைய வெற்றியாளர்களுக்கு பெறுமதியான பரிசில்களும் வழங்கப்படவுள்ளன. (இ)

## பாக். – இலங்கை ராணுவ அதிகாரிகள் நேற்றுமுன்தினம் முக்கியப் பேச்சு

கொழும்பு, செப். 23
இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள பாகிஸ்தான் இராணுவ உயர்மட்ட அதிகாரிகள் இலங்கை இராணுவ பதவி நிலை அதிகாரி மேஜர் ஜெனரல் அமல் கருணாசேகரவை சந்தித்தனர்.

பாகிஸ்தான் மற்றும் இலங்கைக்கு இடையிலான பாதுகாப்பு படையினர்களுக்கான நான்காவது தடவை இடம்பெறும் பேச்சு தொடர்பில் இராணுவ தலைமையகத்தில் நேற்று முன்தினம் இந்த சந்திப்பு இடம்பெற்றது.

பாகிஸ்தான் இராணுவத்தைச் சேர்ந்த மேஜர் ஜெனரல் ஹபீஸ் உர் ரஹ்மான, பிரிகேடியர் சையத் இம்ரான் அக்தர், கேணல் சஜாட் அலி உள்ளிட்ட அதிகாரிகள் கலந்து கொண்டு பாதுகாப்பு தொடர்பான முக்கிய விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடினர்.



பேச்சுக்கு வருகை தந்த பாகிஸ்தான் இராணுவ பிரதிநிகளுக்கு மேஜர் ஜெனரல் அமல் கருணாசேகர தனது வாழ்த்துக்களை தெரிவித்தார்.

பாகிஸ்தான் இராணுவ உயர்மட்ட அதிகாரிகளுடனான கலந்துரையாடல் இலங்கை இராணுவத்தின் சமிக்ஞை அதிகாரி மேஜர் ஜெனரல் அஜித் விஜேசிங்க தலைமையில் இடம்பெற்றது.

இந்த பேச்சின் போது கூட்டு பயிற்சிகள், ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி மற்றும் பல்வேறு இராணுவ பரிமாற்றத் திட்டங்கள் தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இந்த சந்திப்பினை நினைவு கூரும் வகையில் இரு தரப்பினருக்கும் இடையில் நினைவுச் சின்னங்கள் பரிமாறப்பட்டன.

## இலங்கையிலும் ஐ.எஸ். இயக்கத்திற்கு ஆட்சேர்ப்பு!

கொழும்பு, செப். 23
இலங்கை, பங்களாதேஷ், இந்தியா ஆகிய நாடுகளில் இருந்து ஐ.எஸ். இயக்கத்துக்கான ஆட்சேர்ப்பு இடம்பெற்றுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

இதற்கான புதிய ஆதாரங்கள் கிடைத்திருப்பதாக இந்தியாவின் பி.டீ.ஐ. இணையத்தளம் தெரிவித்துள்ளது.

முகநூல் மற்றும் ஏனைய சமுகவலைத்தளங்களின் ஊடாக நபர்களைத் தொடர்பு கொண்டு, அவர்களை மூளைச் சலவைக்கு உட்படுத்தி, இயக்கத்தில் இணைத்துக் கொள்ளும் நடவடிக்கைகளை தீவிரவாதிகள் முன்னெடுக்கின்றனர்.

இவ்வாறு இலங்கை உள்ளிட்ட நாடுகளில் இருந்து சேர்த்துக் கொள்ளப்படுகின்றவர்கள், பெரும்பாலும் தற்கொலைத் தாக்குதல்களை நடத்துவதற்காக பயன்படுத்தப்படுகின்றன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது

காலைக்கதிர்
Kalaikkathir



# தமிழக மக்களுக்காகவே முதல்வராக விரும்புகிறேன்!

## டில்லி முதல்வருடனான சந்திப்பை அடுத்து கமலஹாசன் அதிரடி

சென்னை,செப்.23

அரசியலுக்கு வருவது உறுதி என்றும் தமிழக மக்களுக்காக முதல்வராக விரும்புகிறேன் என்றும் நடிகர் கமலஹாசன் அதிரடியாக தெரிவித்துள்ளார்.

ஜெயலலிதா மறைவுக்குப் பிறகு தமிழகத்தில் நடைபெற்ற சம்பவங்களுக்கு நடிகர் கமல்ஹாசன் பல அதி ரடி அரசியல் கருத்துக்க ளையும், கண்டனங்களையும் சமூக ஊடகங்களில் தெரி வித்து வருகின்றார். இதற்குப் பல அரசியல் கட்சித் தலைவர்கள் எதிர்ப்பையும் வரவேற்பையும் தெரிவித்து வருகின்றனர்.

இந்த நிலையில், டில்லி முதல்வர் அரவிந்த் கேஜ்ரிவால், நடிகர் கமலஹாசனை நேற்று முன்தினம் சென்னையில் சந்தித்துப் பேசினார். இதனையடுத்து தொலைக் காட்சி ஒன்றிற்கு நடிகர் கமலஹாசன் அளித்துள்ள சிறப்புப் பேட்டியில் கூறியவை வருமாறு-



அரசியலுக்குள் வருவது என்பது முட்களின் கிரீடத்தை தலையில் சுமப்பதற்கு சமமானது. மக்களைப் பொறுத்தவரை அவர்களின் பிரச்சினைகளை யாரும் கண்டு கொள்வதில்லை என்றே நினைக்கின்றனர். அவர்கள் இடது சாரியா, வலது சாரியா அல்லது வேறு சிந்தனையுடையவரா என ஆராய்வதில் ஆர்வமாக இல்லை.

என்னைப் பொறுத்தவரை அரசியல் நிறம் கறுப்பு நிறத்தில் இருப்பதாகவும், அது தான் என்னுடைய நிறம். ஏனெனில் அதில் குங்குமப்பூ உள்ளிட்ட அனைத்து வண்ணங்களையும் உள்ளடக்கிதாக உள்ளன. அரசியல் ஒரு புதை குழி என்பதை மாற்றி அனைவருக்குமானதாக மாற்றும் புதிய தலைமுறை அரசியல் வாதிகளை நாம் கண்டெடுக்க வேண்டும். அப்பொழுது தான் புதைகுழியாக இருக்கும் அரசியலை வசிப்பிடமாக மாற்ற முடியும்.

அரசியல்வாதி ஆவதற்கு முன்னர் என்னை நான் தயார் படுத்திக் கொள்ள வேண்டும். இதற்காக மக்களை நேரில் சந்திக்க உள்ளேன், என்னுடைய மக்கள் சந்திப்பு பயணத்தை விரைவில் அறிவிப்பேன். தமிழக மக்களுக்காக முதல்வராக விருப்பம் உள்ளது என்றார்.

மேலும், உடனடியாக எந்த வொரு மாற்றத்தையும் செய்து விடுவேன் என்று நான் உறுதியளிக்கவில்லை.

ஆனால், மாற்றத்திற்கான செயல் முறையை தொடங்குவதாகவும், அதற்கு நான் தலைவணங்கத் தயாராக இருக்கிறேன் என்பதையே சொல்கிறேன் என்றும் தெரிவித்துள்ளார்.

மக்களின் ஒத்துழைப்பு இன்றி எதையுமே செய்ய முடியாது, ஏன் நான் அவர்களுக்காக உதவ நினைப்பதில் பாதியைக் கூட நிறைவேற்ற முடியாது. என்னைப் பொறுத்தவரையில் நான் பகுத்தறிவாளன்.

கடவுள் இருக்கிறாரோ இல்லையோ இது எல்லாவற்றையும் விட நான் மக்களின் அன்பை மதிக்கிறேன். நான் மக்களுக்கு உதவுவதற்காக எந்த அளவிற்கு வேண்டுமானாலும் கீழே இறங்கிச் செல்லத் தயாராக இருக்கின்றேன். நான் மக்களுக்காக உதவும் ஒரு கருவி அதைத் தவிர வேறு ஒன்றும் சொல்வதற்கில்லை என்று கமலஹாசன் தெரிவித்துள்ளார். (ப)

## பேரறிவாளனுக்கு பரோல் நீடிப்பு?

### தமிழக அரசு பரிசீலனை



சென்னை,செப்.23

பேரறிவாளனின் பரோலை மேலும் ஒரு மாதம் நீடிப்பது குறித்து தமிழக அரசு பரிசீலித்து வருவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

ராஜீவ் கொலை வழக்கில் கடந்த 26 ஆண்டுகளாக சிறையில் அடைக்கப்பட்டிருந்த பேரறிவாளன் முதன்முறையாக கடந்த ஒகஸ்ட் 24ஆம் திகதி பரோலில் வந்தார்.

அவரது தந்தை மற்றும் அவரது உடல்நிலையைக் கருத்தில்கொண்டு, ஒரு மாதம் பரோல் விடுப்பளித்து, தமிழக அரசு உத்தரவிட்டது.

இந்த நிலையில் பேரறிவாளனின் பரோலை மேலும் ஒரு மாதம் நீடிக்கக் கோரி, அவரது தாயார் அற்புதம்மாள், சட்ட அமைச்சர் சி.வி. சண்முகத்தைச் சந்தித்து மனு அளித்திருந்தார்.

மனுவின் அடிப்படையில் நீடிப்பது குறித்து பரிசீலித்து வருவதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

## ரோஹிங்யா முஸ்லிம்கள் நாடு கடத்தப்படுவார்கள்!



புதுடில்லி,செப்.23

ரோஹிங்யா முஸ்லிம்கள் சட்ட விரோதமாக குடியேறி இருக்கின்றனர் எனவும், அவர்கள் நாடு கடத்தப்படுவார்கள் எனவும் உள் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

மியன்மாரில் வசித்து வரும் சிறுபான்மை முஸ்லிம்களான ரோஹிங்யாக்களுக்கு எதிராக இராணுவமும், பிற பிரிவினரும் வன்முறையை கட்டவிழ்த்து விட்டுள்ளனர். இதனால் ஆயிரக்கணக்கான ரோஹிங்யா முஸ்லிம்கள் மியன்மாரை விட்டு வெளியேறி அண்டை நாடுகளில் தஞ்சமடைந்து வருகின்றனர்.

இந்தியாவிலும் டில்லி, உத்தரபிரதேசம், காஷ்மீர் உள்ளிட்ட பல பகுதிகளில் ஏராளமான ரோஹிங்யாக்கள் குடியேறி உள்ளனர். ஆனால் இவர்களை நாடு கடத்த மத்திய அரசு முடிவு செய்துள்ளது. இதற்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டது.

ஆனால், ரோஹிங்யா முஸ்லிம்கள் அனைவரும் சட்ட விரோதக் குடியேறிகள் எனவும் அவர்களை திருப்பி அனுப்ப அரசு கொள்கையளவில் முடிவு எடுத்து இருப்பதாகவும் உயர் நீதிமன்றத்தில் மத்திய அரசு தாக்கல் செய்த பிரமாண பத்திரத்தில் கூறப்பட்டு உள்ளது.

### ராஜ்நாத் சிங் உறுதி



இந்நிலையில், டில்லியில் மனித உரிமை ஆணையம் சார்பில் நடந்த கருத்தரங்கில் பேசிய மத்திய உள்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் கூறியவை வருமாறு:-

இந்தியாவில் குடியேறியிருக்கும் ரோஹிங்யா முஸ்லிம்கள் அகதிகள் இல்லை. ஏனெனில் அகதி நிலையை பெறுவதற்கு அவர்கள் அடைக்கலம் கேட்டு விண்ணப்பித்துஇருக்கவேண்டும்.

ஆனால், எந்த ஒரு ரோஹிங்யாவும் இந்தியாவிடம் இருந்து அடைக்கலம் பெறவும் இல்லை. அதற்காக விண்ணப்பிக்கவும் இல்லை.

இவர்கள் அனைவரும் சட்ட விரோதமாகக் குடியேறியவர்கள். எனவே அவர்கள் திருப்பி அனுப்பப்படுவார்கள். அவர்களை ஏற்றுக்கொள்வதாக மியன்மாரும் கூறியுள்ளது. அப்படியிருக்க ரோஹிங்யா முஸ்லிம்களை திருப்பி அனுப்புவதற்கு சிலர் ஏன் எதிர்ப்புத் தெரிவிக்கின்றனர்? என்று தெரியவில்லை.

பிற நாட்டினரின் மனித உரிமைகள் குறித்து பேசுவதற்கு முன், நமது சொந்த மக்களின் மனித உரிமைகள் குறித்துதான் நாம் பேசவேண்டும். இவ்வாறு ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

# ரோஹிங்யா முஸ்லிம்களுக்கான உதவியை தடுக்க முயற்சிக்கும் புத்த மதத்தவர்கள்

நேப்பித்தா,செப்.23

ரோஹிங்யா முஸ்லிம்களுக்குத் தேவையான உதவிகளை செய்ய அரசு நடவடிக்கை எடுத்து வரும் நிலையில் புத்த மதத்தினர் ஒன்று திரண்டு நிவாரண பொருட்கள் வழங்கக்கூடாது என போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

மியன்மாரில் ராக்கின் மாகாணத்தில் ரோஹிங்யா முஸ்லிம் கிளர்ச்சியாளர்கள் கடந்த மாதம் 25ஆம் திகதி பொலிஸ் மீது தாக்குதல் நடத்தியதைத் தொடர்ந்து, அங்குள்ள அந்த இனத்தவர் மீது வன்முறை கட்டவிழ்த்து விடப்பட்டது. ரோஹிங்யா முஸ்லிம் மக்களின் கிராமங்களுக்குத் தீ வைக்கப்பட்டது.

நூற்றுக்கணக்கானோர் உயிரிழந்தனர். 4 லட்சத்துக்கும் அதிகமானோர் அகதிகளாக பங்களாதேஷில் தஞ்சம் புகுந்துள்ளனர்.

இந்த விவகாரத்தில் தொடர்ந்து மௌனம் காத்து வந்த மியன்மார் நாட்டின் நடைமுறைத் தலைவர் சூகி தன் மீதான சர்வதேச விமர்சனங்களுக்கு பதில் அளிக்கிற வகையில் கடந்த செவ்வாய்க்கிழமை தொலைக் காட்சியில் உரையாற்றினார்.

### மியன்மாரில் தொடரும் அவலம்






அப்போது அவர் ராக்கின் மாகாணத்தில் இயல்பு நிலை திரும்புவதற்கு அரசு நடவடிக்கை எடுத்து வருவதாகவும், அங்கு உள்ள ரோஹிங்யா முஸ்லிம் மக்களுக்கு மனித நேய உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன எனவும் தெரிவித்தார்.

அதன்படி ராக்கின் மாகாணத்தில் உள்ள ரோஹிங்யா முஸ்லிம்களுக்கு தேவையான உதவிகளை செய்ய அரசு நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

அந்த வகையில் செஞ்சிலுவைச் சங்கத்தை சேர்ந்தவர்கள் ஒரு படகில் நிவாரண பொருள்களுடன் ராக்கின் மாகாணத்தின் தலைநகர் சிட்வே வந்தனர். அப்போது அங்கு புத்த மதத்தினர் நூற்றுக்கணக்கானோர் ஒன்று திரண்டு, ரோஹிங்யா முஸ்லிம்களுக்கு நிவாரண பொருள்கள் வழங்கக்கூடாது எனக்கூறி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் அனைவரும் கைகளில் இரும்புக் கம்பி, கட்டை உள்ளிட்ட ஆயுதங்களை வைத்திருந்தமையால் அங்கு பெரும் பதற்றம் உருவானது. இதையடுத்து அங்கு பொலிஸார் குவிக்கப்பட்டனர்.

இதற்கிடையே போராட்டத்தில் ஈடுபட்ட சிலர் நிவாரண பொருள்கள் கொண்டு வந்த படகின் மீது பெற்றோல் குண்டுகளை வீசினர். இதனால் அவர்களுக்கும், பொலிஸாருக்கும் இடையில் மோதல் வெடித்தது.

இதையடுத்து, பொலிஸார் வானத்தை நோக்கி துப்பாக்கியால் சுட்டு போராட்டக்காரர்களை விரட்டி அடித்தனர். மோதலில் ஈடுபட்ட சிலரை பொலிஸார் கைது செய்து விசாரித்து வருகின்றனர். (ப)

## உலகின் பணக்கார பெண்மணி மரணம்



பரிஸ், செப்.23

உலக செல்வந்தர்கள் பட்டியலில் 14ஆம் இடத்தில் இருக்கும் லில்லியன் பெட்டென்கார்ட் (94) வயோதிபம் காரணமாக மரணமடைந்ததார் என அவரது குடும்பத்தினர் அறிவித்துள்ளனர்.

போர்பஸ் நிறுவனத்தின் அறிக்கையின்படி உலக செல்வந்தர்கள் பட்டியலில் 14ஆம் இடத்தில் இருந்தவர் லில்லியன் பெட்டென் கார்ட். அழகு சாதனப் பொருள்கள் தயாரிக்கும் நிறுவனத்தின் முதன்மை பங்குதாரராக இருந்த இவர் உலகின் பணக்காரப் பெண்மணியாக அறியப்பட்டார்.

இந்த நிலையில், பரிஸ் நகரில் வசித்து வந்த பெட்டென்கார்ட் வயோதிபம் காரணமாக நேற்று முன்தினம் மரணமடைந்தார் என அவரது குடும்பத்தினர் அறிவித்துள்ளனர். கடந்த 2012ஆம் ஆண்டுக்குப் பின்னர் அவர் பொது நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளாமல் தனது வீட்டில் ஓய்வில் இருந்து வந்துள்ளார்.

39.5 மில்லியன் அமெரிக்க டொலர்கள் மதிப்புடைய சொத்துக்களுக்கு பெட்டென்கார்ட் அதிபதியாக உள்ளார் என போர்பஸ் இதழ் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## ஜனாதிபதி ட்ரம்பின் மிரட்டலை நாம் கருத்தில் எடுக்கவில்லை!

### வடகொரிய வெளியுறவுத்துறை அமைச்சர் விமர்சனம்

நியூயோர்க், செப்.23

வடகொரியாவை அழிக்க நேரிடும் என ட்ரம்ப் மிரட்டியமை நாய் குரைப்பதை போல இருக் கிறது. அதை நாம் கணக்கில் எடுக்கவில்லை என வடகொரிய வெளியுறவுத்துறை அமைச்சர் ரி யோங் ஹோ விமர்சனம் செய்துள்ளார்.

வடகொரியா தொடர் அணு ஆயுத சோதனை நடத்திவருவதற்குப் பல நாடுகள் கண்டனம் தெரிவித்து வருகின்றன. அதன் காரணமாக அந்நாட்டின் மீது அமெரிக்கா தொடர்ந்து பல வழியில் மிரட்டல் விடுத்து வருகிறது. ஆனால், அதை காதில் வாங்கிக் கொள்ளாத வடகொரியா தொடர்ந்து அணு ஆயுத சோதனைகளை நடத்திவருகின்றது.

இந்த நிலையில், ஐ.நா. பொதுச்சபையில் கடந்த 19ஆம் திகதி முதல்முறையாகப் பேசிய அமெரிக்க அதிபர் ட்ரம்ப் வடகொரியா அணுஆயுத சோதனைகளை நிறுத்தாவிட்டால் அந்நாட்டை முழுமையாக அழிக்க நேரிடும் என எச்சரிக்கை விடுத்தார். மேலும் வடகொரிய அதிபர் கிம் ஜாங் உன்னை ரொக்கெட் மனிதர் எனக் குறிப்பிட்டார்.

ட்ரம்பின் இந்த எச்சரிக்கைகள் குறித்துப்பேசிய வடகொரிய வெளியுறவுத்துறை அமைச்சர் ரி யோங் ஹோ கூறுகையில், நாய் குரைப்பதை போல் எங்களை சத்தமிட்டு மிரட்டலாம் என அவர் நினைக்கின்றமை நாயின் கனவு போன்றது என்று கூறியுள்ளார். நியூயோர்க்கில் செய்தியாளர்களிடம் பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.



## 10 ஆவது பிரிக்ஸ் மாநாடு தென்னாபிரிக்காவில்!

*பிரிக்ஸ் கூட்டமைப்பு நாடுகள் பங்கேற்கும் 10ஆவது உச்சி மாநாடு அடுத்த ஆண்டு தென்னாபிரிக்காவில் நடைபெறும் என உறுப்பு நாடுகளின் வெளியுறவு அமைச்சர்கள் கலந்து கொண்ட கூட்டத்தில் அறிவிக்கப்பட்டுள்ளது.*

*பிரேசில், ரஷ்யா, இந்தியா, சீனா, தென்னாபிரிக்கா ஆகிய ஐந்து நாடுகள் பிரிக்ஸ் அமைப்பில் அங்கம் வகிக்கின்றன. பொருளாதார ஒத்துழைப்பு, வணிகம் ஆகிய துறைகளில் கூட்டாக பங் களிப்பு அளிக்கும் விதமாக ஒவ்வொரு ஆண்டும் இந்த அமைப்பின் உச்சி மாநாடு கூடுகின்றது.*

*நடப்பு ஆண்டுக்கான கூட்டம் சில மாதங்களுக்கு முன்னர் சீனாவில் நடைபெற்றது. இதில், மேற்கண்ட நாடுகளின் தலைவர்கள் கலந்து கொண்டு பேச்சு நடத்தினர். இந்த நிலையில், நியூயோர்க் நகரில் உறுப்பு நாடுகளின் வெளியுறவு அமைச்சர் பங்கேற்ற கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், 2018ஆம் ஆண்டுக்கான 10 ஆவது உச்சி மாநாடு தென்னாபிரிக்காவில் நடத்துவது என முடிவெடுக்கப்பட்டது. மேலும், சர்வதேச தீவிரவாதத்தின் மீதான விரிவான உடன்படிக்கையை ஏற்றுக்கொள்வது என்றும் கூட்டாக முடிவு எடுக்கப்பட்டுள்ளது.*

காலைக்கதிர் Kalaikkathir



# வி.ரி.மகாலிங்கம் வெற்றிக்கிண்ண முதற்சுற்று ஆட்ட முடிவுகள்





(கங்கா)

யாழ்.மாவட்ட கிரிக்கெட் சங்கத்தின் ஏற்பாட்டில், வி.ரி.மகாலிங்கம் ஞாபகார்த்த பிறிமியர் லீக் இருபது – 20 கிரிக்கெட் சுற்றுப் போட்டியொன்று நடத்தப்பட்டு வருகின்றது. யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த 24 துடுப்பாட்ட அணிகள் இதில் பங்குபற்றுகின்றன. அணிகள் 4 பிரிவுகளாக பிரிக்கப்பட்டு, முதற்சுற்று ஆட்டங்கள் லீக் முறையில் நடத்தப்பட்டு வருகின்றன. கடந்த 16 மற்றும் 17 ஆம் திகதிகளில் நடைபெற்ற முதற்சுற்று ஆட்டங்களின் முடிவுகள் வருமாறு:-

**அரியாலை மத்தி 7 விக்கெட்டுகளால் வெற்றி**

கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற ஆட்டத்தில் அரியாலை மத்தி விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து ஸ்ரீ காமாட்சி விளையாட்டுக்கழகம் மோதியது.

நாணயச் சுழற்சியில் வென்ற ஸ்ரீகாமாட்சி விளையாட்டுக்கழக அணி முதலில் துடுப்பெடுத்தாடி, 17.2 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 79 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது. துடுப்பாட்டத்தில் தீபன் 21 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தார்.

பந்துவீச்சில் அரியாலை அணி சார்பாக, ஜெனன் 4, லிதுர்ஜன், லினோர்தன் ஆகியோர் தலா 3 விக்கெட்டுகளைக் கைப்பற்றினர்.

80 ஓட்டங்கள் என்ற வெற்றி யிலக்கை நோக்கி பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய அரியாலை மத்தி அணி, 13.1 ஓவர்களில் 3 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. துடுப்பாட்டத்தில் கிருபாகரன் 25, பிரியசங்கர் 21 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தனர்.

பந்துவீச்சில் ஸ்ரீகாமாட்சி அணி சார்பாக நிருஜன் 2 விக்கெட்டுகளைக் கைப்பற்றினர்.

**பற்றீசியன் அணி 22 ஓட்டங்களால் வெற்றி**

கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற ஆட்டத்தில் பற்றீசியன் அணியை எதிர்த்து ஓல்ட்கோல்ட் அணி மோதியது.

நாணயச் சுழற்சியில் வென்ற பற்றீசியன் அணி முதலில் துடுப்பெடுத்தாடி, 20 ஓவர்களில் 9 விக்கெட்டுகளை இழந்து 175 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டது. துடுப்பாட்டத்தில் றிசாந்த் றியூடர் 40, அனோஜன் 34 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தனர்.

பந்துவீச்சில் ஓல்ட்கோல்ட் அணி சார்பாக, மாதவரூபன் 3, ஸ்ரீகுகன் 2 விக்கெட்டுகளைக் கைப்பற்றினர்.

176 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய ஓல்ட்கோல்ட் 17.5 ஓவர்களில் 153 ஓட்டங்களுக்குச் சகல விக்கெட்டுகளையும் இழந்தது. துடுப்பாட்டத்தில் நிரோசன் 50, பிரியலக்சன் 34, மதுசன் 29 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தனர்.

பந்துவீச்சில் பற்றீசியன் அணி சார்பாக, றதீசன், லிவிங்டன் ஆகியோர் தலா 3 விக்கெட்டுகளையும், மனிக், நோபேர்ட் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளைக் கைப்பற்றினர்.

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அணி 8 விக்கெட்டுகளால் வெற்றி**

சென்.பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற ஆட்டத்தில் ரைரோன் அணியை எதிர்த்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய ரைரோன் அணி, 13.1 ஓவர்களில் 66 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுகளையும் இழந்தது. துடுப்பாட்டத்தில் கணதீசன் 14, மணாளன் 13, ரகுவரன் 13 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தனர்.

பந்துவீச்சில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அணி சார்பாக, லோதீஸ்வரன் 3 ஓவர்கள் பந்துவீச்சி 10 ஓட்டங்களை விட்டுக்கொடுத்து 5 விக்கெட்டுகளையும், ஜெனந்தன் 2 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர்.

67 ஓட்டங்கள் என்ற வெற்றியிலக்கை நோக்கி பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அணி, 7.3 ஓவர்களில் 2 விக்கெட்டுகளை மாத்திரம் இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. துடுப்பாட்டத்தில் செந்தூரன், துவாரகசீலன் ஆகியோர் தலா 17 ஓட்டங்களையும், கல்கோவன் 15 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர்.

**விக்டோரி அணி 2 விக்கெட்டுகளால் வெற்றி**

கொக்குவில் இந்துக் கல்லூரியில் நடைபெற்ற ஆட்டத்தில் சுழிபுரம் விக்டோரி அணியை எதிர்த்து ஜொலிஸ்ரார்ஸ் அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஜொலிஸ்ரார்ஸ் அணி, 18.2 ஓவர்களில் 96 ஓட்டங்களுக்குச் சகல விக்கெட்டுகளையும் இழந்தது. துடுப்பாட்டத்தில் சிவலக்சன், வாமணன் தலா 19 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தனர்.

பந்துவீச்சில் விக்டோரி அணி சார்பாக, பிரியன் 3, ஐங்கரன் 2, விக்கெட்டுகளைக் கைப்பற்றினர்.

97 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய விக்டோரி அணி, 19.3 ஓவர்களில் 8 விக்கெட்டுகளை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. துடுப்பாட்டத்தில் கஜேந்திரன் 48 ஓட்டங்களை ஆட்டமிழக்காது பெற்றுக்கொடுத்தார்.

பந்துவீச்சில் ஜொலிஸ்ரார்ஸ் அணி சார்பாக, குவணனன் 3 விக்கெட்டுகளைக் கைப்பற்றினார்.

**கொக்குவில் மத்திய சனசமூக நிலையம் 14 ஓட்டங்களால் வெற்றி**

கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற ஆட்டத்தில் றெஜின்போ அணியை எதிர்த்து கொக்குவில் மத்திய சனசமூக நிலைய அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய கொக்குவில் மத்திய சனசமூக நிலைய அணி 20 ஓவர்களில் 6 விக்கெட்டுகளை இழந்து 188 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில் சாம்பவன் ஆட்டமிழக்காமல் 58, ஜனுதாஸ் 47, பிரதாபன் 25 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தனர்.

பந்துவீச்சில் றெஜின்போ அணி சார்பாக, அருண்குமார் 4 விக்கெட்டுகளைக் கைப்பற்றினார்.

189 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய றெஜின்போ அணி, 20 ஓவர்களில் 5 விக்கெட்டுகளை இழந்து 174 ஓட்டங்களை மாத்திரம் பெற்று, 14 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. துடுப்பாட்டத்தில் சௌமிதரன் 76 ஓட்டங்களையும், கேதீஸ் 52 ஓட்டங்களையும், கிருஷ்ணன் 26 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர்.

**நியூஸ்ரார் அணி ஓர் ஓட்டத்தால் வெற்றி**

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் நடைபெற்ற ஆட்டத்தில் ரைரோன் அணியை எதிர்த்து நியூஸ்ரார் அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய நியூஸ்ரார் அணி, 20 ஓவர்களில் 6 விக்கெட்டுகளை இழந்து 179 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில் கே.தீபன் 56, மோகனதீபன் 30, கபில்ராஜ் 21 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தனர்.

பந்துவீச்சில் ரைரோன் அணி சார்பாக திலக்சன், கிசாந்தன் ஆகியோர் 2 விக்கெட்டுகளைக் கைப்பற்றினர்.

180 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய ரைரோன் அணி, 20 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 178 ஓட்டங்களைப் பெற்று, 1 ஓட்டத்தால் பரிதாபமாக தோல்வியடைந்தது. துடுப்பாட்டத்தில் ரகுவரன் 73, உதயசாந்த் 30 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர்.

பந்துவீச்சில் நியூஸ்ரார் அணி சார்பாக, கெ.தீபன் 4 விக்கெட்டுகளையும், றொசாந்த், மோகனதீபன் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர்.

**அரியாலை மத்தி 6 விக்கெட்டுகளால் வெற்றி**

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற ஆட்டத்தில் சென்றலைட்ஸ் அணியை எதிர்த்து அரியாலை மத்தி அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய சென்றலைட்ஸ் அணி, 19.5 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 109 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில் ஜேம்ஸ்ஜான்சன் 27, ஜூலியஸ் கலிஸ்ரன் 25 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர்.

பந்துவீச்சில் அரியாலை மத்தி அணி சார்பாக, ஜெனன், ஜரோசன் ஆகியோர் தலா 3 விக்கெட்டுகளையும், டிசாந்த் 2 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர்.

110 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய அரியாலை மத்தி அணி, 15.3 ஓவர்களில் 4 விக்கெட்டுகளை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. கிருபாகரன் 28, ஜனோசன் ஆட்டமிழக்காமல் 24 ஓட்டங்களையும், லிதுர்ஜன் ஆட்டமிழக்காமல் 18 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர்.

பந்துவீச்சில் சென்றலைட்ஸ் அணி சார்பாக, மயூரன், ஜேம்ஸ் ஜான்சன் தலா 2 விக்கெட்டுகளைக் கைப்பற்றினர்.

**ஓல்ட்கோல்ட்ஸ் 5 விக்கெட்டுகளால் வெற்றி**

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற ஆட்டத்தில் ஓல்ட் கோல்ட்ஸ் அணியை எதிர்த்து யூனியன் அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய யூனியன் அணி, 20 ஓவர்களில் 8 விக்கெட்டுகளை இழந்து 168 ஓட்டங்களைப் பெற்றது. லவன்ராஜ் 61, ஜான்சன் 55 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தனர்.

பந்துவீச்சில் ஓல்ட்கோல்ட்ஸ் அணியின் சிறிகுகன் 3, பிரியலக்சன், திலீபன் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளைக் கைப்பற்றினர்.

169 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ஓல்ட்கோல்ட்ஸ் அணி, 17.5 ஓவர்களில் 5 விக்கெட்டுகளை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. துடுப்பாட்டத்தில் நிரோசன் 38, சிறிகுகன் 36, பிரியலக்சன் 30, திலீபன் 23 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தனர்.

பந்துவீச்சில் யூனியன் அணி சார்பாக, ரகுபதி, டக்சஜன் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளைக் கைப்பற்றினர்.

## வி.ரி.மகாலிங்கம் காலிறுதிப்போட்டிகள் ஆரம்பம்



(கங்கா)

யாழ்.மாவட்ட கிரிக்கெட் சங்கம் நடத்திய, வி.ரி.மகாலிங்கம் ஞாபகார்த்த இருபது – 20 சுற்றுப்போட்டியின் காலிறுதி ஆட்டங்கள் நாளையும் நாளை மறுதினமும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மற்றும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானங்களில் நடைபெறவுள்ளன.

யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த 24 துடுப்பாட்ட அணிகள் பங்குபற்றிய இந்தச் சுற்றுப்போட்டியில், அணிகள் 4 பிரிவுகளாக பிரிக்கப்பட்டு, முதற்சுற்று ஆட்டங்கள் லீக் முறையில் நடத்தப்பட்டன. முதற்சுற்றில் ஒவ்வொரு பிரிவுகளிலும் முதலிரு இடங்களையும் பெற்ற அணிகள் காலிறுதிக்குத் தெரிவுசெய்யப்பட்டன. அதனடிப்படையில், ‘ஏ’ பிரிவில் இருந்து அரியாலை மத்தி மற்றும் சென்றலைட்ஸ் அணிகளும், ‘பி’ பிரிவில் இருந்து யாழ்ப்பாணம் ஜொனியன்ஸ் மற்றும் பருத்தித்துறை ஹாட்லியற்ஸ் அணிகளும், ‘சி’ பிரிவில் இருந்து யாழ்ப்பாணம் சென்ரல் மற்றும் பற்றீசியன் அணிகளும், ‘டி’ பிரிவில் இருந்து, திருநெல்வேலி கிரிக்கெட் அணி மற்றும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அணியும் காலிறுதிக்குத் தகுதி பெற்றுள்ளன.

முதலாவது காலிறுதியாட்டத்தில் அரியாலை மத்தி அணியை எதிர்த்து பற்றீசியன் அணி மோதவுள்ளது.

இரண்டாவது காலிறுதியாட்டத்தில் சென்றலைட்ஸ் அணியை எதிர்த்து யாழ்ப்பாணம் சென்ரல் அணி விளையாடும்.

மூன்றாவது காலிறுதியாட்டத்தில் யாழ்ப்பாணம் ஜொனியன்ஸ் அணியை எதிர்த்து திருநெல்வேலி கிரிக்கெட் அணி களமிறங்குகிறது.

நான்காவது காலிறுதியாட்டத்தில் பருத்தித்துறை ஹாட்லியற்ஸ் அணியை எதிர்த்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அணி மோதவுள்ளது.

# வடக்கின் வீராங்கனை அனித்தா ஜெகதீஸ்வரன் தடியூன்றிப் பாய்தலில் மீண்டும் தேசிய சாதனை



வட மாகாணத்தைச் சேர்ந்த அனித்தா ஜெகதீஸ்வரன் தடியூன்றிப் பாய்தலில் 3.48 மீற்றர் உயரத்தைப் பாய்ந்து மீண்டும் தேசிய சாதனை படைத்துள்ளார்.

இதேவேளை இப்போட்டியில், கிழக்கு மகாணத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி கலந்துகொண்ட ஏ.ஏ. கருணாவன்ஸ, 3.10 மீற்றர் உயரம் பாய்ந்து 2 ஆவது இடத்தையும், மேல் மாகாணத்தைச்சேர்ந்த கே.எஸ்.பெரேரா 3.00 மீற்றர் உயரம் பாய்ந்து 3 ஆவது இடத்தையும் பெற்றுக்கொண்டனர்.

விளையாட்டுத்துறை அமைச்சுடன் இணைந்து விளையாட்டுத்துறைத் திணைக்களம் ஏற்பாடு செய்துள்ள 43 ஆவது தேசிய விளையாட்டு பெருவிழாவின் மெய்வன்மைப் போட்டிகள் நேற்றுக்காலை மாத்தறை – கொடவில விளையாட்டு மைதானத்தில் ஆரம்பமாகின.

போட்டிகளின் முதல் நாளான நேற்றுக் காலை நடைபெற்ற பெண்களுக்கான தடியூன்றிப் பாய்தலில் வட மாகாணத்தைச் சேர்ந்த அனித்தா ஜெகதீஸ்வரன் 3.48 மீற்றர் உயரத்தைப் பாய்ந்து மீண்டும் தேசிய சாதனை படைத்தார்.

அவர் இவ்வருடத்தில் மாத்திரம் தொடர்ச்சியாக 4 ஆவது முறையாகவும் தேசிய சாதனையை முறியடித்த வீராங்கனையாக வரலாற்றில் இடம்பிடித்தார். (உ)

# ‘யாழின் கில்லாடி’ இரண்டாம் சுற்று முடிவுகள்

*(கங்கா)*

அரியாலை சரஸ்வதி விளையாட்டுக்கழகத்தின் ஏற்பாட்டில், ‘யாழின் கில்லாடி’ என்னும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியொன்று கடந்த 10 ஆம் திகதி முதல் அரியாலை உதைபந்தாட்ட பயிற்சி மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

இந்தச் சுற்றுப்போட்டியில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த 32 உதைபந்தாட்ட அணிகள் பங்குபற்றுகின்றன. அணிகள் ‘ஏ’, ‘பி’ என இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு போட்டிகள் நொக்கவுட் முறையில் முன்னெடுக்கப்படுகின்றன.

முதற்சுற்று ஆட்டங்கள் நிறைவுபெற்று தற்போது இரண்டாம் சுற்று ஆட்டங்கள் நடைபெற்று வருகின்றன. நடைபெற்று முடிந்த இரண்டாம் சுற்று ஆட்டங்களின் முடிவுகள் வருமாறு:–

20 ஆம் திகதி புதன்கிழமை நடைபெற்ற ஆட்டங்களில், புங்குடுதீவு நசரத் விளையாட்டுக் கழகம் 2:0 என்ற கோல்கள் கணக்கில் பாசையூர் சென்.அன்ரனீஸ் அணியையும், இளவாலை யங் ஹென்றிஸ் அணி 2:0 என்ற கோல்கள் கணக்கில் வதிரி டயமன்ஸ் அணியையும் வென்றன.

21 ஆம் திகதி வியாழக்கிழமை நடைபெற்ற ஆட்டத்தில் இளவாலை சென்.லூட்ஸ் அணி, 1:0 என்ற கோல் கணக்கில் நாவாந்துறை சென். நீக்கிலஸ் அணியை வீழ்த்தியது.







# மாபெரும் உதைபந்தாட்டத் தொடர்!



வடமராட்சி கிழக்கு கொடுக்குளாய் சக்திவேல் விளையாட்டுக் கழகம் கணன் கோம்ஸ் அனுசரணையுடன் வடமாகாண ரீதியாக நடத்தும் உதைபந்தாட்ட போட்டிகள் நேற்று மிகவும் கோலாகலமாக ஆரம்பமாகின.

போட்டியானது 11 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான போட்டியாக நடைபெறுகிறது.

நேற்றைய போட்டியில், காலை 8.30 மணிக்கு கட்டைக்காடு சென்.மேரீஸை எதிர்த்து வெற்றிலைக்கேணி சென்.செபஸ்ரியான் அணி களமிறங்கியது.

காலை 9.30 மணிக்கு கரவெட்டி நவசக்தியை எதிர்த்து மருதங்கேணி கணேசானந்தா வி.கழகம் மோதியது.

மாலை நேர போட்டிகளில் 3 மணிக்கு வெற்றிலைக்கேணி றம்போ வி.கவை எதிர்த்து முரசுமோட்டை விளையாட்டுக் கழகம் களமிறங்கியது.

மாலை 4 மணிக்கு உடுத்துறை செந்தமிழ் வி.கவைஎதிர்த்து அண்ணாசிலையடி வி.க.மோதியது.

**போட்டி விதிகள்**

– நடுவரின் தீர்ப்பே இறுதியானது.

– போட்டி 25-5-25 எனும் நிமிடங்களில் இடம்பெறுவதுடன், இறுதிப் போட்டி 30-05-30 நிமிடங்கள் கொண்டதாக அமையும்.

– ஒவ்வெரு அணியும் கழக சீருடை அணிய வேண்டும்.

– ஒவ்வெரு அணியும் போட்டி ஆரம்பிப்பதற்கு 10 நிமிடங்ளுக்கு முன்னரே தமது வரவை உறுதி செய்ய வேண்டும்.

– போட்டி தொடர்பான முறைப்பாடுகளை தமது கடிதத் தலைப்பில் எழுத்து மூலம் சமர்ப்பிக்க வேண்டும் என்று சக்திவேல் விளையாட்டுக் கழகம் குறிப்பிட்டுள்ளது.

# வடமாகாண அணி அரையிறுதிக்குள் நுழைவு



*(கங்கா)*

43 ஆவது தேசிய விளையாட்டு விழாவின் உதைபந்தாட்டத் தொடரின் அரையிறுதிக்கு வடமாகாண அணி தகுதி பெற்றுள்ளது.

43 ஆவது தேசிய விளையாட்டுப் போட்டியின் போட்டிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. இதில் ஓர் அங்கமாக மாகாண அணிகளுக்கிடையிலான உதைபந்தாட்டத் தொடரும் இடம்பெற்று வருகின்றது.

21 ஆம் திகதி வியாழக்கிழமை மாத்தறை மைதானத்தில் நடைபெற்ற போட்டியில் வடமாகாண அணியை எதிர்த்து வடமத்திய மாகாண அணி மோதியது. இதில் வடமாகாண அணி 3:2 என்ற கோல்கள் கணக்கில் வெற்றிபெற்று, அரையிறுதிக்குள் நுழைந்தது.

## அரசியல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

– இப்படித் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.

அடுத்த ஆண்டு இறுதிக்குள் மாகாண சபைகள் தேர்தலை நடத்தாவிட்டால் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைமைப் பதவியில் இருந்துதாம் நீங்குவார் எனவும் அவர் குறிப்பிட்டார்.

மாகாணசபைகள் தேர்தல் சட்டமூலம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ள நிலையில் அதனால் மாகாண சபைத் தேர்தல்கள் தள்ளிப் போகும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. மாகாண சபை தேர்தலை நடத்துவது தற்காலவாய்ப்புக் குறித்து கருத்து தெரிவிக்கும் போதே விசனத்துடன் அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

## 13ஆவது....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தக்க வன்முறைகளையும் பிரச்சினைகளையும் சந்திக்கும் நிலைமை ஏற்பட்டது என்றும் அவர் குறிப்பிட்டார்.

பிரதமர் ரணில் விக்ரமசிங்க தலைமையிலான வழி நடத்தல் குழுவினால் வரைவு செய்யப்பட்ட புதிய அரசமைப்புக்கான இடைக்கால அறிக்கையை அரசமைப்புச் சபையில் பிரதமர் சமர்ப்பித்து உரையாற்றியமையைத் தொடர்ந்து கட்சித் தலைவர்கள் உரையாற்றினார்கள்.

அரசமைப்பு வரைவு மீதான தமது அபிப்பிராயங்களை முன் வைத்துக் கருத்துத் தெரிவித்த டக்ளஸ் எம்.பி. மேலும் கூறியவை வருமாறு:–

இலங்கை – இந்திய ஒப்பந்தத்தோடு நாம் தேசிய அரசியல் நீரோட்டத்திற்கு வந்தபோது, 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப் படுத்துவதன் ஊடாகவே அரசியல் உரிமைப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வை நோக்கி முன்னேறமுடியும் என்று நம்பினோம். அதையே எமது மக்களிடமும் கூறினோம்.

ஐக்கிய இலங்கைக்குள் சமாதான சகவாழ்வு சாத்தியப்பட வேண்டும் என்றும், தமிழ் மக்கள் தாம் இலங்கையராக இருப்பதற்கு தமிழர் என்ற அடையாளத்தை இழக்க வேண்டும் என்றோ, தமிழராக இருப்பதற்கு இலங்கையர் என்பதை விட்டுக்கொடுக்க வேண்டும் என்றோ விரும்பவில்லை.

இலங்கையராகவும், தமிழராகவும் இந்த நாட்டில் சமத்துவத்துடனும், கௌரவத்துடனும் வாழவே அவர்கள் விரும்புகின்றார்கள். எனவே பிரதமர், தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வொன்றைக் காணவேண்டும் என்று கடுமையாக முயற்சி செய்கின்றமையை நாம் வரவேற்கின்றோம்.

முக்கியமாக புதிய அரசமைப்பானது, 'மத்தியில் கூட்டாட்சி; மாநிலத்தில் சுயாட்சி' என்ற கோட்பாட்டுக்கு அமைவாக, இலங்கைத் தாய் நாடு மதச்சார்பற்ற நாடாக இருக்க வேண்டும். குறிப்பாக வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு சமச்சீரற்ற அதிகாரங்களை வழங்குவதாக அது அமைய வேண்டும்.

மேல்சபை அமையப்பெற வேண்டும், அதில் சிறுபான்மை இனங்களின் பிரதிநிதிகள் ஐம்பதுக்கு ஐம்பதாக இருக்க வேண்டும். பொலிஸ் உட்பட முப்படைகளிலும் இனவிகிதாசாரம் பேணப்படுவதை உறுதி செய்ய வேண்டும். அரசியலில் பெண்களுக்கு சமபங்கு வழங்கப்படவேண்டும். – என்று டக்ளஸ் எம்.பி. தமது உரையில் வலியுறுத்தினார்.

## நாடாளு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இம்மாதம் 26ஆம் திகதியும் எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 9 ஆம் திகதியும் பிற்பகல் 1.00 மணி தொடக்கம் மாலை 7.30 மணிவரையில் ஏனைய அமர்வுகள் இடம்பெறும் என்றும் சபாநாயகர் தெரிவித்துள்ளார். (உ)

## குணசீலன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்சியில் வேறு யாருக்கேனும் அப்பதவி வழங்கப்பட்டால் அவர்கள் அதை ஏற்கக் கூடாது என்றும் –

ரெலோவின் தலைமைக் குழு கூடி முடிவெடுத்திருந்தது. அந்தக் கூட்டத்தில் குணசீலனும் இருந்தார்.

ஆனால் பின்னர், அவர் தம்பாட்டில் – கட்சியின் அனுமதியின்றி, கட்சி முடிவுக்கு மாறாக – அமைச்சுப் பதவியை ஏற்றுக் கொண்டார்.

இது ரெலோவுக்குள் பலத்த சர்ச்சையை ஏற்படுத்தியிருந்தது. ''ரெலோவில் அரசியல் கட்டாக்காலிகளுக்கு இடமில்லை" – என்று அதன் செயலாளர் நாயகம் சிரேஷ்ட சட்டத்தரணி என்.ஸ்ரீகந்தா கூறும் அளவுக்கு நிலைமை சென்றிருந்தது.

இந்த நிலையிலேயே இவ்விடயம் குறித்து ஆராய்வதற்காக ரெலோ தலைமைக் குழு இன்று கூடுகின்றது.

கட்சியின் கட்டுப்பாட்டை மீறினார் என்ற குற்றச்சாட்டின் பேரில் முன்னாள் வடமாகாண அமைச்சர் பா.டெனீஸ்வரனுக்கு எதிராக ரெலோ தலைமைக் குழு ஒழுங்கு நடவடிக்கைகளை எடுத்திருந்தமை தெரிந்ததே. (உ)

## மாத...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களின் கைகளுக்குள் போய்ச் சேரவிருக்கின்றன.

அரசமைப்புக்குக் கொண்டுவரப்பட்ட இருபதாவது திருத்தம் மூலம் காலாவதியாகும் இந்த மூன்று மாகாண சபைகளின் பத விக் காலத்தை மேலும் ஒரு வருடத்துக்கு நீடிக்க முயற்சி எடுக்கப்பட்டது.

ஆனால் அந்த அரசமைப்புத் திருத்தத்தை நிறை வேற்றுவதாயின் சர்வஜன வாக்கெடுப்பு மூலம் மக்களின் அனுமதியும் பெறப்படவேண்டும் என உயர்நீதி மன்றம் 2–1 ஆகப் பிரிந்து தீர்ப்பளித்தமையால் அந்தத் திருத்தத்தை முன்னெடுக்கும் முயற்சியை அரசு கைவிட்டது.

அதனால் இப்போது இந்த சபைகளின் பதவிக்காலம் முடிவுறும்போது அவற்றின் நிர்வாகம் ஆளுநர்கள் வசமாகின்றன.

இனி மாகாண சபைகள் தேர்தலை ஒட்டி கடந்த புதனன்று நிறைவேற்றப்பட்ட திருத்தச் சட்டத்துக்கு அமைவாக, ஒவ்வொரு மாகாண சபைகளுக்குமான தொகுதிகளை வகுத்துப் பிரிப்பதற்காக எல்லை நிர்ணயக் குழுக்கள் நியமிக்கப்பட்டு, அவை எல்லைகளை வகுத்துப் பிரித்து, அறிக்கையாகத் தந்த பின்னர், அந்த அறிக்கைகளின் அடிப்படையிலான வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட வேண்டும். அதன் பின்னரே மாகாண சபைகளுக்கான தேர்தல்களை நடத்த வாய்ப்பு ஏற்படும்.

அதுவரை இந்த மாகாணங்களில் ஆளுநர்களின் நிர்வாகமே நீடிக்கும். (உ)

## கொழும்பில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. திடீரென பெய்த மழை காரணமாக அந்த பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வாகனங்களின் மீது மணல் விழுந்துள்ளமையை அவதானிக்க முடிந்துள்ளது.

அணிந்திருந்த ஆடைகளில் மணல் விழுந்தமையினால் அந்தப் பகுதியில் சென்ற பலர் கடும் அசௌகரியத்திற்கு முகங்கொடுத்துள்ளனர்.

இதுவொரு சாதாரண விடயமல்ல எனவும், இலங்கையில் இவ்வாறு அவதானிக்கப்பட்ட முதல் சந்தர்ப்பம் இதுவெனவும் அங்கிருந்த ஒருவர் தெரிவித்துள்ளார். (உ)

## சுமந்திரன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பயணமாக நேற்றிரவு அமெரிக்காவுக்குப் பயணமானார்.

அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா, விஜித்த ஹேரத், ரவீந்திர சமரவீர, எம்.ஏ.சுமந்திரன் உட்பட ஆறு பேர் கொண்ட நாடாளுமன்றக் குழு ஒன்று ஒரு வார காலம் வாஷிங்டனில் சுற்றுப் பயணம் ஒன்றை மேற்கொள்கின்றது. அந்தப் பயணம் எதிர்வரும் 29 ஆம் திகதி முடிவடையும்.

அதன் பின்னர் எம்.ஏ.சுமந்திரன் எம்.பி. நியூயோர்க் செல்வார். அங்கு ஐ.நா. தொடர்புடைய தரப்புகளுடன் அவர் சந்திப்புக்களை நடத்துவார் எனத் தெரிகின்றது. ஒக்ரோபர் 6 ஆம் திகதி அவர் கொழும்பு திரும்புவார். (உ)

## இராணுவ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதில் சாட்சியமளிக்கும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார். அந்த சாட்சியத்தில் அவர் மேலும் கூறியவை வருமாறு:–

யுத்தம் நடைபெற்றபோதும், யுத்தம் முடிவடைந்த பின்னரும் நான் இலங்கை இராணுவத்தின் புலனாய்வுப் பிரிவுடன் நெருக்கமாக செயற்பட்டு வந்தேன்.

இராணுவப் புலனாய்வுப் பிரிவின் சில அதிகாரிகளுக்கு தனிப்பட்ட ரீதியில் நான் உதவியுள்ளேன்.

பிரிவினைவாதிகளிடமிருந்து நாட்டைக் காப்பதற்காகவே இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்கு ஆதரவு அளித்துவந்தேன்.

ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட காணாமற்போனமை தொடர்பாக தற்போதைய அரசாங்கம் ஆட்சிக்கு வந்த பின்னர், சில முக்கிய இராணுவப் புலனாய்வுத் துறை அதிகாரிகளைப் பொலிஸார் கைது செய்தனர்.

தற்போதைய அரசாங்கத்திலுள்ள சிலர் இராணுவப் புலனாய்வுப் பிரிவு அதிகாரிகளின் செயல்பாடுகளை முடக்க முயற்சிக்கின்றனர். – என்றார்.

வண. ஞானசார தேரரின் சாட்சியத்தைத் தொடர்ந்து, இந்த வழக்கு விசாரணையை அடுத்த மாதம் மூன்றாம் திகதிக்கு கொழும்பு மேல்முறையீட்டு நீதிமன்றம் ஒத்தி வைத்தது.

ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட காணாமல் போனமை தொடர்பான வழக்கு விசாரணையின் போது நீதிமன்றத்தை அவமதிக்கும் வகையில் நடந்து கொண்டார் எனக் குற்றஞ்சாட்டி வண. ஞானசார தேரருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ)

# பிரபாகரனுக்கு நினைவுத் தூபி; பிக்குவின் யோசனைக்கு வரவேற்பு

### தமிழரசுக் கட்சிச் செயலர் தெரிவிப்பு

"நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்காக, தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுக்கு, நந்திக் கடலில் நினைவுத்தூபி அமைத்திருக்க வேண்டும். – என, பொதுபல சேன அமைப்பைச் சேர்ந்த பௌத்த பிக்கு ஒருவர் கூறியுள்ளமையை இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி வரவேற்றுள்ளது.

இது, துட்டகைமுனு மன்னன் அன்று கையாண்ட விடயம் என்பதை நினைவூட்ட விரும்புகிறோம் என்று, அந்தக் கட்சியின் பொதுச் செயலாளரும் கிழக்கு மாகாண விவசாய அமைச்சருமான கி.துரைராஜசிங்கம் தெரிவித்தார்.

மட்டக்களப்பு சவுக்கடி கிராமத்தில் 33 தமிழர்கள் படுகொலை செய்யப்பட்ட 27ஆவது ஆண்டு நினைவேந்தல் நேற்று முன்தினம் அனுஷ்டிக்கப்பட்டது. அந்நிகழ்வில், கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

எல்லாளன் என்ற தமிழ் மன்னனின் வீரத்துக்குத் தலைவணங்கி, அவருக்குத் தூபி அமைத்து வணக்கம் செலுத்த வேண்டும். அந்த இடத்தில் ஓசையிடாமல் செல்ல வேண்டும் என்று எல்லாம் கட்டளையிட்டு, 2,200 ஆண்டுகளுக்கு முன்பு துட்டகைமுனு மன்னன் சரித்திரத்தில் பதித்த இந்த விடயத்தை, இந்த நாட்டு அரசாங்கம் ஏன் தற்போது செய்ய முடியாது? என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## காணி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புதிய அரசமைப்புக்கான இடைக்கால அறிக்கை தொடர்பில் நேற்று யாழ். ஊடக அமையத்தில் தாம் நடத்திய பத்திரிகையாளர் சந்திப்பிலேயே இந்த விடயத்தை அவர் தெரிவித்தார்.

இடைக்கால அறிக்கையில் மாகாணங்களுக்கான பொலிஸ் அதிகாரங்கள் குறித்து பிரஸ்தாபிக்கப்படவில்லை.

காணி அதிகாரமும் தெளிவாக வரையறை செய்யப்படவில்லை. காணி அதிகாரம் மத்தியிடமும் மாகாணத்திடமும் இருக்கும் என்று ஓர் இழுபறி நிலையே உள்ளது.

தேசிய பாதுகாப்புக் கருதி மத்திய அரசு மாகாண சபையின் சம்மதமின்றியே அரச காணிகளைக் கையாள முடியும் என்று கூறப்பட்டுள்ளது. அதுதான் நிலைமை என்றால் – உண்மை என்றால் – தற்போதுள்ள நிலைமையை விட இதில் என்ன முன்னேற்றம் ஏற்பட்டிருக்கின்றது.

அரசுக்கு எல்லா விடயங்களிலும் ஒத்து ஊதிக் கொண்டிருக்கின்ற கூட்டமைப்பு இந்த விடயத்தைத் தெளிவுபடுத்த வேண்டும்.

மைத்திரிபால சிறிசேனவின் தலைமையிலான சுதந்திரக் கட்சி, மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான கூட்டு எதிரணி, ஜாதிக ஹெல உறுமய ஆகிய மூன்றுமே ஒற்றையாட்சியே தொடரவேண்டும் எனப் பிடிவாதமாக நிற்கின்றன. ஒற்றையாட்சி பற்றி தற்போதைய அரசமைப்பின் 2 ஆவது உறுப்புரையில் கைவைக்கக்கூடாது என்று ஒற்றைக் காலில் நிற்கின்றன.

ஐக்கிய தேசியக் கட்சியும் கூட சிங்களத்தில் 'எக்கராஜ்ஜிய' தமிழில் 'ஒருமித்தநாடு' ஆங்கிலத்திலும் அதேபோன்று குறிப்பிட்டு ஒற்றையாட்சியினுள்தான் தீர்வு என்று தெளிவாகப் போராடுகின்றது.

மீண்டும் மஹிந்த ராஜபக்ஷ ஆட்சிக்கு வந்துவிடக்கூடாது என்பதற்காக நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறையை நீடிக்கமைத்திரி தலைமையிலான சுதந்திரக் கட்சி கோருகின்றது.'

ரணிலோ கடந்த காலக் கனவுகளுடன் நிறைவேற்று அதிகாரம் கொண்ட பிரதமர் ஆட்சி முறையை வலியுறுத்தி எதிர்பார்க்கின்றார்.

இவற்றுக்கு நடுவில் தமிழர்களின் அடிப்படை அபிலாஷைகளை – எதிர்பார்ப்புகளை – நீதி, நியாயமான வேண்டுதலை – நிறைவு செய்யும் ஓர் ஏற்பாடாக இந்த இடைக்கால அறிக்கை அமையவில்லை – என்றார் அவர். (உ)

## பொருத்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நீதிமன்றத்தில் தாக்கல் செய்தார் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன்.

ஏற்கனவே இது போன்ற வழக்கு ஒன்றை அவர் தாக்கல் செய்திருந்தார். ஆனால், அமைச்சரவைத் தீர்மானத்துக்கு அமைவாகவே அந்தப் பொருத்து வீட்டுத் திட்டம் அமைப்பதற்கான கேள்விப் பத்திரம் வழங்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டமையால் அமைச்சரவைத் தரப்பும் அந்த மனுவில் எதிர் மனுதாரர்களாகக் குறிப்பிடப்படாதமை ஒரு குறைபாடு என அப்போது நீதிமன்றத்தில் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

அதனால், மீண்டும் ஒரு மனு தாக்கல் செய்யும் உரித்துடன் முன்னைய மனுவை மனுதாரரான சுமந்திரன் வாபஸ் பெற்றிருந்தார்.

நேற்று அவர் மீண்டும் புதிய மனுவைத் தாக்கல் செய்தார்.

மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் உட்பட அமைச்சரவையின் முழு அமைச்சர்களும் நேற்றுத் தாக்கல் செய்யப்பட்ட மனுவில் எதிர் மனுதாரர்களாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

மற்றும் சட்டமா அதிபர், மேற்படி பொருத்து வீடுகளை அமைக்கும் ஒப்பந்தத்தைப் பெற்றுள்ள ஆர்செலர்மிட்டல் நிறுவனம் ஆகிய தரப்புகளும் எதிர் மனுதாரர்களாகப் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

மொத்தமாக 49 எதிர்மனுதாரர்களின் பெயர்கள் இந்த அடிப்படை உரிமை மீறல் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளன. (உ)

## கமலஹாசன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கைத் தமிழ் மக்கள் தொடர்பில் தமிழக அரசியல்வாதிகள் இதுவரை செயற்பட்டமை போன்று அல்லாமல், அதற்கும் அப்பால் சென்று தாம் காத்திரமான நடவடிக்கை எடுப்பார் என அவர் உறுதியளித்துள்ளார்.

ஆர் என கொழும்பு சிங்கள ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

இந்திய ஊடகம் ஒன்றுக்குத் தான் வழங்கிய செவ்வியில் கமலஹாசன் இந்த விடயத்தைக் குறிப்பிட்டார் என கொழும்பு ஊடகம் சுட்டிக்காட்டியுள்ளது.

(கமலஹாசன் பற்றிய மற்றோர் செய்தி 14ஆம் பக்கத்தில்)

# மாகாணசபை தேர்தல் சட்ட திருத்தங்கள் எமது ஒற்றுமைக்கு கிடைத்த வெற்றிகள்!



அமைச்சர் மனோ கணேசன் கூறுகிறார்

கொழும்பு, செப். 23

மாகாணசபைகள் சட்டத்துக்கு கடைசி நேரத்தில் கொண்டு வரப்பட்ட திருத்தங்கள், தமிழ் முற்போக்கு கூட்டணி என்ற முறையில் எமது ஒற்றுமைக்கும், கூட்டணிக்கு வெளியே ஏனைய சிறுபான்மை கட்சிகளுடன் ஏற்படுத்திக்கொண்ட ஒற்றுமைக்கும் கிடைத்த வெற்றிகள் என ஜனநாயக மக்கள் முன்னணி-தமிழ் முற்போக்கு கூட்டணித் தலைவரும், தேசிய சகவாழ்வு கலந்துரையாடல் மற்றும் அரச கரும மொழிகள் அமைச்சருமான மனோகணேசன்தெரிவித்துள்ளார்.

தேசிய சகவாழ்வு கலந்துரையாடல் மற்றும் அரச கரும மொழிகள் அமைச்சு கேட்போர் கூடத்தில் மட்டக்குளி வட்டாரசெயற்குழுக்கூட்டம், வட்டார அமைப்பாளர் எஸ். ராஜேந்திரன் ஏற்பாட்டில் நடைபெற்றது.

இதில் கலந்துகொண்டு உரையாற்றிய அமைச்சர் மனோ கணேசன் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

மாகாணசபைகள் சட்டத்துக்கு புதிய சட்ட திருத்தம் வருகின்ற போது, அரசாங்கத்துக்குள்ளேயே இருந்தபடி கூட்டாக பல திருத்தங்களை நாம் முன் வைத்தோம். அவை ஏற்றுக்கொள்ளப்பட்டபின் சமூகமாக வாக்களிப்பு நடைபெற்றது.

இதன்மூலம் ஒட்டு மொத்தமான தமிழ் பேசும் மக்களுக்கு புதிய கலப்பு தேர்தல் முறையின் கீழ் வரவிருந்த ஆபத்து குறைக்கப்பட்டுள்ளது. எதிர்காலத்தை மனதில் கொண்டு இந்தப் பணிகளை நாம் கூட்டாகச் செய்து முடித்துள்ளோம்.

தொகுதி, விகிதாசார தெரிவுகளுக்கு இடையில் இருக்கின்ற கணக்கீடு 60:40 என்பதில் இருந்து 50:50 என்பதற்கு உயர்த்தப்பட வேண்டும். தொகுதி எல்லை மீள்நிர்ணயம் செய்யப்பட இனங்களின் பிரதிநிதிகளைக் கொண்ட குழு அமைக்கப்பட வேண்டும்.

அந்தக் குழுவின் முடிவுகள் ஏகமனதாக இருக்க வேண்டும். அந்தக் குழுவின் அறிக்கை, நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்பட வேண்டும். நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை கிடைக்காவிட்டால், அது பிரதமர் தலைமையிலான மீளாய்வுக் குழுவிடம் சமர்பிக்கப்பட வேண்டும். அந்தக் குழுவிலும் பிரதான இனப்பிரிவுகளை பிரதிநிதித்துவம் செய்யும் உறுப்பினர்கள் இடம்பெற வேண்டும். தொகுதி எல்லை மீள்நிர்ணயத்தின் போது அவசியமானால், சிறுபான்மை இன மக்களின் பிரதிநிதித்துவங்களை கருத்தில் கொண்டு சிறு சனத்தொகை கொண்ட தொகுதிகளும், பல் அங்கத்தவர் தொகுதிகளும் அமைக்கப்பட வேண்டும் ஆகிய சிறுபான்மைக் கட்சிகளின் திருத்தங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

இவற்றின் மூலம் பழைய விகிதாசார தேர்தல் முறையிலிருந்து கலப்பு முறைக்கு மாறும் போது, வரவிருந்த ஆபத்துகள் பெரிதும் குறைக்கப்பட்டுள்ளன.

ஏற்கனவே, கொண்டுவரப்பட்ட உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் சட்டமூலத்தின் மூலம், அடுத்த வருடம் ஜனவரி மாத இறுதியளவில் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் நடைபெறும். இந்த புதிய சட்டத்தின் மூலமாக மாகாணசபைகளுக்கான தேர்தல்கள் அடுத்த வருட நடுப்பகுதியில் நடைபெறும்.

மாகாண சபைகளுக்கான தேர்தல் தொகுதிகளை அமைக்கும் பணிகள் இப்போது எம் முன் இருக்கின்றன. முதலில் தொகுதி எல்லை மீள்நிர்ணயம் செய்யப்பட இனங்களின் பிரதிநிதிகளைக் கொண்ட குழுவை அமைப்பதில் நாம் கவனம் செலுத்துவோம். அடுத்தது, அமைக்கப்படும் புதிய மாகாணசபை தேர்தல் தொகுதி மீள்நிர்ணயங்களை கண்காணிப்போம்.

எமது இந்த வரலாற்று சிறப்பு மிக்க பணிகள், வெளியில் இருந்தபடி எம்மை விமர்சனம் செய்துகொண்டு இருக்கும் வெற்றுவேட்டு நபர்களுக்கு தெரியவும் தெரியாது. விளங்கவும் விளங்காது. நாம் புதிய தேர்தல் முறைகளை உருவாக்கி, எல்லை மீள்நிர்ணயம் செய்து தொகுதிகளையும், வட்டாரங்களையும் உருவாக்கி தர அவற்றில் போட்டியிட்டு தமிழ் வாக்குகளை சிதறடிக்க சில தேர்தல் கால காக்கை காளான்கள் இங்கே காத்திருக்கின்றன. இவற்றுக்கு நாம் இடம் கொடுக்க கூடாது. கொழும்பு மாநகரில் தமிழ் மக்கள் பெரும்பான்மையாக வாழும் எல்லாத் தொகுதிகளிலும், உங்கள் மட்டக்குளி உட்பட எல்லா வட்டாரங்களிலும் ஜனநாயக மக்கள் முன்னணி வேட்பாளர்கள் நிச்சயமாக வெற்றி பெறுவார்கள். இதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## யோஷிதவின் பாட்டிக்கு எப்.சி.ஐ.டி. அழைப்பு!

கொழும்பு, செப். 23

யோஷித ராஜபக்ஷவின் பாட்டி டெய்ஸி பொரஸ்ட் டிற்கு பொலிஸ் நிதி குற்றத் தடுப்பு பிரிவில் வாக்குமூலம் வழங்குமாறு கொழும்பு பிரதான நீதவான் நேற்று உத்தரவு பிறப்பித்துள்ளார்.

தெஹிவளையில் ஐந்து கோடி ரூபா பெறுமதியான காணியுடனான வீடொன்றை யோஷித ராஜபக்ஷ தனது பாட்டியின் பெயரில் வாங்கியுள்ளார்.

இந்த ஆடம்பர காணியுடனான வீட்டை வாங்குவதற்கு 50 மில்லியன் ரூபா பணம் எங்கிருந்து? எவ்வாறு? பெற்றுக்கொள்ளப்பட்டது தொடர்பில் எப்.சி.ஐ.டி விசாரணைகளை நடத்தி வருகின்றது.

இந்த வழக்கு தொடர்பாக டெய்ஸியின் வாக்குமூலம் ஒன்று அவசியம் என கருதிய எப்.சி.ஐ.டி. கொழும்பு பிரதான நீதிவானிடம் மனு ஒன்றை சமர்ப்பித்தது இந்த மனுவை ஆராய்ந்த நீதவான் நேற்று மேற்கண்டவாறு உத்தரவு பிறப்பித்துள்ளார்.



## உலக சாதனைத் திருமணத்தால் இலங்கையில் ஏற்பட்டுள்ள சர்ச்சை!







கொழும்பு, செப். 23

உலக சாதனை படைப்பதற்காக கண்டியில் நேற்றுமுன்தினம் நடந்த திருமணம் தற்பொழுது சர்சையில் முடிந்துள்ளது.

நேற்றுமுன்தினம் கண்டி கன்னொருவ பிரதேசத்தில் மணமகள் ஒருவரால் உலகின் நீளமான ஒசரி புடைவை அணிந்து (சிங்களவரின் முறையில் கின்னஸ் சாதனைப் பதிவாளர்கள் முன்னிலையில் சாதனை ஒன்று நிலை நாட்டப்பட்டிருந்தது.

அந்தச் சாதனை தொடர்பாக தற்பொழுது சமூக வலைத் தளங்களில் இலங்கையைச் சேர்ந்தோர் தமது ஆதங்கங்களையும் எதிர்ப்பையும் தெரிவித்து வருகின்றனர்.

இந்தச்சாதனைக்காக பாடசாலை மாணவிகளைப் பயன்படுத்தியமையே சர்ச்சைக்குரிய காரணமாக அமைந்துள்ளது.

எங்கள் குழந்தைகளை வருத்தி இப்படியொரு சாதனை புரியத்தான் வேண்டுமா? என்று ஒருவர் தனது ஆதங்கத்தைத் தெரிவித்திருந்த நிலையில் அதற்கு ஏனையோரும் தமது ஆதரவினை வழங்கியதோடு சாதனைக்கு எதிரான கருத்துக்களையும் தெரிவித்திருந்தனர்.

நண்பகல் வேளையில் கொதிக்கும் வெய்யிலின் மத்தியில், பாடசாலை மாணவிகளைப் பயன்படுத்திமேற் கொள்ளப்பட்டிருந்த சாத னையில், மத்திய மாகாண முதலமைச்சரான சரத் ஏக்க நாயக்கவும் கலந்துகொண்டமை இந்தச் சர்ச்சையை மேலும் பெருப்பித்துள்ளது.

இதற்காக அவர் தனது பெயரில் ஆரம்பித்த அலவத்துக் கொட பாடசாலையின் மாணவிகளையே இதற்காகப் பயன்படுத்தியுள்ளார்.

மேலும், இந்தச் சாதனை நிகழ்வின் போது கண்டி- கொழும்பு நெடுஞ்சாலையில் கடும் வாகன நெரிசல் ஏற்பட்டிருந்ததுடன் அவற்றைக் கட்டுப்படுத்துவதற்காக போக்குவரத்துப் பொலிஸார் கடும் பிரயத்தனப்பட்டதாகவும் இந்த எதிர்ப்புக்களிடையே சொல்லப்பட்டுள்ளது.

இவ்வாறான ஓர் எதிர்ப்பின் மத்தியில் இந்த மணப் பெண்ணால் நிகழ்த்தப்பட்ட சாதனை கின்னஸ் புத்தகத்தில் பதியப்படாமல் கை நழுவிப் போவதற்கான வாய்ப்புக்கள் காணப்படுகின்றன என்றும் தெரிவிக்கப்படுகிறது.

(க)

காலைக்கதிர் Kalaikkathir



# மஹிந்த வீட்டுக்குள் கத்தியுடன் நுழைய முயன்றவர் மறியலில்!


கொழும்பு,செப்.23

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் உத்தியோகபூர்வ இல்லத்துக்குள் கத்தியுடன் அத்துமீறி நுழைய முயற்சித்தவர்என்றுகூறப்படும்இளைஞர் எதிர்வரும் 06 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இந்த இளைஞன் நேற்று (வெள்ளிக்கிழமை) கொழும்பு பிரதான நீதிவான் மன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட போது பிரதான நீதிவான் லால் ரணசிங்க இந்த உத்தரவைப் பிறப்பித்தார்.

24 வயதுடைய இளைஞன் நேற்று முன்தினம் இரவு கூரிய ஆயுதத்துடன் முன்னாள் ஜனாதிபதியின் கொழும்பு விஜயராம மாவத்தையில் உள்ள வீட்டுக்குள்நுழையமுயற்சித்த வேளையில் கைது செய்யப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (உ)

# ஒட்டுசுட்டானில் நெற்செய்கை; யானைப் பீதியில் விவசாயிகள்



வீதியோரத்தில் யானை

முல்லைத்தீவு,செப்,23

முல்லைத்தீவு, ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட மாங்குளம் - ஒட்டுசுட்டான் வீதியில் மீண்டும் யானைகளின் அட்டகாசம் அதிகரித்து வருகிறது. நேற்றும் பிற்பகல் 3 மணியளவில் யானைகள் வீதியோரம் நடமாடித்திரிந்தன எனத் தெரிவிக்கப்படுகிறது.

இரண்டு போக நெற்செய்கையை இழந்து வறட்சி காரணமாக மிகவும் பாதிக்கப்பட்ட தாம், பல்வேறு கடன்களைப் பெற்று இந்தப்போகம் நெற்செய்கை விவசாயம் மேற்கொண்டுள்ளனர் எனவும், இம்முறையும் பல்வேறு அச்சத்தின் மத்தியில் விவசாயத்தை மேற்கொள்ளும் எமக்கு யானையால் ஏற்படும் அழிவைத் தடுக்க யானைக்கான வேலிகளை அமைத்துத் தருமாறு ஒட்டுசுட்டான் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (உ)

# விமானப்படைக் குண்டுவீச்சில் கொல்லப்பட்ட நாகர்கோவில் மாணவருக்கு நினைவஞ்சலி







நாகர்கோவில் பகுதியில் 22 ஆண்டுகளுக்கு முன்பு விமானப் படையினால் நடத்தப்பட்ட குண்டு வீச்சுத் தாக்குதலில் கொல்லப்பட்ட பாடசாலை மாணவர்களுடைய அஞ்சலி நிகழ்வு உணர்வுபூர்வமாக நேற்று இடம்பெற்றது.

1995ஆம் ஆண்டு செப்ரம்பர் மாதம் 22ஆம் திகதி நாகர்கோவில் மகா வித்தியாலத்தில் மாணவர்கள் கல்வி கற்றுக்கொண்டிருந்த போது இலங்கையின் விமானப் படை யினர் குண்டு வீச்சுத் தாக்குதலை நடத்தியிருந்தனர்.

இதன்போது அப் பாடசாலையில் கல்வி கற்ற 21 மாணவர்கள் உயிரிழந்திருந்தனர். இவ்வாறு உயிரிழந்த மாணவர்களினது 22ஆவது நினைவுதினம் நேற்று நாகர்கோவில் மகா வித்தியாலயத்தில் இடம்பெற்றது.

இந் நிகழ்வில் பாடசாலையின் மத்தியில் இம் மாணவர்களின் நினைவுத் தூபியில் பெற்றோர்களும், உறவினர்களும் மலர் அஞ்சலி செலுத்தியும் சுடரேற்றியும் அஞ்சலி செலுத்தினர்.

இம் மாணவர்களின் நினைவாக கனன் கோம்ஸ் நிறுவனத்தின் நிதி அனுசரணையில் வட மராட்சி கிழக்குப்



பிரதேச செயலக ஏற்பாட்டில் கல்வி கற்பதற்கு போதிய வசதியற்ற 50 மாணவர்கள் ஒவ்வொருக்கும் ஒரு வருடத்திற்கு 12ஆயிரம் ரூபா வீதம் வழங்க 6 லட்சம் ரூபா கையளிக்கப்பட்டது. அத்துடன் கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வும் இடம்பெற்றது.

# மரண அறிவித்தல்



## திருமதி கேசவன் மகேஸ்வரி

மீசாலை வடக்கு, மீசாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கேசவன் மகேஸ்வரி (ஓய்வுபெற்ற ஆசிரியை – விக்கினேஸ்வரா மகா வித்தியாலயம், மீசாலை) நேற்று (2017.09.22) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவப்பிரகாசம் – சின்னாச்சிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான குமாரசுவாமி – பொன்னம்மா தம்பதியினரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற குமாரசுவாமிகேசவன் (ஓய்வுபெற்ற அதிபர்) அவர்களின் அன்பு மனைவியும் சகிலா (முன்னாள் ஆசிரியை, கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி, தற்பொழுது ஆஸ்திரேலியா), சயந்தன் (சட்டத்தரணி, வடக்கு மாகாணசபை உறுப்பினர்), பிரதீபன் (முகாமையாளர் – இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் சாவகச்சேரிக் கிளை) ஆகியோரின் பாசமிகு தாயாரும், பாஸ்கரன் (பொறியியலாளர் – ஆஸ்திரேலியா), தாரணி (முன்னாள் காப்புறுதி ஆலோசகர் – இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம், சாவகச்சேரிக் கிளை) ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற அன்னலட்சுமி மற்றும் தனலட்சுமி (ஓய்வுபெற்ற ஆசிரியை), திருச்செல்வம் (ஐக்கிய ராச்சியம்), ஜெயலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான வாமதேவன், ஜெயதேவன், மகாதேவன் மற்றும் சாரதா, ராதா, மாதவன், ஜானகி, அருணாசலம், காலஞ்சென்ற பேரம்பலம் மற்றும் மஞ்சுளா ஆகியோரின் அன்பு மைத்துனியும், சாகித்தியன், சாகித்தியா, தரிணி, தர்மீகன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (2017.09.24) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக முற்பகல் 11.00 மணியளவில் வேம்பிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

A9வீதி, 299 ஆம் மைல்கல் அருகாமை,
புத்தூர்ச் சந்தி, மீசாலை வடக்கு, மீசாலை.

தகவல்:
கேசவன் சயந்தன் (சட்டத்தரணி, வடக்கு மாகாண சபை உறுப்பினர்) 077 260 2605
பிரதீபன் (முகாமையாளர் – இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம், சாவகச்சேரிக்கிளை) 077 327 6500

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 23.09.2017 இல் அச்சிடப்பட்டுவெளியிடப்பெற்றது.